Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.
30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 211 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 11, செவ்வாய் 25.06.2013

இந்தியா



பக். 06

இலங்கை இராணுவத்தினருக்கு தமிழகத்தில் பயிற்சி வேண்டாம்

உலகம்



பக். 07

நடுநிலைமை வேண்டாம்

விளையாட்டு



பக். 22

இராமநாதன் மகளிர், திருக்குடும்ப கன்னியர் மடம் வெற்றி



பக். 23

தலைக்கு ஒரு கோடி

# '13' இல் கை வைத்தால் கச்சதீவு கைமாறும்

## இடதுசாரி அமைச்சர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 25
''13'ஆவது திருத்தத்தில் காணி, பொலிஸ் அதிகாரங்களை நீக்காமல் மாகாண சபை முறைமையை மேலும் பலப்படுத்தி தமிழர்களின் உரிமையை அவர்களுக்கு வழங்க வேண்டும். அதை விடுத்து '13' இல் கைவைத்து இந்தியாவை எதிர்த்தால் கச்சதீவு பறிபோய்விடும்.''
- இவ்வாறு நேற்று அபாயச் சங்கு ஊதியுள்ளனர் '13' ஐ பாதுகாப்பதற்காக அணிதிரண்ட ஆளுந்தரப்பிலுள்ள இடதுசாரி அமைச்சர்கள்.
'13' ஆவது திருத்தத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வரும் ஆளுந்தரப்பின் இடதுசாரி அமைச்சர்களின் விசேட ஊடகவியலாளர் மாநாடு கொழும்பிலுள்ள லங்கா சமசமாஜக் கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்றது.
இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ வித்தாரண, டியூ குணசேகர, ராஜித சேனாரட்ண, ரெஜினோல்ட் குரே ஆகியோர் கலந்துகொண்டனர்.

**அமைச்சர் திஸ்ஸ விதாரண**

இதன்போது அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்ததாவது:-
போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து தமிழ் மக்களின் மனங்களை வென்று தேசிய நல்லிணக்கத்தை நாட்டில் ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதற்கான தகுந்த சந்தரப்பம் ஏற்பட்டிருக்கும் நிலையிலும், கடந்த 26 வருட காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாகாணசபை முறைமைய இல்லாதொழிக்குமாறு சிலர் வாதங்களை முன்வைக்கின்றனர்.
'13'ஆவது திருத்துக்கமைய மாகாணசபைகளுக்குப் பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கியிருந்தால் நாட்டில் பிரச்சினையே ஏற்பட்டிருக்காது. ஒரு தேசிய பொலிஸ் திணைக்களத்தின்

தொடர்ச்சி: பக்கம் 21

# பேச்சை மீண்டும் ஆரம்பிக்க தென்னாபிரிக்க அனுசரணை

## கூட்டமைப்புடன் அந்நாட்டு வெளிவிவகார பிரதி அமைச்சர் நேற்று ஆராய்வு





"தென்னாபிரிக்க அரசின் நடவடிக்கைகளுக்கு அமைவாக ஆதரவை வழங்க தயாராக உள்ளதாக கூட்டமைப்பும் தெரிவித்துள்ளது

கொழும்பு, ஜூன் 25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் பேச்சுக்களை ஆரம்பித்து, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு அனுசரணை வழங்கவுள்ளது.
''அனுசரணைக்குத் தாம் தயார் என தென்னாபிரிக்காவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் இப்ராஹிம் ஸ்மாயில் தம்மைச் சந்தித்தபோது தெரிவித்தார் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.
இலங்கை வந்துள்ள தென்னாபிரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான குழுவினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளை சினமன் ஹார்டின் விடுதியில் நேற்று சந்தித்து பேச்சு நடத்தினர்.
சந்திப்புத் தொடர்பில் சம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது:
அரசமைப்பின் '13' ஆவது திருத்தத்தை நீக்க இலங்கை அரசு மேற்கொண்டுவரும் முயற்சிகள், அதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு, தமிழர் தயாகப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு, இராணுவக் குடியேற்றங்கள் தொடர்பில் தென்னாபிரிக்க குழுவுடன் கலந்துரையாடினோம்.
இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு தாம் உதவி செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்றும், அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுகளுக்கு அனுசரணைப் பணிகளை வழங்கவும் தயார் என்றும் தென்னாபிரிக்கக் குழுவினர் உறுதியளித்தனர்.
தென்னாபிரிக்க அரசின் நடவடிக்கைகளுக்கு அமைவாக ஆதரவை வழங்க தயாராக இருப்பதாக நாமும் தெரிவித்தோம் – என்றார். அரசின் சம்மதத்துடனேயே தென்னாபிரிக்கக் குழு இந்த முயற்சியில் இறங்கியுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.
(ஐ-5)

## இராணுவ உடைமையாகும் புலிகளின் சொத்துக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 25
தமிழீழ விடுதலைப் புலிகள் பயன்படுத்திய அனைத்து சொத்துக்களையும் இராணுவ உடைமையாக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவ அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார் என்று தெரிய வருகின்றது.
தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் மாவீரர் மயானங்களாக இருந்த காணிகள், பயிற்சிக்காக பயன்படுத்திய இடங்கள், வீடுகள் என்பவற்றை அரச உடைமையாக்குவதற்கான நடவடிக்கை பாதுகாப்புச் செயலரின் உத்தரவின் பேரில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
ஏற்கனவே புலிகளுக்கு சொந்தமானது என உறுதிப்படுத்தப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள், அச்சகங்கள், வாகனங்கள், நிலையான வங்கி வைப்புகள் என்பன அரச உடைமையாக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் புலிகள் பயன்படுத்திய காணிகள், வீடுகள் என்பவற்றை இராணுவ உடைமையாக்க கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் எனத் தெரியவருகிறது. ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் கோப்பாய், கொடிகாமம், எள்ளன்குளம் மாவீரர் மயானங்களில் படையினர் முகாம் அமைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ங-5)

# இலங்கையில் இன்னமும் இன நல்லிணக்கம் இல்லை



யாழ்ப்பாணம், ஜூன் 25
இன நல்லிணக்கத்தில் இலங்கையில் இன்னமும் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று யாழ். மாவட்டத்திற்கு வருகை தந்த இலங்கைக்கான பங்களாதேஷ் தூதுவர் முஹமட் சுகிர் ரஹ்மான் தெரிவித்தார்.
நேற்றுக்காலை வந்த பங்களாதேஷ் தூதுவர் மற்றும் தூதரக பிரதிநிதிகள் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடல்களை நடத்தினர்.
முதலில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தினர். இந்தச் சந்திப்பு முடித்து பங்களாதேஷ் பிரதிநிதிகள் வெளியேறும் சந்தர்ப்பத்தில் அங்கு வந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடனும் பங்களாதேஷ் தூதுவர் சிறிது நேரம் கலந்துரையாடினார்.
அதன் பின்னர் வணிகர் [illegible] தலைமையிலான வாதத சங்கப் பிரதிநிதிகளை இந்தக் குழுவினர் நேற்று மாலை சந்தித்தனர். இந்தச் சந்திப்பின் போது பங்களாதேஷில் உற்பத்தி செய்யப்படும் மருந்து, ஆடை, உருளைக் கிழங்கு என்பவற்றை யாழ்ப்பாணத்துக்கு இறக்குமதி செய்வது தொடர்பான வாய்ப்புக்கள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.
''இலங்கையில் இன்னமும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஏற்படவில்லை. எனினும் விரைவில் நல்லிணக்கம் ஏற்படுவதற்குத் பங்களாதேஷ் வலியுறுத்தி வருகின்றது. அத்துடன் மதச் சுதந்திரமும் பாதுகாக்கப் [illegible] குரல் கொடுத்து வருகிறோம்'' –என்றார் தூதுவர். (ங-5)

## தனித்துச் செல்வது குறித்து தீவிரமாக ஆராய்கிறது ஈ.பி.டி.பி.

யாழ்ப்பாணம், ஜூன் 25
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது குறித்து ஈ.பி.டி.பி. ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.
ஈ.பி.டி.பியின் முக்கிய செயற்குழுக் கூட்டம் அந்தக் கட்சியின் அலுவலகத்தில் நேற்றையதினம் இடம்பெற்றது. இதன்போது மாகாணசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவதா அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்

தொடர்ச்சி: பக்கம் 21

## வடக்கு மாகாண பிரகடனத்தில் ஜனாதிபதி நாளை கையொப்பம்

கொழும்பு, ஜூன் 25
வடமாகாண சபையை உருவாக்கும் பிரகடனம் மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் உத்தரவுகளில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாளை கையொப்பமிடவுள்ளார். அத்துடன் வடமாகாண சபைத் தேர்தலை ஏற்கனவே திட்டமிடப்பட்டதிலிருந்து இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தொடர்ச்சி: பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின் தெரிவுக் குழுவில்


# திஸ்ஸ விதாரணவுக்கே இடமில்லை கூட்டமைப்பு எப்படிப் போக முடியும்?

கொழும்பு, ஜூன் 25
அரசியல் தீர்வுக்கான சர்வகட்சி குழுவுக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் திஸ்ஸ விதாரணவுக்கே நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அரசு இடம் கொடுக்கவில்லை. எனவே அரசின் இந்த ஒருதலைப்பட்சமான தெரிவுக் குழுவில், குறைந்தபட்ச நியாயமாவது கிடைக்கும் என்று கூட்டமைப்பு எப்படி நம்ப முடியும்?



இத்தகைய ஒரு தெரிவுக் குழுவில் இடம்பெற்றுவிட்டு சம்பந்தனும், மாவை சேனாதிராசாவும் தமிழர் பகுதிகளுக்கு எப்படி ஆடையுடுத்திக் கொண்டு போக முடியும்?
இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.
சிங்களமொழி மூல தனியார் வானொலி ஒன்றின் நேரடி அரசியல் விவாத நிகழ்ச்சியில் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன், ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிப் பொதுச் செயலாளரும், மேல்மாகாண சபையின் அமைச்சருமான உதய கம்மன் பில ஆகியோர் கலந்து கொண்டனர்.
இந்த விவாதத்தின்போது மனோ கணேசன் தெரிவித்ததாவது:
அரசு நியமித்துள்ள தெரிவுக் குழுவில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிக்கு இடம் வழங்கப்படவில்லை. இதன் மூலம் அரசு முஸ்லிம் மக்களுக்கு 'நாம் தருவதை மட்டுமே நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமே தவிர எந்தவொரு அரசியல் தீர்வையும் உங்களுக்கு வழங்க முடியாது' என்ற தெளிவான செய்தியைக் கூறியுள்ளது.
இந்த அரசின் கீழ் ஏராளமான பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன. அதிலொன்று சர்வகட்சி பேச்சுவார்த்தை. இதற்குப் பொறுப்பாக இருந்தவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண. அவர் தான் அரசுக்குள் பெயரளவிலாவது இருக்கும் அதிகாரப் பரவலாக்கல் என்ற விடயத்தின் அதிகாரபூர்வ அடையாளமாக இருந்தார். ஆனால் இன்று அவருக்கே தெரிவுக் குழுவில் இடமில்லை. இந்த லட்சணத்தில் கூட்டமைப்பு தெரிவுக் குழுவுக்கு வரவேண்டும் என்று அழைக்கிறது அரசு.
மாகாணசபை முறைமையையே முழுமையாக அழிக்க நினைக்கும் உதய கம்மன்பிலவும் இவரது கட்சியை சேர்ந்த ஏனைய அனைத்து ஹெல உறுமய மாகாண சபை உறுப்பினர்களும், முதலில் பதவிகளைத் துறந்துவிட்டு மாகாண சபைகளை ஒழிப்பது பற்றி கதைக்க வேண்டும் -என்றார். (ங-5)

## வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி மோசடி செய்தோருக்கு பிணை மறுப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 25
கனடாவுக்கு அனுப்பிவைப்பதாகக் கூறி மோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மூன்று பேருக்கு யாழ்.மேல் நீதிமன்றம் பிணை வழங்க அனுமதி மறுத்துள்ளது. தொடர்ந்தும் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
''கிளிநொச்சியைச் சேர்ந்த என்னை கனடாவுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி 10 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை சந்தேக நபர்கள் மூவரும் பெற்றனர். ஆயினும் என்னை அவர்கள் இந்தியாவுக்குத் தான் அனுப்பினார்களே தவிர கனடாவுக்கு அனுப்பாமல் மோசடி செய்துவிட்டனர்'' என்று பாதிக்கப்பட்ட நபர் வழக்குத் தொடர்ந்திருந்தார்.
மேற்படி மோசடியில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் வின்சன் டி.வோல்ட் வனிதா தேவி (வயது-61), யோசெப் அன்ரனி வில்லியம் (வயது-54), கருவாடு விற்பனையாளரான ஜோசெப் அன்ரனி பெர்ணாந்து (வயது-68) ஆகியோரே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் மீதான விளக்கமறியலை தற்போது நீடிக்கப்பட்டுள்ளது. (ங-4)

## பாஷையூர் கொலை வழக்கு சந்தேக நபருக்குப் பிணை



யாழ்ப்பாணம், ஜூன் 25
பாஷையூரில் இளைஞர் ஒருவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தில் சான்றுபெற்ற பாடசாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மாணவன் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடுக்கப்பட்டார்.
மாணவன் சார்பில் விண்ணப்பிக்கப்பட்ட பிணை விண்ணப்பத்தை பரிசீலித்த யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் எஸ். பரமராஜா பிணை அனுமதி வழங்கினார்.
கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அல்பேட் பீரிஸ் கனிஸ் தயான் (வயது-23) என்ற இளைஞரே உயிரிழந்திருந்தார். குத்துக் காயங்கள் காரணமாக ஏற்பட்ட குருதிப் பெருக்கினால் அவர் உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிய வந்தது.
அதனடிப்படையில் சந்தேக நபரான மாணவனை சான்று பெற்ற பாடசாலையில் தடுத்து வைக்க நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.
தற்போது அவரை 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 2 லட்சம் ரூபா பெறுமதியான ஆள் பிணையிலும் விடுவித்த நீதிமன்ற ஆணையாளர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குறித்த சந்தேக நபர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்றும் உத்தரவிட்டார். (ங-4)

## மாத்தளை படுகொலை ஜனாதிபதி விசாரணைக்குழு

கொழும்பு,ஜூன் 25
மாத்தளை- சமூக புதைகுழி விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்கென மூவர் அடங்கிய குழு ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைத்துள்ளார்.
இந்தக் குழுவில் முன்னாள் உயர் நீதிமன்ற நீதிபதியான எஸ்.ஐ.இமாம், நாடாளுமன்ற முன்னாள் செயலாளரான தம்மிக்க கித்துல்கொட மற்றும் மேல்நீதிமன்ற முன்னாள் நீதிபதி பந்துல அத்தபத்து ஆகியோரே அடக்கப்பட்டுள்ளனர்.
இந்தக் குழு மாத்தளை சமூகப் புதைகுழி தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு ஜனாதிபதிக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும் என தெரிவிக்கப் படுகின்றது. (ஐ-22)

## பாடசாலைச் சிறுமி தாக்கப்பட்ட சம்பவம்;

# விசாரணைகளை ஆரம்பித்தது மனித உரிமை ஆணைக்குழு

யாழ்ப்பாணம், ஜூன் 25
கொக்குவிலில் உள்ள ஆரம்பப் பிரிவு பாடசாலை ஒன்றில் 8 வயது மாணவியொருவரை ஆசிரியர் தாக்கிய சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக்கிளை விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக அதன் இணைப்பாளர் த.கனராஜ் தெரிவித்தார்.
கொக்குவிலில் உள்ள ஆரம்பப் பிரிவு பாடசாலையில் தரம் -3 இல் கல்வி பயிலும் மாணவியொருவர் கடந்த வெள்ளிக்கிழமை கணிதபாட ஆசிரியரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.
வகுப்பறையில் பயிற்சிக்காக கணக்கு ஒன்றை தவறாகச் செய்த காரணத்தால் குறித்த ஆசிரியர் மாணவியின் இரண்டு கால்களிலும் பிரம்பால் அடித்துள்ளார். இதனால் ஏற்பட்ட கண்டல் காயம் காரணமாக குறித்த மாணவி யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது. இதனையடுத்து இது தொடர்பான விசாரணைகளை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளை முன்னெடுத்துள்ளது என கனகராஜ் மேலும் தெரிவித்தார். (ஐ-5)

## தூக்கில் தொங்கிய இளைஞனின் சடலம் மீட்பு

வடமராட்சி, ஜூன் 25
வீடொன்றில் தனியாக வாழ்ந்து வந்த இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்றுச் மீட்கப்பட்டுள்ளார்.
தும்பளையைச் சேர்ந்த சாந்தலிங்கம் செல்வதீசன் (வயது-34 ) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவர்.
சடலம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இவரது இறப்புக் குறித்து பருத்தித்துறை பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம், பருத்தித்துறைப் பொலிஸார் சாட்சிகளை முன்னிலைப்படுத்த விசாரணைகளை மேற்கொண்டார்.
விசாரணையைத் தொடர்ந்து பிரேத பரிசோதனைக்கு பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (ங-8)

## தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்கப் போவதில்லை

### சம்பந்தன் அறிவிப்பு


யாழ்ப்பாணம், ஜூன் 25
'13' ஆவது திருத்தம் தொடர்பாக தெரிவுக்குழுவில் பங்கேற்கப் போவதில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.
எனினும் என்னென்ன காரணங்களுக்காக தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்க மாட்டாது என்பதை பங்காளிக்கட்சிகளுக்கு விளக்கிய பின்னர் பகிரங்கப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
ஏற்கனவே ஐ.தே.க., ஜே.வி.பி. ஆகிய கட்சிகளும் தமது நிபந்தனைகளை அரசு ஏற்காவிட்டால் தெரிவுக்குழுவில் பங்கேற்கப் போவதில்லை என்று உறுதிபடத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-5)



பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கக் கிளை ஒன்றில் சமுர்த்தி திட்டத்தின் கீழ் கர்ப்பிணிகளுக்கான போஷாக்குப் பொதிகளை வழங்கும் பணி நேற்று ஆரம்ப[illegible] சங்கத் தலைவர் பத்மநாதக் குருக்கள், முகாமையாளர் [illegible] ஆகியோர் போஷாக்குப் பொதிகளை பயனாளிளுக்கு வழங்குகின்றனர்.

# இந்தியாவுக்கு எதிராக இலங்கையை வளர்த்துக் கொள்ள விரும்பவில்லை

### இந்திய மத்திய இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்




சென்னை, ஜூன் 25
இலங்கை, சீனாவின் பக்கம் சாய்ந்து இந்தியாவுக்கு இன்னொரு பாகிஸ்தானாக மாறக் கூடும். இதனைத் தடுக்கவே இலங்கை இராணுவத்துக்கு தமிழகத்தில் பயிற்சியளிக்கின்றோம்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்திய மத்திய இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன்.
தமிழகத்தின் வெலிங்டன் இராணுவ பயிற்சி மையத்தில் இலங்கை படை அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கப்படுவதற்கு தமிழ்நாட்டில் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுவது தொடர்பில் செய்தியாளர்களுக்கு விளக்கம் அளிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கையில் 49 லட்சம் தமிழ்க் குடும்பங்கள் வாழ்கின்றன. அவர்களைக் காப்பாற்றும் பொறுப்பு இந்தியாவுக்கும் தமிழ்நாட்டுக்கும் உள்ளது. எனவே இலங்கை தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசுடன் சமரசமாகத்தான் இந்தியா செயற்பட வேண்டும்.
இலங்கைப் படை அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்க இந்தியா மறுப்பு தெரிவித்தால், அந்த அதிகாரிகளை சீனாவுக்கு அனுப்புவார்கள். அது இந்தியாவின் எதிரிகளை பலப்படுத்துவதாக அமையும். இலங்கையை நாம் புறக்கணித்தால் அது இந்தியாவுக்கு எதிராக இன்னுமொரு பாகிஸ்தானாக மாறிவிடும் - என்றார்.
குழப்பம்
இதேவேளை, காங்கிரஸ் கட்சியின் மற்றொரு மத்திய இணை அமைச்சரான ஜி.கே. வாசன், இலங்கை படை அதிகாரிகளுக்கு தமிழ்நாட்டில் பயிற்சியளிக்கக் கூடாது. இது குறித்து பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அன்ரனியிடம் கூறியுள்ளோம் என்று சுதர்சன நாச்சியப்பனுக்கு எதிராக தனது கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கச்சதீவுக்கு செல்லும் பக்தர்கள் வசதிக்காக 100 மலசலகூடங்கள்

### வடக்கின் வசந்தத்தின் கீழ் விரைவில்



யாழ்ப்பாணம், ஜூன் 25

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்துக்கு செல்லும் மக்களின் வசதி கருதி நூறு மலசலகூடங்களை அமைக்க வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ரூபா 39 லட்சத்து 60 ஆயிரம் செலவில் ஆண்களுக்கும் பெண்களுக்குமென தலா ஐம்பது மலசலகூடம் அமைக்கப்படவுள்ளன. திருவிழாக் காலத்தில் பெருமளவு யாத்திரிகர்கள் அங்கு வருவதால் மலசலகூட வசதிகள் போதுமான அளவு அமைக்க வேண்டிய தேவை உள்ளது. எனினும் மிகவும் குறைந்த அளவிலேயே மலசல கூடம் அமைக்கப்படுவதால் மக்கள் பல்வேறு சிரமங்களையும் எதிர்நோக்குகின்றனர். எனவே வடக்கின் வசந்தத்தில் இதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை நெடுந்தீவு பிரதேச சபை விரைவில் மேற்கொள்ளும் என தவிசாளர் தானியல் றெக்ஷியன் தெரிவித்தார். (வ-7)

# தேவையற்ற பயிர் அழிவுகள் மண்ணை பரிசோதிக்காததால்

## விவசாய ஆராய்ச்சி நிலையம் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூன் 25

யாழ். மாவட்ட விவசாயிகள் தாம் செய்கை பண்ணப் போகின்ற விவசாய நிலங்களில் உரிய மண் பரிசோதனைகளை மேற்கொள்ளாமல் விவசாயத்தை மேற்கொள்வதாலேயே தேவையற்ற பயிரழிவுகளைச் சந்திக்க நேரிட்டுள்ளதாக விவசாய ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

செய்கை பண்ணக் கூடிய விவசாயக் காணிகளில் உரிய மண் பரிசோதனைகள் செய்ய வேண்டியது அவசியமாகும். மண் பரிசோதனைகளை மேற்கொள்வதன் ஊடாகவே செய்கை பண்ணக் கூடிய பயிருக்கு பாவிக்க கூடிய உரங்கள் மற்றும் கிருமிநாசினிகள், நீரின் அளவு என்பவற்றைத் தீர் மானிக்க முடியும்.



ஆனால் யாழ். மாவட்ட விவசாயிகளில் பெரும்பாலானோர் தமது விவசாய நிலங்களுக்கான மண் பரிசோதனைகளை மேற்கொள்வதில்லை.

இதன் காரணமாக தமது விளை நிலங்களில் பயிரிடும் பயிர்களுக்கு அளவுக்கதிகமாக உரங்கள் மற்றும் கிருமிநாசினிகளைப் பயன்படுத்துகின்றனர். இதனால் தேவையற்ற பயிரழிவுகள் ஏற்படுவதுடன் விவசாயிகளுக்கு எதிர்பார்த்த இலாபமும் கிடைப்பதில்லை.

விவசாயிகள் முதலில் தாம் செய்கை பண்ணப்போகும் பயிரினத்தைத் தெரிவு செய்த பின்னர் விவசாய ஆராய்ச்சி அலுவலர் ஒருவரது ஆலோசனைகளைப்பெற்று குறித்த நிலத்தில் எந்தப் பகுதியில் மண்ணை அகழ்ந்து ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்பதை விளங்கிக் கொண்ட பின்னர் அவரது ஆலோசனைக்கு அமைவாக குறித்தளவு மண்ணைப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அதன் பின்னர் தாம் தெரிவு செய்த இனத்தைப் பயிரிடலாம்.

ஏனெனில் மண் பரிசோதனையின் பின்னர் குறித்த பயிரினத்தின் வளர்ச்சிக்குத் தேவையான உரங்கள், நீரின் அளவு, கிருமி நாசினிகள் என்பன தீர்மானிக்கப்பட்ட பின்னர் விவசாயிகளிடம் மண் பரிசோதனைக்கான சான்றுப் பத்திரமும் ஒப்படைக்கப்படுகிறது.

விவசாய ஆராய்ச்சி அலுவலகத்தில் உள்ள மண் பரிசோதனையாளர் இதற்கான ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்குவார். யாழ். மாவட்டத்தில் மண் பரிசோதனையின் பின்னர் விவசாயத்தை மேற்கொள்பவர்கள் மிகக் குறைவானவர்களே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14)

## 778 இலக்க பஸ் சேவையை பிற்பகலிலும் நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 25

வேலணை மத்திய கல்லூரிக்குச் செல்லும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் முடிவடைந்த பின் வீட்டுக்குச் செல்வதற்காக பி.ப. 2 மணி பஸ் சேவை இன்மையால் இம் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை, தம்பாட்டிப் பகுதியில் இருந்து ஏழை மாணவர்கள் நீண்ட தூரத்துக்கு நடந்தே செல்ல வேண்டியுள்ளதாகவும் வேலணையைச் சேர்ந்த பொது மகன் ஒருவர் தெரிவித்தார்.




778 இலக்க பஸ் சேவை மாணவர்களை காலையில் பாடசாலைக்கு ஏற்றிச் செல்கிறது. ஆனால் பிற்பகலில் குறித்த பஸ் சேவையில் ஈடுபடுவதில்லை எனவும் தெரிவித்த அவர் மாணவர்களின் சிரமத்தைப் புரிந்து கொண்டு பஸ்சேவையை காலை, மாலை இரு வேளைகளிலும் சீராக இடம்பெற சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக பல தடவைகள் முயன்ற போதும் அது நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-7)

## கோழிகளுக்கு நோய் தடை மருந்து வழங்கல்

அச்சுவேலி, ஜூன் 25

அச்சுவேலி கால்நடை வைத்திய அதிகாரி உப அலுவலகத்தில் சனிக்கிழமை தோறும் கோழிகளுக்கு ஏற்படக்கூடிய நோய்களுக்கு தடை மருந்துகள் வழங்கப்படுகின்றன.

சனிக்கிழமை காலை 7.30 மணியில் இருந்து 8.30 மணி வரை தடை மருந்துகள் வழங்கப்படுவதால் காலை 8 மணிக்கு முன்னர் பதிவு செய்து தடை மருந்துகளை உரிய நேரத்துக்குப் பெற்றுக் கொள்ளுமாறு அச்சுவேலி உப நிலைய கால் நடை வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.நர்மஜன் அறிவித்துள்ளார். (வ-11)

## தென்மராட்சி மாணவருக்கான பசும்பால் விநியோகம் நேற்று

தென்மராட்சி, ஜூன் 25

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 28 பாடசாலைகளின் மாணவர்களுக்கு பசும்பால் விநியோகிக்கும் திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் இதன் ஆரம்ப நிகழ்வு அதிபர் வே.கந்தசாமி தலைமையில் நடை பெற்றது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் முதன்மை விருந்தினராகவும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் சிறப்பு விருந்தினராகவும் சாவகச்சேரி நகர சபை எதிரணித் தலைவர் சூ.அலெக்ஸாண்டர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டு தரம் ஒன்று தொடக்கம் தரம் பதின்மூன்று வரையான மாணவர்களுக்கு பசும் பால் வழங்கி ஆரம்பித்து வைத் தனர்.



பாடசாலை மாணவர்களின் போசாக்கு நிலையை உயர்த்தவும் உள்ளூர் பால் உற்பத்தியை ஊக்குவிக்கவும் என மாணவர்களுக்கு பசும்பால் வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களுக்கு பசும்பால் விநியோகத் திட்டத்தின் தேசிய விழா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அண் மையில் அவரது கிளிநொச்சி மாவட்டத்துக்கான பயணம் செய்த போது வட்டக் கச்சி மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## நடனப் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூன் 25

அமெரிக்க தூதரகமும் திருமறைக் கலாமன்றமும் இணைந்து நடத்தும் புத்தாக்க நடனப் பயிற்சிப் பட்டறை இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் வியாழக்கிழமை வரை யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது அரங்கில் இடம்பெறவுள்ளது.

இறுதி நாளான வியாழக்கிழமை புத்தாக்க நடனப் பயிற்சியில் பங்கு கொண்ட மாணவர்களும் வளவாளர்களும் இணைந்து நடத்தும் மேடை நிகழ்வு இடம்பெறும். (வ-23)

## வடக்கராவளிக் குளத்தை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூன் 25

நெடுந்தீவு கோட்டைக் காடு பகுதியில் வடக்கராவளிக் குளம் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

18 லட்சத்து ஆயிரத்து 800 ரூபா நிதி இதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர கோட்டைக்காடு பகுதியில் சன சமூக நிலையப் புனரமைப்புக்காக 39 லட்சத்து 9 ஆயிரத்து 900 ரூபாவும், இருதய நாதர் முன்பள்ளியின் மின் இணைப்புக்காக 19 லட்சத்து 8 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கின் வசந்தத்தில் 42 திட்டங்கள் குறித்த பகுதியில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன. (வ-7)

## சிதைந்து மோசமாகக் காணப்படும் யாழ்.இராசாவின்தோட்டம் வீதி

### பயணிப்போர் பெரும் சிரமம்

கொழும்புத்துறை, ஜூன் 25

யாழ்.இராசாவின் தோட்ட வீதி நீண்டகாலமாக கவனிப்பாரின்றி சிதைவுகளுடன் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

வீதியின் பெரும்பாலான இடங்கள் சேதமடைந்துள்ளமையால் வாகனங்கள் மற்றும் சைக்கிள்களில் பயணிப்போர் பல சிரமங்களையும் விபத்துக்கள் ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் எதிர்நோக்கி வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.



இந்த வீதியூடான போக்குவரத்து பெரும்பாலும் வீதியின் கரையோரமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

யாழ்.நகரின் பல்வேறு வீதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் நிலையில் நகரை அண்டிய பகுதியில் மக்கள் பாவனை மிகுந்த இந்த வீதியை எவருமே கண்டு [illegible] தெரிவிக்கின்றனர். (ஒ-135)

## வீதிகளைப் புனரமைக்கவும் மாணவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 25

வலி.கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட புத்தூர் கிழக்கு குருநாதர் கிராமத்துக்குச் செல்லும் இரு வீதிகளையும் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மாணவர்கள் வலி.கிழக்குப் பிரதேச சபையினரைக் கோரியுள்ளனர்.

குருநகர் கிராமத்திலிருந்து பிரதான வீதிக்குச் செல்லும் சுமார் மூன்றரை கிலோ மீற்றர் நீளமான குமாரசாமி வீதி, பெரிய தம்பிரான் வீதி ஆகியவை நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளது.

மழை காலங்களில் வீதிகளில் நீண்ட தூரத்திலும் வெள்ளம் தேங்கி நிற்பதால் பாதணிகளைக் கையில் தூக்கிச் செல்லும் அவல நிலை ஏற்படுகிறது.

மாணவர்களாகிய நாம் இந்த வீதிகளில் செல்லும் வேளைகளில் சொல்லொணாத துயரங்களை அனுபவிப்பதால் இந்த வீதிகளைத் தார் வீதியாகச் செப்பனிட்டுத் தருமாறு நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கையொப்பமிட்டுக் கடிதம் அனுப்பியுள்ளனர். (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 ஆம் ஆண்டில் நினைவு கூருகிறோம்



அமரர்
வேலாயுதபிள்ளை
செல்வரட்ணம்
[பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்]
திதி: 25.06.2013

மலர்வு
25*02*1935
உதிர்வு
30*06*1991

அப்பா நீங்கள் எங்களை விட்டுச் சென்று
ஆண்டுகள் இருபத்து இரண்டு போனாலும்
இன்னும் நாங்கள் உங்கள்
இனிய நினைவுகளுடன் வாழ்கின்றோம்.

புகையிரத நிலைய பக்கம், எழுதுமட்டுவாழ்,
த. முகவரி: காளி கோயிலடி, திருநெல்வேலி.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள்.

(38633) (2.6.3)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
30.05.1929

உதிர்வு
25.06.2009

அமரர்
R.R.அப்பாத்துரை (R.R.A)
(ஓய்வுபெற்ற ஆசிரியர் - நயினை)
திதி: 11.07.2013

பல்துறையில் பல் புகழை பெற்று
பாசத்தின் உறைவிடமாய் விளங்கி
ஊர் போற்றும் நல்லாசானாகத் திகழ்ந்து
மனையாள் நன் மக்களோடு
உவகையுடன் வாழ்ந்து-இன்று
நான்காண்டுகள் ஓடிவிட்டதே

உங்கள் ஆத்மா சாந்தி அடைய
நயினை நாகபூஷணி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில். குடும்பத்தினர்.

(38643) (10,7,16)

# ஈராண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
05.02.1945

இறைவன் அடியில்
18.06.2011

அமரர் சிந்தாமணி
தம்பாப்பிள்ளை

அம்மா எங்கள் தாயே!
உங்கள் வாழ்வே எங்கள் -வாழ்வென
எண்ணியிருந்தோம் நீங்கள் என்றும்
எங்களுடன் நிறைந்திருக்கின்றீர்கள்
ஐயாவையும் உங்களுடன் அழைத்து
தெய்வத்துள் தெய்வமாகி விட்டீர்கள்
ஈராண்டு சென்றாலும் ஆறாத்துயரில் துடிக்கின்றோம்
மீண்டும் உங்களைக் காணத் தவிக்கின்றோம்
உங்கள் நல்லாசி என்றும் எமக்கு வேண்டுமம்மா
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நீங்கா நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிந்தாமணி பவனம்
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.

(38636) (3.6.7.11)

# பணியாளர்கள் தேவை

நல்லூர் பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள உயர்தர சைவ உணவகம் ஒன்றுக்கு கீழ் குறிப்பிடும் வேலையாள்கள் தேவை.

1. காசாளர்
2. பரிமாறுவோர்கள்
3. சமையலாளர்கள் (இருபாலாரும்)
4. சமையல் உதவியாளர்கள் (இருபாலாரும்)
5. சுத்திகரிப்பாளர் (இருபாலாரும்)
6. தேனீர் மற்றும் பழச்சாறு (Juice) தயாரிப்பாளர்கள்

விண்ணப்பிக்க விரும்புவோர் அனுபவம் தொடர்பான சான்றுப்பத்திரம் மற்றும் கிராம அலுவலரின் நற்சான்று பத்திரம் என்பனவற்றுடன் யாழ் பூட் பிறைவேற் லிமிட்டெட், ஊரெழு கிழக்கு, ஊரெழு என்னும் முகவரிக்கு (25.06.2013) தொடக்கம் (30.06.2013) வரை காலை 9.00 தொடக்கம் 11.00 மணி வரை நேரில் சமூகம் தரவும், சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

முகாமைப்பணிப்பாளர்,
யாழ் பூட் பிறைவேற் லிமிட்டெட்,
250, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
077886 6614, 021 2240875

(C/9996) (10,7,16)

## கரைதுறைப்பற்று பிரதேச செயலர் திடீரென இடமாற்றப்பட்டார்

முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலராகக் கடமையாற்றி வந்த பொ.குகநாதன் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் முல்லைத்தீவு அரச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதுகுறித்து பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அபயக்கோன் கையொப்பமிட்டு குறித்த பணிப்புக் கடிதத்தை குகநாதனுக்கு அனுப்பி வைத்துள்ளார். அதில் குகநாதனுக்கு எதிராகக் கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் புலன் விசாரணைகள் முடியும் வரை தற்காலிகமாக உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் தாங்கள் முல்லைத்தீவு அரச செயலகத்துக்கு இடமாற்றப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் யாழ்.மாவட்ட முன்னாள் உதவித் தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றி பின்னர் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## யாழ். நகர் வெதுப்பகம் மீது நேற்றிரவு தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் பஸ்ரியன் சந்திப் பகுதியில் அமைந்துள்ள வெதுப்பகம் ஒன்றின் முன்பக்க கண்ணாடிகளை இனந் தெரியாத நபர்கள் அடித்து நொருக்கியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று இரவு 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே கடையைச் சேதப்படுத்தி விட்டு தப்பிச் சென்றனர் என உரிமையாளர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ-23)

## மாணவனைக் காணோம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

புத்தூரைச் சேர்ந்த 15 வயது மாணவன் ஒருவனைக் கடந்த 6 தினங்களாக காணவில்லை என்று அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தூர் மேற்கைச் சேர்ந்த கவிதாசன் ரிமார்தன் என்ற மாணவனேஇவ்வாறு காணமற்போயுள்ளார்.

"கடந்த 19 ஆம் திகதி நண்பர்களுடன் செல்வதாகக் கூறி வீட்டிலிருந்து புறப்பட்ட பின்னர், எனது மகனைப் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை. இதனால் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளோம் என்று அவரது தாயார் தெரிவித்தார். (ஙு-5)

உதயன்
விளம்பரங்களுக்கு
adv@uthayan.com
0215671111

# வீடு விற்பனைக்கு

சுழிபுரம் பத்திரகாளி கோயில் வடக்கு வீதியில் உள்ள நிலப்பரப்பு 2 குளி 10¾ அளவு கொண்ட கிணற்றுடன் கூடிய 4 அறைகள் உடைய வீடு விற்பனைக்கு உண்டு.

தொ.பே:- 0776630450

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி நயனவதி குகராஜ் அவர்களின் பாசமிகு தந்தை

செல்லப்பா பத்மநாதன்

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/நாவற்குழி ம.வித்தியாலயம், கைதடி.

(38648) (10,7,16)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சின்னையா கனகரத்தினம்



தோற்றம்
10
03
1935

மறைவு
06
07
2012

திதி: திருதியை

எத்தனை உறவுகள் எம்முடன் இருந்தாலும்
எம் தெய்வமே உங்களுக்கு இணையாகுமா
என்றும் உங்கள் நினைவு எம்மை வாட்டுகிறது
எமக்கு அறிவை ஊட்டி அன்பாக அரவணைத்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி வகுத்தீர்கள்
எம் அன்புத் தெய்வமே என்றும்
உங்கள் நினைவு எம்மைவிட்டு அகலாது

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# தவறிவிட்டது

நந்தசாமி சுபந்தினி என்பவருடைய தே.அ.அட்டை (777943430v) நல்லைநீர்நிலையத்துக்கும் நாவடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அரசடி வீதி, சுதுமலை கிழக்கு,
மானிப்பாய்.

(38684) (3.6.7.11)

# விற்பனைக்கு

D80 நிக்கன் கமரா
28-80 நிக்கன் லென்ஸ்
கமரா BAG - USB CABLE
BATTERY + CHARGER
தொடர்பு: 0779745008
அரியாலை.

(சி/9995) (10,7,16)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்
11.05.1958

மறைவு
26.05.2013

அமரர்
கிருஸ்ணகலாநிதி நாகேந்திரநாதன்
(முன்னாள் கிராம சேவகர் J/106)

கடந்த 26.05.2013 சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி கிருஷ்ணகலாநிதி நாகேந்திரநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (25.06.2013) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்.
077 986 0613
077 072 5322

(38637) (5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித திருமுழுக்கு யோவான் ஆலய ஜூபிலி விழா



சுண்டுக்குளி, ஜூன் 25
யாழ்.ஆஸ்பத்திரி வீதி சுண்டுக்குளி புனிததிருமுழுக்குயோவான் ஆலய 125 ஆவது வருட ஜூபிலி நிறைவுப் பெருவிழா நேற்று சிறப்பாக நடைபெற்றது.

திருவிழாத் திருப்பலியை காலை 6.15 மணிக்கு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகைஆகியோர் இணைந்து நிறைவேற்றினர்.

இவர்களுடன் அமலமரித் தியாகிகள் சபையின் மாகாணத் தலைவர் அருட்திரு போல் நட்சேத்திரம் அடிகள், அருட்திரு லூயிஸ் பொன்னையா அடிகள் ஆகியோரும் கூட்டுத் திருப்பலியினர் இணைந்து கொண்டனர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள், அருட்சகோரர்கள், அருட் சகோதரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாலை திருச்சொரூபபவனி இடம்பெற்றது. (ஒ-51-135)

# பயிர்ச் சிகிச்சைக்கான நடமாடும் முகாம்கள்

### ஜூலை 2 இல் ஆரம்பம்

அச்சுவேலி, ஜூன் 25
யாழ். மாவட்டத்தில் கமநல சேவை நிலையப் பிரிவுகளை உள்ளடக்கி நடமாடும் ''பயிர்ச் சிகிச்சை முகாம்கள்'' நடத்தப் படவுள்ளன. ஜூலை 2 ஆம் திகதி முதலாவது முகாம் ஆரம்பிக்கப்படவுள்ளது. விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை தொடர்பான சந்தேகங்கள் மற்றும் பயிர் நோய்களுக்கான சிகிச்சை முறைகளைஇங்குதெரிந்துகொள்ளலாம். பயிர்ச் சிகிச்சை முகாமில் துறைசார் நிபுணர்கள் மற்றும் தாவர வைத்தியர்கள் கலந்து கொண்டு பயிர்ச் சிகிச்சை அளிக்கவுள்ளனர் என யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப்பணிப்பாளர்கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்ட விவசாயிகள் பயிர்ச் செய்கை முறைகளில் மற்றும் பயிர் நோய்த் தாக்கங்களில் எதிர்கொள்ளும் பாதிப்புக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் பெரும்பாலான கமநல சேவை நிலைய பிராந்திய ரீதியில் பயிர்ச் சிகிச்சை முகாம்கள் நடத்தப்படவுள்ளன. கடந்த காலங்களில் இத்தகைய முகாம்கள் நடத்தப்படவில்லை.

> பயிர்ச் சிகிச்சை முகாம்களில் துறைசார் நிலையில் தாவர வைத்தியர்கள் கலந்து கொண்டு சிகிச்சை அளிக்கவுள்ளனர்.

பயிர்ச் சிகிச்சை முகாம் செயற்றிட்டம் அடுத்த மாதம் ஜூலை 2 ஆம் திகதியில் இருந்து நடைபெறவுள்ளன. பயிர்ச் சிகிச்சை முகாம்களில் துறைசார் நிலையில் தாவர வைத்தியர்கள் கலந்து கொண்டு சிகிச்சை அளிக்கவுள்ளனர். பயிர்ச்சிகிச்சை நடைபெறவுள்ள இடம், திகதி தொடர்பாகவும் விவசாயிகள் தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் மற்றும் பயிர்நோய் சிகிச்சை பெறுவதற்கு வரும்போது எடுத்து வரவேண்டியவை தொடர்பாகவும் பொருத்தமான முறையில் அறிவித்தல்கள் விடுக்கப்படுவதுடன் ஒலிபெருக்கி மூலமும் பிரசித்தப்படுத்தப்படும்.

பயிர்ச் சிகிச்சை முகாமில் பயிர்ச் செய்கை நடவடிக்கைக்கு மண் வளம் பொருத்தமானதா? மண்ணுக்கும் பயிர் இனங்களுக்குமான தொடர்புகள் மற்றும் மண்ணில் உள்ள உள்ளீடுகள் தொடர்பாகவும் மண் வகை ஆய்வு செய்யப்பட்டு விளக்கங்கள், ஆய்வறிக்கைகள் வழங்கப்படவுள்ளன.

ஜூலை 2 ஆம் திகதி புத்தூர் பெரும்பாகம், உடுவில் பெரும்பாகம், உரும்பிராய் பெரும்பாகம் ஆகியவற்றை உள்ளடக்கி பயிர்ச் சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளது. விவசாயிகள் இந்த முகாமில் கலந்து கொண்டு தமது பயிர்களுக்கு ஏற்பட்ட தாக்கம் மற்றும் நோய்க்கான சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளலாம்-என்றார். (வ-11)

# பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வைப் பெற்றுத்தர செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை முன்னிற்கும்

### தலைவர் பாலகிருஷ்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25
பொது மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிற்குத் தீர்வைக் காணக் கூடியதான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி வைக்கக் கூடியதான திட்டங்கள் ஊடாக ஒரு புதிய மாற்றத்தைஏற்படுத்த இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை முன்னிற்கும் எனயாழ்.கிளைத் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் எதிர்கால திட்டம் குறித்து ஊடகவியலாளர்களுடனான சந்திப்பு நேற்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை அலுவலகத்தில் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது பாலகிருஷ்ணன் தெரிவித்ததாவது:-

எமது யாழ்ப்பாண கலாசாரத்தில் இப்போது பெரிய மாறுதல்களைக் காண முடிகின்றது. எமது பாரம்பரியத்துக்கு முரணான சம்பவங்கள் பல இடம்பெறுகின்றன. சமூகச் சீரழிவுகள், சுகாதார வசதிக் குறைவுகள், மருத்துவ வசதியின்மை சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்பாத நிலை, கல்விவீழ்ச்சி போன்ற சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. சண்டிலிப்பாய் பிரதேசத்தில் இந்த நிலைமைகள் மோசமாக உள்ளன. இவற்றைக் களைந்து ஒரு நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் பொறுப்பு உண்டு. இதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நாங்கள் நடத்தவுள்ளோம்.




அத்துடன் வாழ்வாதார உதவிகள் கல்விக்கான ஊக்குவிப்புக்களையும் முன்னெடுக்கவுள்ளோம். வெளிநாடுகளினதும் ஏனைய அமைப்புக்களினதும் உதவிகளைப் பெற்று ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். சங்கம் பெயரளவில் இயங்காது. எமக்குரிய பதவிப் பொறுப்புக்கள் தகுதிகளினூடாக நாம் ஏற்ற பொறுப்புகளை பயன்படுத்தி எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்கு முடிந்தவரை சிறந்த திட்டங்களினூடாக உதவத் தீர்மானித்துள்ளோம். - என்றார். (எ-7-86)

## வர்த்தகருடன் நேரடியாக சந்திப்பில் ஈடுபடவுள்ள மத்திய வங்கி அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25
குடாநாட்டு வர்த்தகர்கள் தமது தற்போதைய நிதி நெருக்கடியிலிருந்து எவ்வாறு மீள முடியும் என்பது தொடர்பாக இலங்கை மத்தியவங்கி அதிகாரிகள் வர்த்தகர்களை நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இதற்கமைவாக நாளை மறுதினம் சாவகச்சேரி வர்த்தகர்களையும் எதிர்வரும் 28 ஆம் திகதி கொடிகாமம் வர்த்தகர்களையும் , எதிர்வரும் 29 ஆம் திகதி சங்கானை வர்த்தகர்களையும் சந்திக்கவுள்ளனர்.

குறித்த தினங்களில் தினமும் 3 மணிக்கு அந்தந்தப் பகுதி வர்த்தக சங்கங்களின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெற வுள்ளதால் அனைத்து வர்த்தகர்களையும் குறிப்பிட்ட கலந்துரை யாடல்களில் பங்குபற்றுமாறு யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (வ-14)

## உருளைக்கிழங்கு, வெங்காயம் அழுகிய நிலையில் கடைகளில்

### மக்கள் விசனம்

குருநகர், ஜூன் 25
யாழ். நகரிலுள்ள சில தனியார் கடைகளில் உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் ஆகியவை அழுகிய நிலையில் காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகியவை தனித்தனியாக குவிக்கப்பட்டு அவற்றை நுகர்வோரை தெரிவு செய்து வாங்கும் பொறுப்பும் கடை உரிமையாளரால் விடப்பட்டுள்ள போதும் அழுகியவற்றை அகற்றாமலேயே விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பாக சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற்கொண்டு அழுகிய நிலையில் காணப்படும் பொருள்களை அகற்றி நல்ல நிலையில் உள்ள பொருள்களை விற்பனை செய்ய ஆவன செய்யுமாறு கேட்டுள்ளனர்.



இந்தப் பொருள்களின் விலை அதிகரித்துச் செல்வதால் கடைக்காரர் அழுகியவற்றையும் விற்பனை செய்ய முயற்சிக்கக் கூடும் என மக்கள் ஊகம் தெரிவிக்கின்றனர். (எ-51)

# தகுதி அடிப்படையில் முன்னுரிமையளித்து இளைஞருக்கு வேலைவாய்ப்பு வழங்குக

### அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கிளி.அரச அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 25
தகுதியின் அடிப்படையில் இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்பை வழங்குவதற்கு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும். இதனூடாக வேலை வாய்ப்பற்று தகுதியுடன் உள்ள இளைஞர்களது எதிர்காலம் நன்மையடையும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மனித வள வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு தொடர்பான கருத்தரங்கு நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் மேலும் தெரிவித்ததாவது:-

பெரும்பாலான இளைஞர்கள் அரச வேலை வாய்ப்பையே எதிர்பார்க்கின்றனர்.

இதன் நோக்கம் பிற்காலத்தில் வேலையில் இருந்து ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் தமக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பே.

எனினும் இளைஞர்கள் தகுதியும் இருந்தும் தொழில் வாய்ப்பைப் பெற முடியாத நிலையில் உள்ளனர். இத்தகையவர்களை இனங்கண்டு தொழில்வாய்ப்பை வழங்க அரச மற்றும் சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

இதன் ஒரு முயற்சியாக மனித வள வேலை வாய்ப்புத் திணைக்களம் கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் முறையாக முன்னெடுக்கும் திட்டம் பாராட்டக் கூடியது. கிளிநொச்சி மாவட்ட இளைஞர்களுக்கு இந்தச் செயற்றிட்டம் பயனளிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது-என்றார்.

குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் பெருமளவான இளைஞர்களும், மனிதவள வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (வ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
25/06/2013

# நான் வாய் திறந்தால் பலர் பதவிக்கு ஆபத்து

## மிரட்டுகிறார் பீகார் முதலமைச்சர்

பாட்னா, ஜூன் 25

நான் எல்லாவற்றையும் சொல்ல முடிவு செய்தால் பா.ஜ.கவில் பல தலைவர்கள் பிரச்சினைகளில் சிக்க நேரிடும் என்று மிரட்டியுள்ளார் பிகார் முதலமைச்சர் நிதீஷ்குமார்.


நேற்று பட்னா சென்றிருந்த பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத் சிங் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போது ''ஐக்கிய ஜனதா தளம் அரசியலில் இருந்த அழிக்கப்படும்'' என்று கடுமையாகச் சாடியிருந்தார்.



அதுகுறித்துக் கருத்துக் கூறும் போதே நிதீஷ்குமார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

''நான் வாயைத் திறக்க முடிவு செய்தால், பா.ஜ.கவில் பல தலைவர்களுக்கு பலவிதமான சிக்கல்கள் வரும். பேசும் போது அவர்கள் அதை நினைவுபடுத்திக் கொண்டே பேச வேண்டும்'' என்று கடும் தொனியில் மிரட்டியுள்ளார் நிதீஷ்.

17 வருடங்களாக கூட்டணி அமைத்திருந்த ஜக்கிய ஜனதா தளம் மற்றும் பாரதிய ஜனதா ஆகிய இரு கட்சிகளும் அண்மையில்தான் கூட்டணியில் இருந்து பிரிந்துள்ளன. (ற)



இந்தியாவின் வடமாகாணங்களில் பெய்து வரும் கடும் மழையை அடுத்து அங்கு வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றது. தொடரும் மழையில், கடும் சிரமங்களுக்கு மத்தியில் மீட்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், இந்த அனர்த்தங்களில் 5 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

# காஷ்மீரில் கடுமையான பாதுகாப்பு

ஸ்ரீநகர், ஜூன் 25

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இன்று காஷ்மீர் செல்வதை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான பாதுகாப்புத் தரப்பினர் அங்கு வீதிகள் தோறும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.(ற)

# இந்தியாவில் ஜோன் கெர்ரி

புதுடில்லி, ஜூன் 25

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி மூன்று நாள் பயணமாக நேற்றுமுன்தினம் இந்தியா வந்துள்ளார்.

அவருடன், அமெரிக்க எரிசக்தித் துறை செயலர், நாசா அமைப்பின் இயக்குநர், பசிபிக் பிராந்தியத்துக்கான அமெரிக்க இராணுவத் தலைவர் அட்மிரல் சாமுவேல் லாக்லியர் மற்றும் அமெரிக்க வெளியுறவு மற்றும் உள்நாட்டுப் பாதுகாப்புத் துறைகளின் மூத்த அதிகாரிகளும் இந்தியா வந்துள்ளனர்.

இவர்கள் இந்திய – அமெரிக்க இராஜதந்திப் பேச்சுகளின் நான்காவது சுற்றில் கலந்து கொள்ளவுள்ளனர். இந்தப் பேச்சுகளின்போது இருதரப்பு வர்த்தகம், பாதுகாப்பு, பாதுகாப்பு ஒத்துழைப்பு, எரிசக்தி மற்றும் உயர்கல்வி ஆகிய துறைகள் குறித்து கலந்து ரையாடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# மீட்புப் பணிகளை குறைத்து கூற வேண்டாம்

புதுடில்லி, ஜூன் 25

உத்தரக்காண்டில் வெள்ளத்தில் சிக்கிய மக்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களின் பணிகளைக் குறைத்து மதிப்பிட வேண்டாம் என்று மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மத்திய தொழில் பாதுகாப்புப் படையின் நான்காவது பட்டாலியனை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி காரைக்குடி அருகேயுள்ள அமராவதி புதூரில் நடைபெற்றது. இதில் பங்கேற்றுப் பேசியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

இயற்கைப் பேரழிவுகளை தடுக்க நம்மால் முடியாது என்று கூறிய ப.சிதம்பரம், ஆனால், இயற்கை பேரழிவுக்கு பின்னர் சுழற்சி முறையில் இராணுவத்தினர் மீட்புப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் கூறினார்.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் இராணுவ வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருவதை சுட்டிக்காட்டியுள்ள ப.சிதம்பரம், இராணுவத்தினரின் மீட்பு நடவடிக்கைகளை ஊடகங்கள் குறை கூறக்கூடாது என்றும் தெரிவித்தார்.

வெள்ளப் பெருக்கில் சிக்கியவர்களை மீட்கும் ஒருங்கிணைப்புப் பணிகளில் பின்னடைவு ஏற்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன. அதற்கு பதிலளிக்கும் வகையிலேயே ப.சிதம்பரம் இந்தக் கருத்தினை தெரிவித்துள்ளார். (ற)



# இலங்கை இராணுவத்தினருக்கு தமிழகத்தில் பயிற்சி வேண்டாம்

## வலியுறுத்துகின்றார் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன்

சென்னை, ஜூன் 25

இலங்கை இராணுவத்தினருக்கு தமிழகத்தில் பயிற்சிகள் வழங்குவதை நிறுத்த வேண்டும் என்று மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று உளுந்தூர்பேட்டையில் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே ஜி.கே.வாசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் இதுகுறித்துக் கருத்து வெளியிடும் போது,

''இலங்கை இராணுவத்தினருக்கு தமிழகத்தில் பயிற்சிகள் வழங்கக் கூடாது என்பதில் எங்களுக்கும் மாற்றுக் கருத்து இல்லை. அவர்களை தமிழகத்தில் இருந்து வெளியேற்ற வேண்டும். இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனியிடம் வலியுறுத்தியுள்ளோம். இதுகுறித்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிகின்றது. தமிழக மக்களின் பிரச்சினைகளை இந்திய மத்திய அரசு உன்னிப்பாக அவதானித்து வருகின்றது.'' என்று தெரிவித்தார்.(ற)



# கேதர்நாத் தலத்தை சீரமைக்க நாம் தயார்

## குஜராத் முதலமைச்சர் மோடி அறிவிப்பு

டேராடூன், ஜூன் 25

மழை வெள்ளத்தால் சேதம் அடைந்த கேதர்நாத்தை சீரமைக்கும் பொறுப்பை ஏற்கத் தயார் என்று குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் உத்தரகாசி, சமோலி உள்பட 3 மாவட்டங்களில் கடந்த வாரம் தொடர்ந்து 3 நாள்களாக பலத்த மழை பெய்தது. அதில் கேதர்நாத் பகுதி வரலாறு காணாத சேதம் அடைந்ததுள்ளது. அந்தப் பகுதியை குஜராத் மாநில முதலமைச்சரும், பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் பிரசார குழு தலைவருமான நரேந்திரமோடி விமானத்திருந்தவாறு பார்வையிட்டார்.


ஹறித் துவாரில் அமைக்கப்பட்டுள்ள குஜராத் மாநில அரசின் நிவாரண முகாமையும் அவர் ஆய்வு செய்தார்.

கேதர்நாத் வெள்ளத்தில் சிக்கிய குஜராத் மாநிலத்தை சேர்ந்த பக்தர்களை பத்திரமாக மீட்டு சொந்த ஊருக்கு திரும்புவதற்குரிய ஏற்பாடுகளையும் செய்த அவர், உத்தரகாண்ட் மாநில முதலமைச்சர் விஜய் பகுகுணாவை சந்தித்து மீட்பு நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு குறித்த ஆலோசனைகள் வழங்கினார்.

### சீரமைக்க தயார்

வெள்ளத்தில் சேதம் அடைந்த கேதர்நாத் கோவிலை மாநில அரசும், கோவில் நிர்வாகமும் இணைந்து புதுப்பிக்க வேண்டும் என்றும் வளாகப் பகுதிகள் குஜராத் மாநிலம் சார்பில் சீரமைக்கப்படும் என்றும் பகுகுணாவிடம் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

உத்தரகாண்டில் ஏற்பட்டுள்ள பேரழிவுகளை சீரமைக்கும் திறன் தங்களிடம் உள்ளதாகவும் மனிதசக்தி, பொருள்கள் மற்றும் எந்திரங்களை வழங்கவும் கேதர்நாத்தை சீரமைக்கும் பொறுப்பை ஏற்கத் தயார் என்றும் அவர் உறுதி அளித்தார். (ற)



# ஆளில்லா விமானம் மூலம் கண்காணிப்பு

## முக்கிய நகரங்களில் நடைமுறைப்படுத்தத் திட்டம்

புதுடில்லி, ஜூன் 25

முக்கிய நகரங்களை ஆளில்லா விமானங்கள் மூலம் கண்காணிப்பதற்கு இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் திட்டமிட்டு வருகின்றது.

பாதுகாப்பான நகரம் என்ற திட்டத்தின் கீழ் முக்கிய நகரங்களில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், பெரிய நகரங்களின் பாதுகாப்பு ஆளில்லா விமானங்கள் மூலமும், ஹெறாலிகொப்டர் சிறப்புப் படையினர் மூலமும் பேணப்படும். ஆளில்லா விமானங்களில் பொருத்தப்பட்ட நவீன கமராக்கள் மூலம் 24 மணி நேரமும் நகரங்கள் கண்காணிக்கப்படும். அதன் மூலம் பெறப்படும் தகவல்கள் குற்றங்களை தடுக்கவும் குற்றம் நிகழ்ந்த பின்னர் அதன் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு உதவும் வகையிலும் பயன்படுத்தப்படும் என்று கூறப்படுகின்றது. (ற)

# போர் விமானம் விபத்து


போர்பந்தர், ஜூன் 25

குஜராத் மாநிலத்தில் போர் விமானம் ஒன்று பயிற்சியின்போது விழுந்து விபத்திற்குள்ளானது.


குஜராத் மாநிலம் ஜாம்நகர் அருகே கம்பாடியா விமான தளத்தில் இருந்து பறப்பை மேற்கொண்ட மிக்-29 ரக போர் விமானமே விபத்துக்குள்ளானது.

பயிற்சியின்போது விமானி கட்டுப்பாட்டை இழந்ததால் விமானம் போர்பந்தரை அடுத்த லால்பர்தா கிராமத்திற்குள் கீழே விழுந்து நொறுங்கி விபத்திற்குள்ளானது.

அதில் எவருக்கும் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை என்று தெரியவருகின்றது. விமானியும் காயமின்றி விமானத்தில் இருந்து குதித்து உயிர் தப்பியுள்ளார். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சீனர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

### பாகிஸ்தானிடம் கோரிக்கை

பீஜிங், ஜூன் 25
பாகிஸ்தானில் பணியாற்றும் தமது நாட்டு பிரஜைகளின் பாதுகாப்பை அந்த நாடு உறுதிப்படுத்த வேண்டும் என்று சீனா வலியுறுத்தியுள்ளது.
பாகிஸ்தானின் வடபகுதியில் ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் சீன நாட்டு பிரஜைகள் மூவர் உயிரிழந்ததை அடுத்தே சீனா இவ்வாறு வலியுறுத்தியுள்ளது.
நங்கா பார்பாட் என்ற குறித்த பகுதியில் தலிபான் ஆயுததாரிகள் நடத்திய இந்த தாக்குதலில் 9 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் உட்பட 10 பேர் உயிரிழந்திருந்தனர்.
குறித்த பிராந்தியத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்கு வைத்து முதல் முறையாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், இவ்வாறான தாக்குதல்கள் தொடரும் எனவும் தலிபான்கள் எச்சரித்துள்ளனர். (ற)



கனடாவின் அல்பர்ட்டா மாகாணம் கல்கரி நகரில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, சுமார் 1 லட்சம் பேர் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். கடும் மழை காரணமாக இந்த தெற்கு அல்பர்ட்டா நகரில் ஓடும் இரு ஆறுகளின் நீர்மட்டமும் அபாயகரமான அளவில் உயர்ந்துள்ளதை அடுத்தே வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. தற்போது மீட்பு நடவடிக்கைகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. (ற)

# எதுவும் நடக்கலாம்

### மண்டேலாவின் உடல் நிலை குறித்து வைத்தியர்கள் கருத்து

ஜோகன்னாஸ்பேர்க், ஜூன் 25
தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



94 வயதுடைய நெல்சன் மண்டேலாவின் உடற்பாகங்கள் சில செயழிழந்துள்ள நிலையில் அவருக்கு் மருத்துவ சிகிச்சைகள் இனிமேல் பயன்தரப்போவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.
இதுகுறித்து மண்டேலாவின் குடும்பத்தினருடன் ஆலோசித்து வருவதாகத் தெரிவித்துள்ள மருத்துவர்கள் குழு எந்த நேரத்திலும் எதுவும் நடக்ககூடும் என்றும் தெரிவித்துள்ளது.
அவருக்கு வழங்கப்படும் சிகிச்சைகளை நிறுத்துவது குறித்து அவரது குடுத்தினருடன் ஆலோசிக்கப்படுகின்றது என்றும் மேலும் அவர்கள் தெரிவித்தனர். (ற)

# நடுநிலைமை வேண்டாம்

### ஈரான் விடயத்தில் உறுதியாக முடிவெடுக்க வேண்டும் இந்தியா: வலியுறுத்துகின்றார் இஸ்ரேல் ஜனாதிபதி ஷிமோன் பெரஸ்

ஜெருசலேம், ஜூன் 25
ஈரான் விவகாரத்தில் இந்தியா நடுநிலைமை வகிக்கக் கூடாது என்று இஸ்ரேல் ஜனாதிபதி ஷிமோன் பெரஸ் வலியுறுத்தி உள்ளார்.
''மத்திய கிழக்குப் பகுதியில் ஆதிக்கம் செலுத்த ஈரான் முற்படுகின்றது. அனைத்து நாடுகளுக்கும் எதிராக ஈரானின் செயற்பாடு மாறியுள்ளது.
இந்த விவகாரத்தில் இந்




தியா நடுநிலைமை வகிக்கக் கூடாது. இதுகுறித்து இந்தியா உறுதியான நிலைப் பாட்டை எடுக்க வேண்டும்.'' என்று தெரிவித்தார்.
பலஸ்தீனப் பிரச்சினை குறித்துக் குறிப்பிடுகையில்,
''பலஸ்தீன பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியது அவசியமாகும். இரு நாடுகளை அமைப்பது தான் அதற்கு தீர்வாகும். எதிரிகள் போல் இல்லாமல் இரு நாடுகளும் நட்பு நாடுகளாக விளங்க வேண்டும். பலஸ்தீன ஜனாதிபதி மஹ்முத் அப்பாஸ் அமைதியை விரும்பும் நபராக விளங்குகிறார்.
தற்போதைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப அமைதிப் பேச்சு நடைபெற வேண்டும். பலஸ்தீனம்-இஸ்ரேல் இடையே அமைதி ஏற்படுவது தான் எனது 90ஆவது ஆண்டு பிறந்த நாள் பரிசாக அமைய வேண்டும். அரசியலில் இருந்து ஓய்வு பெற்றாலும் தொடர்ந்து மக்களுக்காக உழைப்பது என்றே தீர்மானித்துள்ளேன்'' என்றார் பெரஸ்.(ற)

## வளி மாசுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கோலாம்பூர், ஜூன் 25
இந்தோனேஷியாவில் காடுகளுக்கு தீ வைத்து வளி மண்டலத்தை மாசுப்படுத்திய நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள சிங்கப்பூர் தீர்மானித்துள்ளது.
இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இரண்டு சிங்கப்பூர் நிறுவனங்களை இலக்கு வைத்து சட்டத்திருத்தங்கள் கொண்டுவரப்படும் என சிங்கப்பூர் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற)

# தண்ணீர் காட்டும் ஸ்நோடன்: திக்குமுக்காடும் அமெரிக்கா



ஹொங்கொங், ஜூன் 25
அமெரிக்க அரசின் புதிய தலையிடியாக மாறியுள்ள எட்வேர்ட் ஸ்நோடன் தற்போது ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் இருந்து கியூபாவுக்கு பறந்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
அவர் ஈக்குவடோர் நாட்டில் தஞ்சம் கோரும் திட்டத்துடனேயே கியூபாவுக்குப் பயணமாகியிருக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

### வழக்குப் பதிவு

எட்வேர்ட் ஸ்நோடன் மீது அமெரிக்க அரசு, அரச உடைமைகளைத் திருடியமை மற்றும் அமெரிக்க அரசை உளவு பார்த்தமை போன்ற பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்துள்ளது. அதையடுத்து அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. ஹொங்கொங்கில் மறைந்திருந்த ஸ்நோடனைக் கைது செய்து ஒப்படைக்குமாறு ஹொங்கொங் அரசிடம் அமெரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது.

### பறந்தார் ஸ்நோடன்

இந்தநிலையில், நேற்று முன்தினம் ஸ்நோடன் ஹொங்கொங்கை விட்டு வெளியேறிவிட்டார் என்று 'சவுத் சைனா மோர்னிங்' பத்திரிகை தகவல் வெளியிட்டிருந்தது. அந்தப் பத்திரிகையுடன் தான் ஸ்நோடன் ஹொங்கொங்கில் இருந்து இறுதியாகத் தொடர்புகொண்டிருந்தார்.
நேற்றுமுன்தினம், சீனக் கைத் தொலைபேசி நிறுவனங்கள் மற்றும் டிசிங்குவா பல்கலைக்கழகம் ஆகியவற்றை அமெரிக்கா கண்காணித்து வருகின்றது என்ற தகவலை அந்தப் பத்திரிகைக்கு வழங்கியிருந்த ஸ்நோடன், தனது உயிருக்கு அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏயால் ஆபத்து உள்ளது என்றும் தெரிவித்திருந்தார்.

### கைவிரித்தது ஹொங்கொங்

ஸ்நோடன் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதை உறுதிப்படுத்திய ஹொங்கொங் அரசு, ''ஸ்நோடனைக் கைது செய்வதற்குரிய உறுதியான ஆவணங்கள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. அதனால் அவர் நாட்டை விட்டு வெளியேறுவதை எம்மால் தடுக்க முடியாது. ஸ்நோடன் தாமாக முன்வந்து சட்டபூர்வமாக நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்'' என்று சாவகாசமாக அமெரிக்க அரசுக்கு அறிவித்துள்ளது. அதனால் ஹொங்கொங் அரசு மீது இப்போது கடும் கடுப்பில் இருக்கின்றது அமெரிக்கா.

### மொஸ்கோ பயணம்

ஹொங்கொங்கை விட்டு வெளியேறிய ஸ்நோடன் ரஷ்யாவின் மொஸ்கோ நகருக்குப் பறந்துள்ளார். ''ஏரோ பிளைட் எஸ்.யூ. 213'' என்ற விமானத்தில் அவர் ஏறிச் சென்றதைச் சிலர் பார்த்தனர் என்று ஹொங்கொங் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ரஷ்ய நேரப்படி பிற்பகல் 5.30 மணிக்கு மொஸ்கோ வந்திறங்கினார் ஸ்நோடன்.

### பிடித்துத் தாருங்கள்

அதையடுத்து ரஷ்ய அரசிடம் அவசரமாகத் தொடர்பு கொண்டது அமெரிக்கா. ஸ்நோடன் மொஸ்கோ நகருக்கு வந்துள்ளார் என்றும் அவரைக் கைது செய்து தம்மிடம் ஒப்படைக்குமாறும் வலியுறுத்தப்பட்டது. அமெரிக்க உயர் அதிகாரிகள் இது தொடர்பாக ரஷ்ய அரசுடன் தொடர்ச்சியான பேச்சுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அவர்களிடம் ''ஸ்நோடன் வருவது குறித்த தகவல் எதுவும் கிடைக்கவில்லை. அவர் எங்கிருக்கிறார் என்றும் தெரியவில்லை'' என்ற ஒரே பாட்டையே பாடிக் கொண்டிருந்தது ரஷ்யா.

### ஒன்றும் செய்ய முடியாது

இந்தநிலையில் ''ஸ்நோடன் மொஸ்கோ வந்திருக்கின்றார்தான். எனினும் அவரைக் கைது செய்தற்கான காரணங்கள் குறித்து எமக்கு எதுவும் தெரியாது. அவ்வாறான ஆவணங்கள் எம்மிடம் இல்லை.'' என்று நேற்றுச் சாதாரணமாக அமெரிக்காவுக்குத் தெரிவித்தது ரஷ்யா. என்னசெய்வது என்று தெரியாது அமெரிக்க அதிகாரிகள் தலையைப் பிய்க்கத் தொடங்கியுள்ளனர் இப்போது.



மொஸ்கோ: ஸ்நோடனுக்கான காத்திருப்பு

■ எட்வேர்ட் ஸ்நோடனை விரைவாகத் தமது பிடிக்குள் கொண்டுவரத் துடித்துக் கொண்டிருக்கிறது அமெரிக்கா. ஸ்நோடனிடம் இன்னமும் ஏராளமான தகவல்களும், ஆதாரங்களும் இருப்பதே அதற்குக் காரணம்.




### நாங்களும் இருக்கின்றோம்

இதேவேளை இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஈக்குவடோர் வெளிவிவகார அமைச்சர், ''ஸ்நோடன், எமது நாட்டில் தஞ்சம் கோரியுள்ளார். மொஸ்கோவில் அவர் உள்ளதாக எமக்கு அறிய முடிகின்றது. நாம் எமது நாட்டின் கொள்கைகள் அடிப்படையில் அவரது தஞ்சக் கோரிக்கையைப் பரிசீலிக்கின்றோம். ஸ்நோடனின் சட்டத்தரணிகள் குழு எம்முடன் தொடர்பு கொண்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள மக்களின் கருத்துச் சுதந்திரம் மதிக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் தீர்மாக்கமாக இருக்கின்றோம்'' என்று தெரிவித்துள்ளார்.

### விரைவில் பறப்பு

மொஸ்கோவுக்குச் சென்றுள்ள ஸ்நோடன், அங்கு தங்கியிருக்க மாட்டார் என்று தெரியவ்ருகின்றது. அவர் கியூபா - வெனிசுவேலா ஊடாக ஈக்குவடோர் நாட்டுக்குச் செல்லக்கூடும் என்று தெரியவருகின்றது. அதே வேளை, ''ஸ்நோடன் பயணம் செய்வதற்கு ஏற்ற பயண ஒழுங்குகளை மேற்கொள்ள எமது நிறுவனத்துக்குச் சொந்தமான விமான நிறுவனம் தயாராக இருக்கின்றது. தேவையேற்படின் பயன்படுத்தலாம்'' என்று விக்கிலீக்ஸ் நிறுவனம் வேறு தெரிவித்துள்ளது.
என்ன செய்யப் போகிறது அமெரிக்கா? பொறுத்திருந்து பார்ப்போம். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு:
021 5671111
advt@uthayan.com

பரீட்சையில் வெற்றி
பெறுவோரின் ஒரே தெரிவு

புலமை
37




எதிர்பார்க்கை
வினாத்தாள்கள்
உள்ளடங்கலாக

தமிழ், கணிதம்,
சுற்றாடல்,
ஆங்கிலம்,
சிங்களம்,
தரம் 4, 5
மாணவர்களுக்கான
மாதிரி வினாத்தாள்,
மேலும் பல தகவல்களுடன்

உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள
சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855
வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222

## மாற்றுத் திறனாளிகளுக்கான தொழிற் சந்தை ஜூன் 28 இல்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடமாகாணத்தில் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற் படுத்திக் கொடுக்கும் நோக்குடன் மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில் சந்தை எதிர்வரும் 28 ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

தொழில் மற்றும் தொழில் உறவு கள் அமைச்சும், சமூக சேவை அமைச்சும் இணைந்து நலிவடைந்த குழுமமாகவும் தொழில் வாய்ப்பின்றி இருக்கின்ற மாற்றுத் திறனாளிகளுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி பொருளாதார ரீதியில் தன்னிறைவுத் தன்மையை ஏற் படுத்துமுகமாக மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில் சந்தைக்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில் சந்தையில் வடமாகாணத்தில் உள்ள தொழில் தரு நர்களும் கலந்து கொண்டு தொழில் சந்தையில் பங்கெடுக்கின்ற மாற்றுத் திறனாளிகளில் பொருத்த மானவரை இனங்கண்டு தொழில் வாய்ப்பை வழங்குவதன் மூலம் மாற்றுத் திறனாளிகளின் பொருளாதார பலத்தை மேம்படுத்த முடியும். மாற்றுத் திறனாளி களுக்கான இந்தத் தொழில் சந்தையில் பங்குபற்ற விரும்பும் வட மாகா ணத்தில் தொழில் மற்றும் வியாபார நிறுவனங்களை நடத்துகின்ற தொழில் தருநர்கள் சிவன் பண்ணை வீதி, யாழ்ப் பாணம் எனும் முகவரி யில் அமைந் துள்ள பிரதி தொழில் ஆணையாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வடமா காண பிரதி தொழில் ஆணை யாளர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (வ-14)

## இறைபணியாற்ற செம்பியன்பற்று சதிஸ்குமார் அடிகளார்

குருநகர், ஜூன் 25

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் உதவிப் பங்குத் தந்தையாக இறை பணியாற்றிய வண.பிதா பெனடிக்ற் சதிஸ்குமார் அடிகளார் செம்பியன் பற்று பங்கிற்கு யாழ் ஆயரால் இறைபணிக்காக இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார். அதேசமயம் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் உதவிப் பங்குத் தந்தையாக வண.பிதா ப.பத்திநாதன் அடிகளார் இறை பணி செய்வதற்காக யாழ். ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து செம்பியன் பற்று செல்லவுள்ள வண.பிதா பெ.சதிஸ்குமார் அடிகளாரை வழியனுப்பும் நன்றித் திருப் பலி நாளை புதன்கிழமை காலை 6மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெறும் என குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத் தந்தை வண.பிதா றோகான் நேசராஜா அடிகளார் தெரிவித்தார்.(ஒ-51)

## நாடகப் போட்டி


மானிப்பாய், ஜூன் 25

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இல்லங்களுக்கு இடையிலான நாடகப் போட்டி, நாடக விழா எதிர்வரும் 3 ஆம் திகதி கல்லூரி அரங்கில் இடம்பெறவுள்ளது.

நாடகப்போட்டியில் ஆற்றுகை செய்யப்படுகின்ற நாடகங்களானவை சமூக நாடகமாக இருத்தல் வேண்டும் என்றும் தனி மனிதரையோ இனத்தையோ புண்படுத்துவதாக அமைதல் கூடாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

### அமரர் முத்து தேவராசா



**தோற்றம்** 09. 01.1942 **மறைவு** 26. 05. 2013

கடந்த 26.05.2013 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் முத்து தேவராசா அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.06.2013) செவ்வாய்க்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் மதியம் 12 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.48, டேவிட்றோட், யாழ்ப்பாணம். **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கிராமிய அடிப்படையிலான திட்டத்தில்

# மாதகல் பகுதிகளுக்கு விரைவில் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வலி.தென்மேற்கில் கிராமிய அடிப்படையிலான குடிதண்ணீர் திட்டத்தின் மூலம் சாந்தை மற்றும் அதனோடு இணைந்த மாதகல் பிரதேச மக்களுக்கு நன்னீர் குடிதண்ணீர் விரைவில் கிடைக்கவுள்ளது.

யாழ் - கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டத்துக்கான பொறியிலாளர் தி.பாரதிதாசன் 220 மில்லியன்ரூபா குடிதண்ணீர் திட்டத்தின் ஊடாக வலி.தென் மேற்கு, கரைச்சி மற்றும் நெடுந் தீவு ஆகிய மூன்று பிரதேசங்களுக்கு நன்னீர் குடிதண்ணீர் நன்னீர் கிணறுகளில் இருந்து பெற்று குழாய் மூலம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.



இதன் முதற்கட்டமாக வலி.தென்மேற்கில் உள்ள விளான் பிரதேசத்தில் உள்ள நன்னீர் வளத்தில் இருந்து குடிதண்ணீர் பெறுவதற்கான அனுமதியை வலி.தென்மேற்கு பிரதேச சபை அனுமதித்துள்ளது. இதன் மூலம் கிராமிய குடிதண்ணீர் திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக பண்டத்தரிப்பு, சாந்தை, மாதகல் பிரதேச மக்கள் முழு நன்மை அடையவுள்ளனர். (வ-50)

# சரிவர ஒளிராத வீதிவிளக்குகள்

### பயணிப்போர் விசனம்


கொழும்புத்துறை, ஜூன் 25

மணியம்தோட்டம் சந்திக்கும் 5 ஆம் குறுக்கு வீதிச் சந்திக்கும் இடைப்பட்ட வீதியில் இருபதுக்கும் மேற்பட்ட மின்விளக்குகள் சரிவர ஒளிராமையால் அந்தப் பகுதிகள் இரவில் இருள் சூழ்ந்து காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் ஏற்பட்ட இடி மின்னல் தாக்கத்தின் போது குறித்த மின்விளக்குகள் பழுதடைந்து செயலிழந்துள்ளன. இதே போன்று 4 ஆம் குறுக்கு வீதியில் உள்ள சில விளக்குகளும் பழுதடைந்து காணப்படுகின்றன.

இருள் சூழ்ந்த இந்தப் பகுதிகளில் வெளிஆள்கள் நடமாட்டம் காணப்படுவதாகவும் சில இடங்களில் மதுப் பிரியர்கள் கூடியிருந்து மது அருந்திவிட்டு இடையூறுகளை விளைவிப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்தப் பகுதி மக்களின் அச்சமற்ற இரவு நேர இருப்பையும், போக்குவரத்தையும் கருத்தில் கொண்டு மின்னொளிக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)



# காணி உறுதி இல்லாத நிலையில் 300 வரையிலான குடும்பங்கள்

### யாழ்.பிரதேச செயலர் பிரிவில் உள்ளதாக சுபியான் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட ஜே-81 தொடக்கம் ஜே -88 வரையான கிராம சேவையாளர் பிரிவுகளில் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொந்தக் காணி உறுதிகளைப் பெறுவதற்கு அலைந்து திரிகின்றனர் என்று யாழ்ப்பாணம் மக்கள் பணிமனைத் தலைவர் எஸ்.சுபியான் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மக்கள் பணிமனைக்கு உட்பட்ட பகுதிகளில் தற்போது வாழும் மக்களது பிரச்சினை தொடர்பாக அவரிடம் கேட்டபோதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் பணிமனையில் பொது மக்களால் தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இங்குள்ள குடும்பங்கள் பெரும்பாலும் காணி உறுதிகளை பெற்றுக் கொள்ள முடியாதவர்களாக உள்ளனர். ஜே-81 தொடக்கம் ஜே- 88 வரையான கிராம சேவகர் பிரிவுகளில் மீளக்குடியமர்வுக்காக 2 ஆயிரத்து 50 இற்கும் மேற்பட்டவர்கள் பதிவு செய்துள்ள போதும் தற்போது இருப்பிட வசதிகள் இல்லாத காரணத்தால் 480 குடும்பங்கள் மட்டுமே இருக்கக் கூடிய வீடுகளைத் திருத்தியமைத்துக் கொண்டு குடியமர்ந்துள்ளனர்.

அத்துடன் 200 இற்கும் மேற்பட்ட குடுமபங்கள் சொந்தக் காணிகளுக்கான பதிவுகள் இல்லாமலும் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் சொந்தக் காணிகள் இருந்தும் அதற்கான காணி உறுதிப்பத்திரத்தைப் பெற முடியாதவர்களாகவும் உள்ளனர்.

காணி உறுதிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தால் நிரந்தரமாக வீடுகளை அமைக்க முடியாமல் வெளி மாவட்டங்களில் வசிக்க வேண்டிய நிலையில் அவர்கள் உள்ளனர்.

அவர்களுக்குக் காணி உறுதிகளைப் பெற்றுக் கொடுக்குமாறு அரச அதிகாரிகளிடம் கோரிக்கையும் விடுத்துள்ளோம்- என்றார். (வ-14)

# புதிய சமுர்த்தி அலுவலர்களுக்கு வங்கி நடைமுறைகள் பயிற்சி

வலி.வடக்கு , ஜூன் 25

புதிதாக நியமனம் பெற்ற சமுர்த்தி அலுவலர்கள் 85 பேருக்கு வங்கி நடைமுறைகள் சம்பந்தமான ஒரு வாரகால பயிற்சி வகுப்புகள் நேற்று திங்கள் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தில் கடந்த வார முற்பகுதியில் 321 பேர் சமுர்த்தி அலுவலர்களாக நியமனம் பெற்றனர். இவர்கள் கடந்த இரு வாரங்களாகப் பயிற்சிகளுக்கு உட்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பரீட்சை இடம்பெற்றது.

பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 85 பேருக்கு தற்போது யாழ்.மாவட்ட சமுர்த்தி வங்கிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பும் வகையில் வங்கி சம்பந்தமான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

யாழ்.மாவட்ட செயலகத்தில் காலை 8.30 மணி முதல் இரவு 7 மணி வரை இந்தப் பயிற்சி வகுப்புகள் இடம்பெற்று வருவதாக சமுர்த்தி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-86)

### பூரணப்படுத்தப்பட்ட ‘காப்பெற்’ வீதி



யாழ்.மாட்டின் வீதிச் சந்தியில் நிரவப்படாமல் விடப்பட்ட காப்பெற் வீதி பூரணமாக நிரவப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளது. இதனால் இந்த வீதியூடான போக்குவரத்து சீரடைந்துள்ளது. (வ-51)


# சாவகச்சேரி நகர சபையின் வருமானப் பகுதி கணினி மயம்

### ஆசிய அபிவிருத்தி மன்றத்தினர் அவதானிப்பு

தென்மராட்சி, ஜூன் 25

ஆசிய அபிவிருத்தி மன்றத்தினர் சாவகச்சேரி நகர சபையில் மேற்கொள்ளப்பட்டுள்ள கணினி மயப்படுத்தப்பட்டுள்ள வருமானப் பகுதியினை சனிக்கிழமை நாட்டின் ஏனைய பகுதியில் உள்ள உள்ளூராட்சி நிறுவன உத்தியோகத்தர்களுடன் வருகை தந்து பார்வையிட்டனர்.

மன்றத்தின் சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர் சபாகரன் தலைமையில் மன்ற வெளிக்கள உத்தியோகத்தர்கள், காலி மாநகர ஆணையாளர், கல்முனை மாநகர ஆணையாளர், வவுனியா நகர சபை செயலாளர், காலி, கல்முனை, வவுனியா, அம்பாறை, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய நகர சபை, பிரதேச சபை ஆகியவற்றின் கணக்காளர்கள், கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்கள உதவி உள்ளூராட்சி ஆணையாளர், அலுவலக உத்தியோகத்தர்கள் உட்பட 50 க்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர்.



சபையின் வருமானப் பகுதியின் கணினி மயப்படுத்தப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டுப் பாராட்டியதுடன் அதன் செயற்பாடுகளால் கிடைக்கவுள்ள நன்மைகள் தொடர்பாகவும் தெரிந்து கொண்டனர். (த-9)

# கட்டட அடிக்கல் நடும் நிகழ்வுக்கு இன்றுவரை அனுமதி பெறப்படவில்லை

### நல்லூர் பிரதேச சபை தலைவருக்கு செயலாளர் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

பிரதேச சபையில் சபையே முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. நிர்வாகத் தலைவரான செயலாளருக்கோ மற்றும் உத்தியோகத்தர்களுக்கோ இதில் மாற்றுக் கருத்து கிடையாது. எனினும் கடந்த மே மாதம் 12 ஆம் திகதியன்று இடம்பெற்ற சிறுவர் விளையாட்டு அரங்கு மற்றும் கலாசார நிலைய கட்டட அடிக்கல் நடும் நிகழ்வுகளுக்கு இன்று வரை சபையின் அனுமதி பெறப்படவில்லை என நல்லூர் பிரதேச சபைத் தலைவருக்கு அனுப்பிய கடிதத்தில் சபையின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சிறுவர் விளையாட்டு அரங்கு மற்றும் கலாசார நிலைய கட்டட அடிக்கல்நடும் நிகழ்வுகள் குறித்தும் தங்களால் பத்திரிகைக்குத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் தொடர்பிலும் பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.


பிரதேச சபையின் தலைவர் [illegible] ஜனநாயகப் பண்பும் தங்களால் பின்பற்றப்படவில்லை. நேர்மையற்ற முறையில் நடந்து கொண்டு பிரதேச சபையின் பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் சபையின் அனுமதி பெறாமல் நிகழ்வு நடத்தியமை, சபைக்கு பொய் கூறியமை, சபையைப் பிழையாக வழி நடத்தியமை, [illegible]களுக்கு [illegible] செய்யப்பட்டமை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஜனநாயகப் பண்பை மீறியமை, சபைக்கும் நிர்வாகத்துக்கும் முரண்பாடு தோன்றக் காரணமாக இருந்தமை, சபை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை நிகழ்வுக்கு அழைக்காது தனியே நிகழ்வை நடத்தியமை, மேலதிகாரிகளுக்குப் பொய்த் தகவல்களை வழங்கியமை, பத்திரிகைகளுக்கு தவறான கருத்துக்களை வழங்கியதன் மூலம் நிர்வாகம் தொடர்பான தவறான கண்ணோட்டத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியமை என்பன நல்லூர் பிரதேச சபையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கடிதத்துக்குச் சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்எனவும் செயலாளர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (எ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுக்குழு பரிந்துரையை குப்பையில் போடவேண்டும்


## கல்முனையில் ஹக்கீம் காட்டம்



கொழும்பு,ஜூன் 25
நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிந்துரைகளை குப்பையில் போட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
கல்முனையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டின் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் உள்ளடக்காமை தவறான விடயம். அவ்வாறான தெரிவுக்குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. கட்சியின் பிரதிநிதிகளை உள்ளடக்காமை மூலம் அரசு அநீதி இழைத்துள்ளது.
சிறிய கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியுள்ள அரசு பிரதான முஸ்லிம் கட்சியின் பிரதிநிதிகளை உள்ளடக்கத் தவறியுள்ளது.
அரசின் இவ்வாறான நடவடிக்கைகளால் சர்வதேசத்தின் நம்பிக்கை மேலும் வலுவிழக்கும்.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாம் தடவையாகவும் தேர்தலில் போட்டியிட ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் 18 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளித்தது.
அவ்வாறு ஆதரவளித்த கட்சிக்கு அரசு காட்டும் நன்றி, விசுவாசம் கவலையளிக்கும் வகையில் அமைந்துள்ளது.-என்றார். (ச)

## சிசுவின் சடலம் மீட்பு; சந்தேகத்தில் தாய் கைது

மட்டக்களப்பு,ஜூன் 25
மட்டக்களப்பு, விபுலானந்தபுரம் கிராமத்தில் குழந்தை ஒன்றின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அந்தக் குழந்தையின் தாய் சந்தேகத்தின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.
விபுலானந்தபுரம் கிராமத்தில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து 10 மாதங்களேயான ஆண் குழந்தை ஒன்றின் சடலத்தை வெள்ளிக்கிழமை ஏறாவூர் பொலிஸார் மீட்டிருந்தனர்.
குழந்தையை தான் தொட்டிலில் உறங்க வைத்துவிட்டு வீட்டு வேலைகளை கவனித்துக்கொண்டிருந்ததாகவும் பின்னர் பார்த்தபோது தனது குழந்தை காணாமல் போயிருந்ததாகவும் குழந்தையின் தாய் தெரிவித்திருந்தார்.




இந்நிலையில், தனது குழந்தையை தேடிப் பார்த்தபோது வேறொரு காணியில் உள்ள கிணற்றில் குழந்தை சடலமாகக் காணப்பட்டது என்று குழந்தையின் தாய் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
எனினும் இந்தக் குழந்தையின் தாய் கூறிய வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் மீது சந்தேகம் வலுத்துள்ளதால், அவர் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (ச)



கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் சனிக்கிழமை களுவாஞ்சிக்குடி விவசாயத் திணைக்களத்துக்கு சென்று விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

## மீனவர்கள் காப்புறுதியில் அக்கறையில்லை

மட்டக்களப்பு,ஜூன் 25
மட்டக்களப்பு மாவட்டத்தில் கடல் மற்றும் வாவி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களுக்கு தங்களை காப்புறுதி செய்து கொள்வதில் அக்கறையில்லை.
இவ்வாறு கடற்றொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் டொமினிக் ஜோர்ஜ் தெரிவித்தார்.
இந்த மாவட்டத்தில் 800பேர் காப்புறுதி திட்டத்தில் இணைந்துள்ளனர்.



இந்த மாதத்தில் வருடாந்த காப்புறுதி கட்டணம் செலுத்த வேண்டியுள்ள போதிலும் 90 வீதமானவர்கள் அதனை இன்னும் செலுத்தவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 23 ஆயிரம் குடும்பங்கள் முழுநேர மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளன.
அண்மைய காற்று மற்றும் இயற்கை இடர்களின் போது 41 மீனவர்கள் உயிரிழந்துள்ளதுடன், பலர் காணாமல் போயுள்ளனர். இத்தகைய சூழலில் மீனவர் காப்புறுதி மிக முக்கியத்துவம் பெறுகிறது என்று அவர் வலியுறுத்தினார். (ச)

## வாழைச்சேனை காதி நீதிமன்றுக்கு புதிய கட்டடம்

வாழைச்சேனை,ஜூன் 25
மட்டக்களப்பு , வாழைச்சேனை காதி நீதிமன்றத்துக்கு புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
வாழைச்சேனை காதி நீதிமன்றம் தற்காலிகமாக வாழைச்சேனை வைத்தியசாலைக் கட்டடத்திலேயே இயங்கிவருகின்றது.
வாழைச்சேனை காதி நீதிமன்றத்துக்கு புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக நாவலடிச் சந்தியில் காணியொன்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
இந்தக் காணியில் அடுத்த வருடம் புதிய காதி நீதிமன்றக் கட்டடத்துக்கான நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சேனைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ள வேண்டும்

### கருணா தெரிவிப்பு



மட்டக்களப்பு,ஜூன் 25
மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போகம் மற்றும் சிறுபோகம் நெற்செய்கை தவிர ஏனைய காலங்களில் சேனைப் பயிர்ச் செய்கை, தானியப் பயிர்ச்செய்கை, பழப் பயிர்ச் செய்கை ஆகியவற்றையும் மேற்கொள்வதற்கு ஊக்கப்படுத்த வேண்டும்.
இவ்வாறு மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மட்டக்களப்பு மாவட்டத்தல் விவசாய உற்பத்திகளை மேம்படுத்தும் வேலைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும்.
பழப்பயிர் மற்றும் தானியப் பயிர்ச் செய்கைகளை அதிகரிக்கும்போது மாவட்டத்தின் போஷாக்கு தொடர்பான பிரச்சினைகள் குறைவடையும்.
அதற்கு சேனைப்பயிர்ச் செய் கையும் உறுதுணையாக இருக்க வேண்டும்.
விவசாயிகள் பல வகைகளிலும் அழிவுகளைச் சந்திக்கின்றனர். அவை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு விரைவில் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.-என்றார். (ச)

## கிழக்கில் முதலிட சீனா ஆர்வம்

### விண்ணப்பங்கள் முதலீட்டுச் சபையிடம்

திருகோணமலை,ஜூன் 25
கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் தொழில்திட்டங்களை மேற்கொள்ள சீனா ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளது.
அதற்கான விண்ணப்பங்கள் தற்போது இலங்கை முதலீட்டுச் சபையிடம் கையளிக்கப்பட் டுள்ளன என்று முதலீட்டு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.
வாகனங்கள் பொருத்தும் தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்ப பூங்கா, உருக்குத் தொழிற்சாலை போன்ற தொழில் முயற்சிகளில் முதலீடு செய்வதற்கான திட்டங்கள் அதில் உள்ளடங்கியுள்ளன என்று அவர் கூறினார்.
இவற்றோடு இணைந்ததாக கிழக்கு மாகாணத்தில் கிடைக்கும் மூலிகைகளைக் கொண்டு அழகுசாதன பொருள்களை தயாரிக்கும் திட்ட முன் வரைவு ஒன்றும் இலங்கை முதலீட்டுச் சபையிடம் சமர்ப்பிக்கட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## தேர்தலுக்கு மட்டும் வாக்குத் தேடி வரும் அரசியல்வாதிகளை இனங்காண வேண்டும்

### உதுமாலெப்பை கூறுகிறார்

மட்டக்களப்பு,ஜூன் 25
தேர்தல் காலங்களில் மாத்திரம் பொத்துவில் பிரதேசத்துக்கு வந்து மக்களின் வாக்குகளைப் பெற்றுச் செல்லும் அரசியல்வாதிகளை எதிர்காலத்தில் இளைஞர்கள் அடையாளம் காண வேண்டும்.
இவ்வாறு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இன்றைய நமது இளைஞர்கள் நாளைய தலைவர்களாவர். ஒவ்வொரு மனிதனுக்கும் இளைஞர் பருவம் குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரமே உரித்தானதாக இருக்கும். எப்போதும் இளைஞர்கள் தாம் வாழும் சமூகத்துடன் இணைந்து வாழ வேண்டும். இளைஞர்கள் எப்போதும் உயர்ந்த எண்ணங்களையே எண்ண வேண்டும்.
பொத்துவில் பிரதேச மக்களை சில அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் மாத்திரம் கறிவேப்பிலை போன்று பாவித்து வருகின்றமை வரலாற்று நிகழ்வாக மாறி வருகின்றது.
எனவே, எதிர்காலத்தில் பொத்துவில் பிரதேச மக்கள் யதார்த்தத்தை உணர்ந்து, கொள்கை ரீதியாக ஒற்றுமைப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நில்வள ஆற்றில் முதலைகளுக்கு இரையாகினர் ஐவர்

கொழும்பு,ஜூன் 25
மாத்தறை, நில்வள ஆற்றில் 2012 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் ஐந்துபேர் முதலைகளால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர். கடந்த வருடம் நால்வர் முதலைகளால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று மாத்தறை மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் சமன் பாலசூரிய தெரிவித்தார்.
இதேவேளை வெள்ளிக்கிழமை ஆற்றில் துணி துவைத்




துக் கொண்டிருந்த பெண் ஒருவரை முதலை இழுத்துச் சென்றுள்ளது என்று அவர் கூறினார். (ச)

## ஆள்கடத்தலின் பின்னணியில் அரச அதிகாரிகள்

கொழும்பு,ஜூன் 25
இலங்கையில் இருந்து ஏனைய நாடுகளுக்கு ஆள்கள் சட்டவிரோதமாக செல்லும் நடவடிக்கைகளுக்கு இலங்கையின் அரச அதிகாரிகளும் உதவி வருகின்றனர் என்று அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.
இந்தக் குற்றச்சாட்டை 2013 ஆம் ஆண்டுக்கான ஆள்கடத்தல் தொடர்பான அறிக்கையில் அமெரிக்கா சுமத்தியுள்ளது.
இந்தநிலையில் சட்டவிரோதமாக நாடுகளுக்கு ஆள்கடத்தல்களில் ஈடுபடும் அரச அதிகாரிகள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.
ஆள்கடத்தல்க்ளில் ஈடுபடுவோரை தண்டிக்கும் சட்டங்களும்இலங்கையில்போதுமானதாக இல்லை என்று அமெரிக்கா குறை கூறியுள்ளது.(ச)

## பல்கலை மாணவருக்கு உளநலப் பரிசோதனை

### கவனம் செலுத்துகின்றது மானியங்கள் ஆணைக்குழு



கொழும்பு,ஜூன் 25
பல்கலைக்கழகங்களுக்கு புதிதாக அனுமதிக்கப்படும் மாணவர்களின் உளநலத்தை பரிசோதிப்பது தொடர்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.
அண்மைக்காலமாக பல்கலைக்கழகங்களின் பல்வேறு செயற்பாடுகள் குறித்து கவனம் செலுத்திய புத்திஜீவிகள், இந்த யோசனையை முன்வைத்துள்ளனர் என்று ஆணைக்குழுவின் தலைவர் ஷெனிக்கா ஹிரிம்புரேகம தெரிவித்தார்.
இந்த யோசனை தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டு இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
பல்வேறு உளநல பிரச்சினைகள் காணப்படுகின்ற மாணவர்களே பெரும்பாலும் பகிடிவதை வழங்கும் செயற்பாடுகளுடன் தொடர்புபடுகின்றனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞானப் பீடத்தின் முதலாம் ஆண்டு மாணவி ஒருவர் அண்மையில் கட்டடமொன்றிலிருந்து கீழே குதித்து தற்கொலை செய்திருந்தார். குறித்த மாணவியின் தற்கொலைக்கும் உளநல பாதிப்பு காரணமாக அமைந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது என்று அவர் கூறினார். (ச)


# பட்டதாரி பயிலுநர் 22,145 பேருக்கு நிரந்தர சேவைகள்

### அமைச்சர் செனவிரட்ண தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 25
அரச சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 52,000 பட்டதாரிப் பயிலுநர்களில் இதுவரை 22, 145 பேர் நிரந்தர சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.
இந்தத் தகவலை நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனவிரட்ன லங்காதீப பத்திரிகைக்குத் தெரிவித்தார்.
ஓராண்டு காலப் பயிற்சியை நிறைவு செய்யும் பட்டதாரிப் பயிலுநர்கள் இவ்வாறு அரச சேவையில் நிரந்தரமாக்கிக் கொள்ளப்படுவது கட்டாயமான நிகழ்வாகும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
ஒவ்வொரு அமைச்சுக்களிலும் நிலவும் பதவி வெற்றிடங்கள் தொடர்பில் எமது அமைச்சுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.
அதற்கமைய நிரந்தர நியமனங்களைப் பெறும் அனைத்துப் பட்டதாரிப் பயிலுநர்களும் சம்பந்தப்படும் அமைச்சுக்கு உள்வாங்கப்படுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)



"நிரந்தர நியமனங்களைப் பெறும் அனைத்து பட்டதாரிப் பயிலுநர்களும் சம்பந்தப் படும் அமைச் சுக்கு உள்வாங் கப்படுவார்கள்.



மலையகத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையால் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் அவசர வான் கதவுகள் ஞாயிற்றுக்கிழமை திறந்துவிடப்பட்டுள்ளன. (ச)

### அரச சிற்றூழியர்களுக்கான

## சீருடைக்கான கொடுப்பனவு 4000 ரூபாவாக அதிகரிப்பு

கொழும்பு,ஜூன் 25
அரச சேவையில் பணியாற்றிவரும் சாரதிகள் மற்றும் சிற்றூழியர்களுக்கான சீருடைக் கொடுப்பனவு நான்காயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பான விவரங்களை உள்ளடக்கிய சுற்றறிக்கை ஒன்றை அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலர் பி.பி. அபேயகோன் அனுப்பி வைத்துள்ளார். சாரதிகள் மற்றும் ஊழியர்களுக்கான சீருடைகளுக்காக இரண்டாயிரம் ரூபாவும், தையற்கூலி கொடுப்பனவும் ஏற்கனவே வழங்கப்பட்டுவந்தது. தற்போது இந்தக் கொடுப்பனவு சீருடைத்துணிகள் மற்றும் தையற் கட்டணங்களை உள்ளடக்கியதாக வருடாந்தம் நான்காயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## பொசன் தினத்தை முன்னிட்டு 28 வரை விசேட போக்குவரத்து



கொழும்பு,ஜூன் 25
பொசன் போயா தினத்தை முன்னிட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, இலங்கை ரயில்வே திணைக்களம், இலங்கை போக்குவரத்து சபை ஆகியன விசேட போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.
இந்த விசேட போக்குவரத்துக்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
மாகாணங்களுக்கிடையிலான தனியார் பஸ் சேவைகள் கொழும்பு பெஸ்டியன் மாவத்தை தனியார் பஸ் நிலையத்திலிருந்து, அநுராதபுரம் வரை விசேட சேவைகள் நடத்தப்படவுள்ளன.
புறக்கோட்டை ரயில் நிலையம் மற்றும் மருதானை ரயில் நிலையங்களிலிருந்து அநுராதபுரம் மற்றும் மிஹிந்தலைக்கு விசேட ரயில் சேவைகள் நடத்தப்படவுள்ளன.
இலங்கை போக்குவரத்து சபையின் புறக்கோட்டை பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து அநுராதபுரம், மிஹிந்தலை, மஹியங்கனை, பதுளை, குருநாகல், கண்டி ஆகிய இடங்களுக்கு விசேட பஸ் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது. (ச)

## 20 வீதமானோருக்கு போஷாக்கு குறைபாடு

### சுகாதார அமைச்சர் தகவல்



கொழும்பு,ஜூன் 25
இலங்கையின் சனத்தொகையில் நூற்றுக்கு 20 வீதமானோர் போஷாக்குக் குறைபாட்டால் அவதியுறுகின்றனர்.
இந்தத் தகவலை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிராமப் புறங்களில் நூற்றுக்குப் 15 வீதமானோர் நீரிழிவு நோயினாலும் உயர் குருதி அழுத்தத்தினாலும் துன்பப்படுகின்றனர். நகர்ப்புறங்களில் நூற்றுக்கு 20 வீதமானோர் இந்த நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.
இலங்கையில் நூற்றுக்கு எட்டு வீதமானோர் ஊனமுற்றவர்களாகக் காணப்படுகின்றனர். நூற்றுக்கு 7 வீதமானோர் குருட்டுத் தன்மை மற்றும் பார்வைக் குறைபாடுகளால் அவதிப்படுகின்றனர்.
நூற்றுக்கு 20 வீதமானோர் வரை போஷாக்குக் குறைவால் பாதிப்படைகின்றனர்.
அதிக பணத்தைச் செலவழித்தே போஷாக்கைப் பெற வேண்டியுள்ளது என்ற போலியான எண்ணக் கரு சமுதாயத்தில் நிலவுகிறது. ஆனால் இலங்கை போஷாக்குச் செறிந்த மரக்கறிகள், பழ வகைகள் மற்றும் கீரை வகைகளைத் தாராளமாகக் கொண்டுள்ள நாடாகும்.-என்றார். (ச-22)

## வெளிநாட்டவருக்கு காணி விற்கத் தடை

### மஹிந்தவின் யோசனைக்கு அனுமதி

கொழும்பு,ஜூன் 25
இலங்கையில் அரச மற்றும் தனியார் காணிகளை வெளி நாட்டவர்களுக்கு விற்பனை செய்வதை தடை செய்யும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
அதன் பிரகாரம், பரிசு, விற்பனை, நன்கொடை உள்ளிட்ட எந்தவிதத்திலும் வெளிநாட்டவர்களுக்கு காணி வழங்க முடியாது. அதற்கு இனி சட்டத்தில் இடமில்லை.
இனிவரும் காலங்களில் வெளிநாட்டவர்கள், குத்தகைக்கு மாத்திரமே காணிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.
காணி உரிமையாளர்கள், தங்களது காணிகளை குத்தகைக்கு விடுவார்களாயின் குத்தகைக்கு விடும் அதிகபட்ச காலம் 99 ஆண்டுகள் மாத்திரமேயாகும் என்று ஜனாதிபதியின் யோசனையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாடாளுமன்றப் பெரும்பான்மை அத்தியாவசிய உரிமைகளைப் பறிக்குமோ?

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில் மாற்றம் செய்வது குறித்து நியமிக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில், எந்தக் கட்சி பங்குகொள்ளாவிடினும் அது இயங்கும். அமைச்சரவையின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல சில நாள்களுக்கு முன்னர் ''வாயோரி''யாக இதனைக் கூறியிருந்தார். அது பலித்துவிட்டது.

குறிப்பிட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அரச தரப்பு உறுப்பினர்கள் மட்டுமே அங்கம் வகிக்கப் போகிறார்கள் என்பது இப்போது ஒருவகையில் வெளிப்பட்டு விட்டது எனலாம்.

தெரிவுக் குழுவில் அங்கம் வகிப்பதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் நான்கு நிபந்தனைகளை விதித்துள்ளது. அநேகமாக அரசு அவற்றை ஏற்றுக்கொள்ளாது என்று கருத இடமுண்டு. அதேபோன்று ஜே.வி.பியும், பதின்மூன்றுக்கான திருத்தம் குறித்து பூரண விவரம் தேவை என்று கூறியுள்ளது.

அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை மிகக் கடுமையாக எதிர்த்து வரும் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், திஸ்ஸ விதாரண, ராஜித சேனரத்ன, வாசுதேவ நாணயக்கார போன்றவர்களும் தெரிவுக் குழுவில் சேர்ந்து கொள்ள மாட்டார்கள் என்று கருதப்படுகிறது.

மொத்தத்தில் தெரிவுக் குழுவில் அரச தரப்புக் கட்சிகளே பிரதிநிதித்துவம் செய்யப் போகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தெரிவுக் குழுவில் பங்குபற்றாது என்பது வெளிச்சமாகி உள்ளது. முதலில் தம்முடன் பேச்சு நடத்தி இனங்காணப்படும் விடயங்களே தெரிவுக் குழுவில் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்ற அதன் கோரிக்கையை அரசு நிராகரித்து விட்டது. அதனால் கூட்டமைப்பு தெரிவுக் குழுவை எட்டியும் பார்க்காது எனலாம்.

அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்வது குறித்து பரிசீலனை செய்வதற்காக இந்தத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்ட போதிலும், அரசியல் தீர்வுடன் தொடர்புபட்ட ஒரு விடயத்தைத்தான் இந்தத் தெரிவுக்குழுவும் பரிசீலனை செய்யப் போகிறது என்பது உள்ளார்ந்து நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

பதின்மூன்றாவது திருத்தத்தை ஒழிப்பதில் முன்னின்று பிரசாரத்தில் தீவிரமாக இயங்கி வரும் விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க ஆகியோர் அரச தரப்பு உறுப்பினர்களுக்குள் உள்வாங்கப்பட்டிருப்பது தெரிவுக்குழுவின் மீது மேலும் நம்பிக்கை இழக்க வைக்கிறது.

அமெரிக்கா, பிரிட்டன் போன்ற மேற்கு நாடுகளின் நாடாளுமன்ற அரசியலில் தெரிவுக் குழுவின் வகிபாகம் முக்கியமானது. ஒரு விடயத்தை முழு நாடாளுமன்றமும் விவாதிக்கும்போது ஏற்படும் நேர விரயத்தை மீதப்படுத்துவதே இதன் பிரதான நோக்கம். நாடாளுமன்றத்தின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களை சபாநாயகர் உறுப்பினர்களாக நியமிப்பார். தெரிவுக்குழு ஒரு விடயத்தைப் பக்கச் சார்பின்றி விவாதித்து தீர்மானத்துக்கு வரும்.

ஆனால் இலங்கையிலோ தெரிவுக்குழு, அரசின் ஒரு கருவியாக இயங்குகிறதோ என்ன நிலை மேலோங்கும் போக்கே தென்படுகிறது. தெரிவுக்குழு எதிர்க்கட்சிகளின் நம்பிக்கையை இழப்பதற்கு இதுதான் காரணம். இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வோ, அன்றி அரசு தடம் பதித்துள்ள வழியோ நாடாளுமன்றின் கௌரவத்தை குறைக்கவே வழி செய்யும்.

இந்த இலட்சணத்தில் தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய அடிப்படை உரிமைகளை, அவர்களுக்கு வழங்க ஒப்புக்கொண்ட உரிமைகளை, நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலம் என்ற பாறாங்கல்லை அவர்கள் மீது போட்டு அழுத்தி நெரிக்கும் முயற்சியே அரங்கேறுகிறது எனக் கூறின் தப்பேது...?

# அவசரப்பட்ட அரச தரப்பினர் அமைதியாகி விட்டது ஏனோ?

*சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து*

■ கோகுலன்

அடுத்த வாரம் அரசமைப்பு திருத்தப் பிரேரணைகளைசபைக்கு கொண்டு வரப் போகிறீர்களா? என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் சில வாரங்களுக்கு முன் சபை முதல்வரும் அமைச்சருமான சிறிபால டி சில்வாவிடம் கேட்டு வைத்தார்.

''உடனடியாக அல்ல'' சிறிபால டி சில்வா பதிலளித்தார். இந்தப் பதில் தமிழ் தரப்பினருக்கு பல விடயங்களை கூறுவதாய் இருந்தது. உத்தேச ''அவசர சட்ட முன் வரைவு'' சபையில் எடுக்கப்படுமானால் தேவையேற்படின் சபைக்குப் போகாமல் இருப்பதற்கு அவர்கள் விரும்பியிருந்தார்கள். குறித்த சட்ட முன் வரைவு தேசிய நலனில் முக்கியத்துவமானது என்று அமைச்சரவை உறுப்பினர்கள் கருதினார்கள்.

இந்தச் சட்ட வரைவு அரசமைப்புக்கு ஏற்புடையதா என்பதை தீர்மானிப்பதற்கு உயர் நீதிமன்றத்தின் ஆலோசனைக்கு விடப்பட்டுள்ளது. நீதிமன்றம் ஆலோசனைக்கு எடுத்துக் கொண்ட இருபத்து நான்கு மணித்தியாலத்தில் அல்லது மூன்று நாள்களுக்குட்பட்ட காலத்தில் தன் முடிவை ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிக்க வேண்டும். நீதிமன்ற முடிவு அறிவிக்கப்பட்டவுடனேயே சபை சட்ட முன் வரைவை விவாதத்துக்கு எடுத்து அதே நாளில் அதனை நிறைவேற்றும் . இந்தச் சட்ட முன் வரைவின் மீது சில தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பேசுவதன் மூலம் தங்கள் கருத்துக்களை சபைக் குறிப்பில் பதிந்து விட வேண்டும் என்று விரும்பியதாகத் தெரிகின்றது. இருந்த போதிலும், அமைச்சர்கள் அவசரப்பட்ட அளவில் சட்ட முன் வரைவு பிரதி உயர் நீதிமன்றுக்கு அல்லது சபாநாயகருக்குச் சென்று சேரவில்லை. எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆறு உறுப்பினர்களான , சம்பந்தன், மாவை சேனாதிராஜா,சுரேஷ் பிரேமச்சந்திரன், பி.செல்வராஜா, செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியவர்கள் கடந்த ஞாயிறன்று புதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

அமைச்சர் சிறிபால டி சில்வாவின் பதிலுடன் வேறு சில முக்கிய நிகழ்வுகளையடுத்து வடக்கு மாகாண சபை தேர்தலுக்கு முன்பதாக அரசமைப்பில் திருத்தம் செய்வதற்கான அவசர முடிவிலிருந்து முற்று முழுதாக அரசு பின் வாங்கியது.அவசர முன் வரைவு என்ற பெயரில் 19 ஆவது திருத்தம் ஒன்றை இந்த வாரத்தில் சபையில் சமர்ப்பிக்க அரசு தீர்மானித்திருந்தது. ஒரே அலகாக இரண்டு அல்லது மூன்று மாகாண சபைகள் ஒரே முதலமைச்சர் , ஒரே அமைச்சரவை என்ற வகையில் இணைவதைத் தடை செய்வதே இந்த திருத்த முன் வரைவின் நோக்கமாகும்.

இப்படியான ஒரு திடீர் திருப்பம் ஏற்படக் காரணம் என்ன? நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை இருக்கிறதா என்றால் இல்லை என்பது தான் பதிலாகும். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது. தமக்குத் தெரியும் எனறு முந்திய வாரம்தான் அமைச்சரவைக் கூட்டமொன்றில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். அந்தக் கருத்தையே ஜனாதிபதி கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலும் மீண்டும் தெரிவித்தார். அத்துடனில்லாமல் அவசியம் ஏற்படுமானால் எதிர்த் தரப்பில் ஐ.தே.க. முன் வரிசையிலிருந்தும் சிலரின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இது ஒன்றும் புதிய விடயமல்ல. ஐ.தே.கவின் சில முன்னாள் உறுப்பினர்கள் அரச தரப்பு முன் வரிசை அமைச்சர்களாக இப்போதும் இருந்து வருகிறார்கள். இன்னும் சில பேரை அரசியல் பதவிகளைக் காட்டி அல்லது தனிப்பட்ட விடயங்களை கூறித் தம் பக்கம் இழுத்துக் கொள்வது முன்னர் போன்று இலகுவாக இருக்கும் என்று சொல்ல முடியாது.

அவ்வாறானால் இந்த வாரம் திருத்தங்களைக் கொண்டு வந்து சாதிப்பதாக மார் தட்டிக் கொண்டிருந்தவர்கள் 13 ஆவது திருத்தத்துக்கு ஒரு திருத்தத்துடன் அமைதி அடைவதற்கான முடிவுக்கு வந்ததன் காரணம் என்ன?

பல வாரங்களாக கொழும்புக்கும் புதுடில்லிக்குமிடையில் துரிதமாக நடைபெற்று வந்துள்ள ராஜதந்திர நடவடிக்கைகளின் விளைவாக இது இருக்கலாமா? அதனால் தான் வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிந்து கொமன்வெல்த் தலைவர்கள் மாநாடும் நடைபெற்று முடியும் வரை மெதுவாக நகர்வதற்கான முடிவுக்கு வரவேண்டியிருந்ததாக கருதலாமா? புதுடில்லியிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் இந்திய வெளியுறவு அமைச்சகத்துக்கு அடிக்கடி சென்று வந்துள்ளார் என்பது இரகசியமல்ல. இந்த நகர்வுகளின் போது இலங்கை விவகாரங்களைக் கையாள்வதற்கான சிறப்புத் தூதுவர் ஒருவரை நியமிக்கும் இந்திய யோசனையை இலங்கை கடுமையாக எதிர்த்து வந்துள்ளது.

அதே வேளை 1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் குறித்தும் இந்தியா இலங்கையின் கவனத்தை திருப்பியிருந்தது. மாகாண சபைகள் அந்த ஒப்பந்தத்தின் விளைவாக உருவாக்கப்பட்டவை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இதில் ஏதாகிலும் திருத்தம் செய்யப்படுமானால் அதனால் எதிர் விளைவுகள் ஏற்படலாம் என்றும் இந்தியா எச்சரித்திருந்தது.

கடந்த வாரம் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகத் தலைவர்களுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு முன்னெடுக்கவிருக்கும் பத்திரிகைத் துறை ஒழுக்கக் கோவை விடயத்தில் தமக்கு தொடர்பு கிடையாது என்பதை வெளிப்படுத்தினார்.

அவ்வாறான ஒழுக்கக்கோவையொன்று பத்திரிகையாளர்கள் மத்தியில் இருந்தே வரவேண்டும் என்றார் ஜனாதிபதி. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீர துங்க இணையம் ஒன்றில் வெளியிட்டுள்ள ஒரு கருத்தில் மாகாண சபைகளை வெள்ளை யானைக்கு ஒப்பிட்டிருந்தார் என்பதை பத்திரிகையாளர் ஒருவர் சுட்டிக் காட்டியபோது ஜனாதிபதி பதிலளிக்கையில், வெள்ளை யானையை நாம் கொன்று விடமுடியாது அதிலிருந்து சில விளைவுகள் கிடைத்துள்ளன. இது பற்றிய பொது மக்கள் கருத்தை நாம் பார்க்க வேண்டும். உடனடியாக நாம் அதனை ஒழித்துவிட முடியாது. சிலர் அலரி மாளிகையை சுற்றி நின்று கொண்டுதாம் தொழில் இழந்து விட்டதாக கூறக்கூடும் என்றார்.

அது ஒழித்துக் கட்டப்பட்டால் குறைந்தது வேலையில்லாத் திண்டாட்டத்தைக் கொண்டுவரும். எனவே ஏதோவொரு வகையில் அது தொடர்ந்து இருக்கப் போகிறது. என்றாலும் கடந்த வாரம் உருவாக்கப்பட்ட நாடாளுமன்றகுழு இதிலுள்ள சகல விடயங்களையும் ஆராயவிருக்கிறது என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

13 ஆவது திருத்தம் தொடர்பாக இந்தியா ஏதேனும் பிரச்சினை கிளப்பியிருக்கிறதா? என்று கேட்கப்பட்டபோது, பத்திரிகைச் செய்திகளின் தான் பார்த்துள்ளேன் என்று தெரிவித்த ஜனாதிபதி பின்னர் தமது அமைச்சர்கள் சிலர் பொலிஸ் அதிகாரங்கள் நீக்கப்படவேண்டும் என்று முன்வைத்துள்ள கோரிக்கைகளை ஆதரிக்கும் விதத்தில் அந்த ஒப்பந்தத்திலிருந்தே மேற்கோளையும் காட்டினார். ஒப்பந்தத்தின் 2.10 அத்தியாயத்தை வாசித்து நீங்களே கணிப்பீடு செய்து கொள்ளுங்கள் என்றார். அந்தப் பிரிவு வருமாறு அமைந்துள்ளது.

''வடக்கு கிழக்கு மாகாணங்களின் சட்ட அமுலாக்கம் மற்றும் பாதுகாப்பை பேணுவதற்கு இலங்கை அரசானது நாட்டின் ஏனைய பகுதிகளில் உபயோகிக்கும் அதே நிறுவனங்களையும் பொறிமுறைகளையும் செயற்படுத்திக் கொள்ளும்''

இந்த ஒப்பந்த பிரிவானது மாகாண சபைப்பகுதிகளில் தேசிய பொலிஸ் படைகள் செயல்படுவதை அனுமதிக்கிறதென்று அரசின் சட்டவல்லுநர்கள் வாதிடுகிறார்கள். இது மாகாண சபை பொலிஸ் அமைப்பை மூடி மறைப்பதாகக் காணப்படுகிறது. 13 ஆவது பிரிவு நம் மீது திணிக்கப்பட்ட ஒன்று. மக்கள் கருத்துக்குறித்து நாம் கவனம் செலுத்த வேண்டும். பொலிஸார் என்னிடம் பல மணிநேரம் வாக்குமூலம் எடுத்தமை எனக்கு நினைவுக்கு வருகிறது. பொதுமக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது துப்பாக்கிக்குண்டுகள் பறந்து சென்றமை எனக்கு நினைவுக்கு வருகிறது. இறுதியில் நாடாளுமன்ற தெரிவுக்குழு இது பற்றிய ஒரு தீர்மானத்துக்கு வரும் என்றார்.

தேசிய அளவில் மிக முக்கியமான ஒரு பிரச்சினையாக முன்வைக்கப்பட்டிருந்த விடயம் ஏன் திடீரென்று அடக்கி வாசிக்கப்படுகிறது என்பது பொதுமக்களுக்கு விளக்கப்படவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இந்தியத் தலைவர்களைச் சந்தித்த பின்னர் இந்திய வெளியுறவு அமைச்சு விடுத்த அறிக்கையில் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் தெளிவான விளக்கம் காணப்பட்டது. இலங்கை அரசாங்கம் இந்தியாவுக்கு சர்வதேச சமூகத்துக்கும் ஐ.நா.வுக்கும் வழங்கியிருந்த 13 ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் சென்று அரசியல் தீர்வு காணப்படும் என்று அளித்திருந்த வாக்குறுதியில் இப்போது சந்தேகங்கள் தோன்றியுள்ளன என்ற வாசகத்தில் ஒரு ஜாடையான குறிப்புத் தென்படுகின்றது. 2009 ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கை தரப்பில் 13 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படும் என்று உறுதி வழங்கப்பட்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை நமதே....

## நீரிழிவு நோயும் சிறுகுறிஞ்சா மூலிகையும்

பேராசிரியர்
வி.கே.கணேசலிங்கம்

உலக மக்களுக்குப் பல்வேறு நோய்கள் தோன்றுகின்றன. இதற்காக பலவித மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. பெரும்பாலும் இவை இரசாயனப் பொருள்களாலேயே தயாரிக்கப்படுகின்றன. இதன் காரணமாக பலவித பக்க விளைவுகள் தோன்றுகின்றன. இவை மனிதனுக்கு தீங்கு விளைவிப்பதோடு சுற்றாடலுக்கும் ஊறு விளைவிக்கின்றன. எனவே இதற்கான தீர்வாக, இரசாயனக் கலவைகளைத் தவிர்த்து, இயற்றை மருத்துவத்தைத் தேடி நாடுவதே நாம் நம் எதிர்கால சந்ததிக்குச் செய்யும் பேருதவியாகும்.



### நீரிழிவு நோய்

இன்று உலகமக்களில்பெரும்பாலார் ஆட்பட்டுள்ள முக்கியமான நோய்களில், நீரிழிவு நோய் வயது வேறுபாடின்றி பலரை வாட்டி வதைக்கின்றது. நீரிழிவு நோய் ஒருவருக்கு ஏற்படின் அதன் காரணமாகப் பல வியாதிகள் ஒருவருக்கு வந்து சேர்ந்து விடும். என்பதன் அடிப்படையில் நீரிழிவு நோயாளர் காலப்போக்கில் இரத்த அமுக்கம், சிறுநீரகக் கோளறு ஆகிய நோய்களுக்கு ஆளாவார்கள். இதற்குக் காரணம் யாதெனில் நோயாளரின் குருதியில் அதிக அளவு குளுக்கோஸ் இருப்பதால் தான் ஒவ்வொரு உறுப்புக்கும் சாதாரண குருதிக்குப் பதிலாக குளுக்கோஸ் கூடிய குருதி செல்லுவதால் அவ் அங்கங்கள் சாதாரணமாக தொழிற்பட இயலாதிருக்கின்றன. இதன் காரணமாகவே நீரிழிவு நோயாளருக்கு பலவித நோய்கள் உண்டாகின்றன. நீரிழிவு நோய்க்கு முக்கிய காரணம் யாதெனில் சதையியிலுள்ள கலங்களிலிருந்து சுரக்கப்படும் இன்சுலின் குறைவடைதல் காரணமாகவோ, அல்லது சுரக்கும் தன்மை அற்ற காரணமாகவோ குருதியில் உள்ள குளுக்கோசின் அளவைக் குறைக்க முடியாதுள்ளது. இது பெரும்பாலும் ஒரு பரம்பரை வியாதியாகும்.

### சிறு குறிஞ்சா மூலிகை

இது வறண்ட பிரதேசத்தில் பல்வேறு பூண்டுகளுடன் வளரும் ஒரு மூலிகைச் செடி. கொடியாகப் படர்ந்து வேலியிலும் வேறு சிறு மரங்களிலும் நீர் இருப்பின் விரைவில் வளர்ந்து பல இலைகளைத் தர வல்லது. முற்றிய இலைகள் தடித்ததாகவும் உள்ளே பால் போன்ற சிறு திரவத்தையும் கொண்டிருக்கும் இந்தியாவில் இதனை '' சர்க்கரைக் கொல்லி'' எனக் கூறுவர். சித்த மருத்துவ நூல்களில் மது மெகா என்னும் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறு குறிஞ்சாவை வளர்க்கும் போது அசேதனப் பசளைகள் எதுவும் பாவிக்கப்படுவதில்லை. இதன் இலைகள் கசப்புத் தன்மையுள்ளதால் பூச்சிகள் இதனை தாக்குவதில்லை. எனவே பூச்சிக் கொல்லிகள் பாவிக்கப்படுவதில்லை. தூய சிறு குறிஞ்சா இலையைப் பாவிப்பதால் மொத்தக் கிருமிகளின் எண்ணிக்கை உலக சுகாதார அமைப்பின் வரையறையை விட 100 சதவீதம் குறைவாகவேயுள்ளது. அத்துடன் E. Coli என்னும் கிருமித் தாக்கம் முற்றாகவே இல்லை எனலாம். அதாவது கிருமித் தொற்றின் அளவும் பூச்சியமாகவேயுள்ளது குறிப்பிடத்தக்கது.

சிறு குறிஞ்சாவிலான கலவைகள் ஆங்கில மருத்துவத்திலும் பார்க்க மிகச் சிறந்த, பக்க விளைவுகள் எதுவும் இல்லாத முறையாகக் கருதப்படுகிறது. இதன் காரணமாக யாழ்ப்பாண மாவட்ட திருநெல்வேலியிலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் பரந்த நிலத்தில் சிறு குறிஞ்சா தோட்டம் அமைத்து அதன் இலைகளை பல்வேறு இரசாயன முறையில் பதப்படுத்தி வருகின்றனர். குறிஞ்சாப் பவுடரை காற்றுப் போகாவண்ணமும் இரசாயனத்தன்மை கெடாத வகையிலும் பொலித்தீன் பைக்குள் அடைத்து ஒரு தேக்கரண்டி (3.5g) நாள் ஒன்றிற்கு 2-3 தடவை உணவுக்கு முன்பு எடுத்து வரப்பட்டால் அல்லது இலைப் பவுடரை அடி நாக்கில் இட்டு நீருடன் பருகினால் நீரிழிவு நோயாளருக்கு மிகச் சிறந்த நிவாரணியாக அமையும். இவ்வாறு குருதியில் குளுக்கோசைக் கட்டுப்படுத்தும் காரணியுடன் விற்றமின் A, C இரும்புச்சத்து, கல்சியம், நார்ப் பொருள்கள் போன்ற நன்மை பயக்கும் பொருள்களும் இதில் உண்டு. தற்கால அவசர தேவை கருதி சிறு குறிஞ்சா இலையை தேவைப்படும் விதத்தில் பொதி செய்து, சிறு குறிஞ்சா மூலிகைத் தேயிலை என்னும் பெயரில் பொதி செய்யப்பட்டு விற்பனை செய்ததில் அதிசயப்படும் வகையில் வெற்றியளித்துள்ளது. இதே போன்று சிறு குறிஞ்சா நீரிழி வுத் தேயிலை ஆகிய பெயர்களில் சந்தைப்படுத்தப்படுகிறது. இவற்றை வெளி நாடுகளுக்கு அனுப்புகின்றனர். குறிப்பாக கனடாவுக்கு உத்தியோக பூர்வமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. எமது உள்ளூர்ப் பொருள்கள் வெளிநாடுகளில் முக்கியத்துவம் பெறுவது எம் நாட்டுக்கும் பெருமையாகவுள்ளது. தற்போது இச் சிறுகுறிஞ்சாப் பவுடர் தேநீர் கொண்ட பொதிகள் வட அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஐக்கிய இராச்சியம், ரஷ்யா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றது. இலங்கை மக்களும் இச் சிறுகுறிஞ்சாவினைப் பாவித்து வந்தால் நோய் குறையும், செலவு குறையும், வேறுவியாதிகளும்குறையும், உடல் பிரச்சனைகளும் குறையும். சர்வதேச ரீதியில் பங்களாதேசின் டாக்காவில் செய்யப்பட்ட ஆய்வின் படி ஆங்கில மருந்துடன் சிறு குறிஞ்சா கொடுக்கப்பட்டவர்களுக்கு நீரிழிவு நோய் கட்டுப்பாட்டுக்கு வந்தமை நிரூபிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கனேடிய நிறுவனங்களில் நடத்தப்பட்ட ஆய்வின்படி கனேடிய மக்களுக்கு சிறு குறிஞ்சா தேநீர் நன்மை தரும் எனக் கணடறியப்பட்டு அதற்கான வர்த்தக நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றது.

எனவே தான் மருத்துவ ரீதியாக உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறு குறிஞ்சாவின் பவுடர், தேநீர் ஆகியவற்றை தொடர்ந்து ஒவ்வொரு நாளும் குறிக்கப்பட்ட அளவில் ஒருவர் சரியான முறையில் எடுத்து வருவாராயின் இரண்டு வாரங்களில் கீழ் வரும் நன்மைகளைப் பெற முடியும்.

1. குருதியில் குளுக்கோஸ் அளவு குறைதல்.
2. குருதியில் கொலஸ்ரோல், கொழுப்பமிலங்கள், ரைக்கிளிஸ்சரைட் என்பன குறையும்.
3. இழந்த உடல் எடையைத் திரும்பப் பெற முடியும்.
4. குருதியில் ஈமோகுளோபின் மட்டம் அதிகரிக்கும்.
5. பக்க விளைவுகள் ஏதும் ஏற்படாது.

எனினும் இத்துடன் உணவுக் கட்டுப்பாடு மிகவும் அவசியம். குறைந்த அளவு சோறு, மாப்பதார்த்தம், இனிப்புப்பண்டங்கள் அற்ற உணவு, இனிப்பற்ற பழங்கள் ஆகிய உணவுகளை உண்பதோடு, எண்ணெய் வகைகளையும் தவிர்த்தல் அவசியம்.

மேற் கூறிய விடயங்களை உற்றுக் கவனிக்கும் போது நீரிழிவுக்கு உற்ற தோழன் சிறு குறிஞ்சா என்பதுடன் இரகசியமான முறையில் இந் நோயை கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வர முடியும் என்பது வெளிப்படை.

---

சி.நற்குணலிங்கம்
கோட்டக்கல்விப்
பணிப்பாளர், கரவெட்டி

# நல்ல தந்தையாக வேண்டுமா?

## முதலில் நல்ல இளைஞனாக மாறுங்கள்

இன்றைய நவீன யுகத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்குள் இளைஞர்கள் சிக்கி அதிலிருந்து வெளிவர முடியாமல் தவிக்கின்றார்கள். இன்றைய இளைஞர்களில் பெரும்பாலானோர் தங்களது நடை, உடை, பாவனை மற்றும் பல்வேறு விதமான விடயங்களில்தம்மை மாற்றிக்கொண்டுள்ளது மட்டுமல்லாமல் மற்றவர்கள் முகம் சுழிக்கும் வண்ணம்நடந்துகொள்வது வெறுப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. இளைஞர்களது அடிப்படை இயல்புகளாக வாழும் துடிப்பு, வளரும் ஆசை, தெரிந்து கொள்ளும் ஆர்வம், தன் எல்லாத் திறமைகளையும் உபயோகித்து வாழும் முயற்சி என்பன உள்ளன. இந்த அடிப்படை இயல்புகளை ஒழுங்காகப் பயன்படுத்தாது இன்றைய இளைஞர்கள் தவறான பாதையில் செல்கின்ற னர். செல்லப்பிள்ளைக்கு ஒருசெல்போன். இது அவனின் கல்வியை மட்டும் பாழாக்கவில்லை.

அவனது ஒழுக்க வாழ்வையும் பாழாக்குகின்றது. பல்வேறு முனைகளில் செல்போன் இளைஞர்களை ஒழுக்கக் கேட்டுக்கும், சீரழிவுக்கும் இழுத்துச் செல்கின்றது. இன்றைய சினிமாக் கலாசாரம் இளைஞர்களைத் தவறான பாதைகளுக்கு அழைத்துச் செல்கின்றது. சினிமாக் காட்சிகள், ஆபாசக் காட்சிகள் அப்பட்டமாக அப்படியே காட்டப்படுகின்றன. இந்தக் கேடு கெட்ட கலாசாரத்தை பார்த்தபின் அவற்றை சமூகத்தில் பரீட்சிக்க முயல்கின்றனர். இதனால்சமூகம்கலங்குகின்றது. இளைஞர்கள் தம்மட்டில் முன்னேற்றமான மகிழ்வான வாழ்க்கையை வாழ்வதாக நினைத்தாலும் அவர்கள் பின்னடைவான வாழ்க்கையையே வாழ்கின்றனர். அது மட்டுமல்ல வாழ்க்கையை வீணடிக்கின்றனர். யாழ். குடாநாட்டில் மதுபான நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க பாவனையும் அதிகரித்துச் செல்கின்றது. பியர் மதுப் பாவனை பன்மடங்கு அதிகரித்துள்ளது. இளைஞர்களின் அதிகரித்த பியர் மதுபானப் பாவ[illegible] குறைந்தது 20 வருடங்களின் பின் நீரிழிவு நோயால் பாதிப்புறும் அபாயம் காத்திருக்கின்றது. கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் 48 லட்சத்து 45 ஆயிரத்து 588 லீற்றர் பியர் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதே வேகத்தில் அவர்களது உடலில் நோயும் குடிகொள்ளும். இது மட்டுமா, கசிப்பு உற்பத்தியிலும்

**சிறந்த இளைஞர் சமூகமே சிறந்த தந்தையரை உருவாக்கும்.**

வளர்ச்சி தென்படுகிறது. தீமையானதும், ஆபத்தானதுமான கசிப்பைக் குடித்து பெரிய நோய்களுக்கு இளைஞர்கள் உட்படுகின்றனர். [illegible] கின்றார். புகைப்பவர்கள் புகையை உள்ளுக்குள் இழுக்கும் ஒவ்வொரு வேளையும் நிக்கோட்டின் மின்னல் வேகத்தில் மூளையை சென்றடைகின்றது. இதன் காரணமாக பணமும் விரயமாகி ஆரோக்கியமும் கெடுகின்றது.

பெரும்பாலான பகுதிகளில் மாலை வேளையில் கூடும் ஒரு சில இளைஞர்களால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். மாலை வேளையில் மதுபாவனையில் ஈடுபடுவதால் வீதியால் செல்லும் பொது மக்களுடன் முரண்படுதல், யுவதிகளுடன் சேட்டை விடுதல், முதியோரைக் கிண்டல் செய்தல், குழுச் சண்டைகளில் ஈடுபடுதல் போன்ற சமூகத்துக்கு ஒவ்வாத காரியங்களில் நேரத்தை செலவு செய்கின்றனர்.

கால மாற்றத்தால் இளம் சமூதாயத்தினர் தேவையற்ற பொருத்தப்பாடற்ற ஒவ்வாத ஒழுக்கங்களில் ஈடுபட்டு மோகம் கொண்டு திளைப்பதில் சமுதாய ஒழுக்கக் கட்டமைப்பானது ஆபத்தின் விளிம்பில் காணப்படுகின்றது. இவர்கள் தந்தையர் ஆகும் போது எதிர்கால தந்தையர் சமூகம் சமூக விழுமியங்களிலிருந்து விலகியதாகவும், ஒழுக்க மற்றவர்களாகவும் , மதுவுக்கு அடிமையானவர்களாகவும் , கலாசார சீரழிவுக்கு உட்பட்டவர்களாகவும் நோய்வாய்ப்பட்டவர்களாகவும் காணப்படுவர். அத்துடன் குடும்ப வன்முறையில் ஈடுபடவும் , விவாகரத்துக்கள் ஏற்படவும் இவர்களது நடத்தைக் கோலங்கள் வழிவகுக்கும்.

எனவே சிறந்த இளைஞர் சமூகமே சிறந்த தந்தையரை உருவாக்கும். எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் தீயவராவதும் பெற்றோர் வளர்ப்பினிலே என்பதற்கு அமைய இன்றைய தந்தையர் பிள்ளைகளை சமூகம் ஏற்கக்கூடிய வகையில் சிறந்த, ஒழுக்கமுள்ள, ஆரோக்கியமான கல்வி கற்ற ஆன்மிகத் தன்மை கொண்ட, தன்னம்பிக்கையுள்ளவனாக வளர்ப்பார்களாயின் எதிர் கால தந்தையர் சிறந்த தந்தையராக மிளிர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
25/06/2013




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## போர்ச் சூழலில் சேதமுற்ற கைதடி ஆயுள்வேத ஆஸ்பத்திரியில் சிற்றூழியர் விடுதிகள் புனரமைப்பு



குருநகர், ஜூன் 25

கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் (ஆயுள் வேத வைத்தியசாலை) போரினால் சேதமடைந்த நிலையில் உள்ள சிற்றூழியர் விடுதிகளின் ஒரு தொகுதி ஆயுள்வேத திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதாக கைதடி சித்த போதனா வைத்திய சாலையின் மருத்துவப் பொறுப்பதிகாரி திருமதி பிறேமா சிவசண்முகராஜா தெரிவித்தார்.

போரினால் சேதமடைந்த நிலையில் இன்னும் இரண்டு தொகுதி விடுதிகள் புனரமைக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ஓ-51)

## வரணி பொது நூலகம் முதலாமிடம் நாவற்குழி இரண்டாமிடம்

அகில இலங்கை ரீதியில் உள்ளூராட்சி சபைகள் மட்டத் தில் 2012 ஆம் ஆண்டின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வை சிறந்த முறையில் நடத்தி யமைக்காக வரணி பொது நூலகம் முதலாம் இடத்தையும், நாவற்குழி பொது நூலகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

இலங்கை தேசிய நூலகத்தின் 23 ஆவது வருடாந்த நிகழ்வில் இந்த நூலகங்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

ரூபா 50,000 பெறுமதியான ஆங்கிலப் புத்தகங்கள் கொண்ட பொதிகள் இரு நூலகங் களுக்கும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இரு நூலகங்களில் இருந்தும் தலா 5 நூலகர்கள் கலந்து கொண்டனர். (ந-122)



துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் குரு பூசையான கடந்த வியாழக்கிழமை அந்தண குருமார்களான சிவஸ்ரீ சு.மகேஸ்வரக்குருக்கள் மற்றும் சிவஸ்ரீ சி.நகுலேஸ்வரக் குருக்கள் ஆகியோர் துர்க்கை அம்மன் ஆலயத்தில் பாராட்டி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள். (ந-86)

## சனிக்கிழமைகளில் நடமாடும் சேவை

நவாலி, ஜூன் 25

ஆனைக்கோட்டை கிராம உப அலுவலக ஆயுள் வேத வைத்திய சாலை சனிக்கிழமைகளில் சண்டிலிப்பாய் மத்தி முதியோர் சங்கத்தில் நடமாடும் சேவையை வழங்கி வருகின்றது. திங்கள் முதல் வெள்ளி வரையான ஏனைய நாள்களில் வழமை போல் உப அலுவலகத்தில் இயங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-100)

## சமாதான நீதிவான்களாக சத்தியப் பிரமாணம்



அச்சுவேலி, ஜூன் 25

சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த பிள்ளையான் தயேந்திரன் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ்.மாவட்ட நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதிவியேற்றுள்ளார்.

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவனான இவர் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி அபிவிருத்தி அலு வலராக 15 வருடங்கள் கடமையாற்றி, தற்பொழுது ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் சமுர்த்திமுகாமையாளராகக் கடமையாற்றுகின்றார். (ந-11)

* * *



அச்சுவேலி, ஜூன் 25

அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த குமாரசுவாமி கதிரமலைநாதன் அகில இலங்கை சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ். மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுள்ளார்.

அச்சுவேலி வடக்கு கிராம அலுவலராகக் கடமையுரியும் இவர் அச்சுவேலி மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார். வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் கிராம அலு வலர் முகாமைத்துவப் போட்டி யில் மூன்று தடவைகள் வெற்றி பெற்று விருது வென் றவர். சிறந்த சமூக சேவை யாளர். (ந-11)

## கும்பாபிஷேகம்

நவாலி, ஜூன் 25

சண்டிலிப்பாய் சீரணி நாக பூசணி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும். நேற்று ஆரம்பமான எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை மாலை வரை இடம் பெறும். (ந-100)

## சனசமூக நிலைய நிர்வாகிகள்தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 25

புன்னாலைக்கட்டுவன், கப்பம் புலம் வடக்கு பாரதி சனசமூக நிலையத்தின் நிர்வாகக் குழு தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. க.ஜெயபதி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தலைவர்- பா.நிரோசன் உப தலைவர்- பொ.றோசி, செயலாளர் யூ.கயானா, உப செயலாளர்- ஜெயவதி, பொருளாளர்- ம.பார்த்தீபன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். இந்த நிகழ்வில் கிராம மக்கள், பிரதேச செயலக உறுப்பினர் கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ந-ரி)

## சுருவில் றோ.க.வித்தியாலயத்தை விரைவில் புனரமைக்க நடவடிக்கை



ஊர்காவற்றுறை சுருவில் றோ.க.வித்தியாலயத்தை தற்போது புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தீவுப் பகுதியில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக சேதமடைந்த இப் பாடசாலையை விரைவில் மீளத் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக தீவக வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜோண் குயின்ரஸ் தெரிவித்தார். (ந-7)

## ஒன்றுகூடலும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக எழுதுவினைஞர், தொழில் நுட்ப அலுவலர் ஒன்றியத்தின் ஒன்று கூடலும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் கௌரவிப்பும். ஒன்றிய அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கலும் நாளை புதன்கிழமை நடை பெறவுள்ளன.

பல்கலைக்கழக நல்லாயன் இல்ல மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நீ.மயில்வாகனம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் சிறப்பு விருந்தினராக பல்கலைக்கழகப் பதிவாளர் வி.காண்டீபனும் கலந்து கொள்வர். (ந-9)

## மொழி பெயர்ப்பாளராக சத்தியப்பிரமாணம்



தென்மராட்சி, ஜூன் 25

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த நடராஜா திருக்குமரன் தமிழ், சிங்கள மொழி பெயர்ப்பாளராக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி செ.லெனின்குமார் முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார்.

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், வரணி மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் யாழ். பல்கலைக்கழகத்தின் முது கலைமாணி பட்டத்தையும் அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் சைவப்புலவர் பட்டமும் பெற்றுள்ளார்.

பருத்தித்துறை மாட்ட நீதி மன்றில் பேச்சு மொழி பெயர்ப்பாளராகவும் முதலியாராகவும் பணியாற்றி வருகிறார். (ந-9)

## தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா தமிழ்ச் சங்கம் நடத்திய போட்டி முடிவுகள்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்திய பேச்சு, கட்டுரை, கவிதைப்போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. கடந்த புதன்கிழமை புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் இடம்பெற்ற நூற்றாண்டு விழாச் சபைக் கூட்டத்தில் போட்டி முடிவுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டன. இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதக்கங்கள், பரிசில்கள், சான்றுப் பத்திரங்கள் என்பன எதிர்வரும் ஜூலை மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப் பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம் பெறவுள்ள தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழா ஆய்வரங்கத் தொடக்க நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.

இந்தப் போட்டியில் மாவட்ட ரீதியாக வெற்றி பெற்ற மாணவர் விவரம் வருமாறு:-

**வவுனியா மாவட்டம்**

**பேச்சு- கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம்-கா.ஷயனிகா (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), 2ஆம் இடம்-கோ.தனுஷிஹா (இறம்பைக் குளம் மகளிர் ம.வி.)

**மத்திய பிரிவு**

1ஆம் இடம்-ச.துஷிதா (சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா), 2ஆம் இடம்- பா.சிவகாமசுந்தரி (புதுக்குளம் ம.வி.), 3ஆம் இடம்-இ.பிரேமினி (ஓமந்தை மத்திய கல்லூரி)

**மேற்பிரிவு**

1ஆம் இடம்-தே.பருசோத்தமன் (புதுக்குளம் ம.வி.), 2ஆம் இடம்- வி.தனுசா (இறம்பைக் குளம் மகளிர் ம.வி.), 3ஆம் இடம்-வி.கஜந்தரி (சைவப் பிரகாச மகளிர் கல்லூரி)

**அதிமேற்பிரிவு**

1ஆம் இடம்- கா.காயத்திரி (இறம்பைக்குளம் மகளிர் ம.வி.), 2ஆம் இடம்- தே.கிரேஷி (புதுக்குளம் ம.வி.), 3ஆம் இடம்-பா.கீர்த்தனா (ஓமந்தை மத்திய கல்லூரி)

**கட்டுரை**

**மத்திய பிரிவு**

1ஆம் இடம்-சு.ஷான்சி (புதுக் குளம் ம.வி.), 2ஆம் இடம்-க.சஸ்கவி (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா), 3ஆம் இடம்-இ.டனோஜினி (ஓமந்தை மத்திய கல்லூரி)

**மேற்பிரிவு**

1ஆம் இம்- ஞா.மிதுலா (சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, வவுனியா), 2ஆம் இடம்- த.விதுசன்(ஓமந்தை மத்திய கல் லூரி), 3ஆம் இடம்-கி.அ. சங்கீர்த்தனா (இறம்பைக் குளம் மகளிர் ம.வி.)

**அதிமேற்பிரிவு**

1ஆம் இடம்-தே.சஜீவனா (ஓமந்தை மத்திய கல்லூரி), 2ஆம் இடம்- த.டிலக்சனா (சைவப்பிரகாச மகளிர் கல் லூரி, வவுனியா), 3ஆம் இடம்-த.ஜெயப்பிரியா (புதுக்குளம் ம.வி.)

**கவிதை**

**மேற்பிரிவு**

1ஆம் இடம்-ப.கௌசிகா (இறம் பைக்குளம் மகளிர் ம.வி.) 2ஆம் இடம்- யு.யுவர்ணா (ஓமந்தை மத்திய கல்லூரி), 3ஆம் இடம்-தெ. மிதிலை மாறன் (புதுக்குளம் ம.வி.)

**அதிமேற்பிரிவு**

1ஆம் இடம்-ச.வர்ணிகா (இறம் பைக்குளம் மகளிர் ம.வி.), 2ஆம் இடம்- ஜெ.சுதர் ஷினி (சைவப்பிரகாச மகளிர் கல் லூரி, வவுனியா), 3ஆம் இடம்-வே.குயிலினி (ஓமந்தை மத் திய கல்லூரி). (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துச் சிரமத்தில் மாந்தை கிழக்கு மக்கள்

முல்லைத்தீவு, ஜூன் 25
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு கிராமத்தில் வசிக்கும் மக்கள் தாம் கடுமையான போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.
மேலும் பாண்டியன்குளம், நட்டாங் கண்டல், கரும்புள்ளியான், பனங் காமம், செல்வபுரம் ஆகிய கிராமங் களுக்கான போக்குவரத்து வசதி களும் சீரான வகையில் அமைந் திருக்கவில்லை. இதனால் இங்குள்ள மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.



அரச பஸ் சேவையும் இங்கு இடம் பெறுவதில்லை. தனியார் போக்கு வரத்துச் சேவை இடம் பெறுகின்ற போதிலும் அதுவும் சீரான வகையில் அமைந்திருக்கவில்லை.
இதனால் இங்கு வசிக்கும் மக்கள் கால்நடையாகவோ, அல்லது வேறு வாகனங்களிலோ தான் பயணிக்க வேண்டிய நிலையே தற்போது காணப்படுகிறது. (க-6)



வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்திய ரி.எம். சௌந்தரராஜன் நினைவு விழாவில் ரி.எம்.எஸின் உருவப்படத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் நகர பிதா எஸ்.என்.ஜி. நாதன் ஆகியோர் மலரஞ்சலி செய்வதையும் தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெற்ற ரி.எம்.எஸின் பாடல்கள் பற்றிய பட்டிமண்டபத்தில் வாதிட்ட மா. மதியழகன், சி.வரதராஜன், மு.சுபாஷ், ல.சதீஷ், மைதிலி தயாபரன், செ.அப்துல் சமட், எஸ்.எஸ். வாசன், வீ.பிரதீபன், ஆ.லோகேஸ்வரன் ஆகியோரையும் சபையினரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (ஒ-402)

# மணல் ஏற்றும் அனுமதி வனவளத் துறையிடமும்

## முறைகேடுகள் இடம்பெறுவதாக மக்கள் விசனம்

வனவளத் துறையினரும் மணல் அகழ்வதற்கான அனுமதியை வழங்குவதால் பலமுறைகேடுகள் இடம்பெறுவதாக கிளிநொச்சி மக்கள் தெரிவிக்கின்றனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் இது வரைகாலமும் கனிய வளத் திணைக் களத்தினரே மணல் அகழ்வதற் கான அனுமதியை வழங்கி வந்த னர். தற்போது வன வளத்துறை யினரும் இதனை வழங்கி வருவ தால் அதில் பல்வேறு முறைகேடு கள் ஏற்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.
தற்போது கட்டுப்பாடுகள் யாவும் தளர்ந்து போயுள்ள நிலையில் கள்ளவாக மணலை அகழ்ந்து ஏற் றும் செயற்பாடுகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
இது தொடர்பாக இறுக்கமான நட வடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் கிளிநொச்சி மக் கள் மணலைப் பெற முடியாத நிலை உருவாகி விடுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

# இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கையில் நோய்த் தாக்கங்கள்

கிளிநொச்சி, ஜூன் 25
இரணைமடுக்குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக நெற்செய்கை யில் காணப்படும் நோய்த் தாக்கம் காரணமாக விவ சாயிகள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் மருதநகர், பன்னங்கண்டி,முரசுமோட்டை, ஊரியான், சின்னக்காடு ஆகிய பகுதிகளில் மேற் கொள்ளப்பட்டுள்ள சிறு போக நெற்செய்கைகளில் பல்வேறு வகையான நோய்த் தாக்கங்கள் காணப்படுகின் றன. நெற் பயிர்களில் சிற் றுண்ணிகளின் தாக்கம் அதி கரித்துக் காணப்படுகின்றது. அதனை விட சந்து குத்திப் புழுக்களின் தாக்கமும் அதி கரித்துக் காணப்படுகின்றது.
மேலும் அடையாளம் காண முடியாத சில நோய்களால் நெற் பயிரின் வளர்ச்சி குன் றிக் காணப்படுகின்றது.
ஆனால் எத்தகைய மருந்து களைப் பயன்படுத்த வேண் டும் என்ற விளக்கங்கள் இல்லாததால் விவசாயிகள் பல்வேறு மருந்து வகை களைப் பயன்படுத்தி வரு கின்றனர்.
இத்தகைய நோய்த் தாக்கம் தொடர்பாக இதுவரை விவ சாய விரிவாக்கத் திணைக் களத்தினால் எந்தவிதமான அறிவுரைகளும் தமக்கு வழங்கப்படவில்லை என வும் இதனால் தாங்கள் பெரும் பாதிப்புக்களை எதிர் கொண்டு வருவதாகவும் விவசாயிகள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (க-6)

## விருது வழங்கி கௌரவம்

நெளுக்குளம், ஜூன் 25
வவுனியா விபுலானந்தாக் கல்லூரி அதிபர் விருது வழங் கிக் கௌரவிக்கப்பட்டார்.
வவுனியா விபுலானந்தாக் கல் லூரி அதிபரான வே.இந்திரன் ' வித்தியா இரத்தினம் ' என்ற விருது வழங்கி அண்மையில் கௌரவிக்கப்பட்டார்.
அதிபர் தரம் 1 ஐச் சேர்ந்த இவர் சமாதான நீதிவானும், தொழிற்சங்கவாதியுமாவார்.
இவர் ஜனாதிபதியினால் 'பிரதீபா பிரபா' என்னும் விருது வழங் கிக் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது . (க-402)

# வவுனியாவில் தொண்டர் ஆசிரியர் 231 பேருக்கு நிரந்தர நியமனம்



மன்னார், ஜூன் 25
வன்னி கல்வி வலயங்களில் கடந்த பல வருடங் களாக தொண்டராசிரியர்களாகப் பணி புரிந்த வர்களுக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன.
வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி யில் இடம்பெற்ற நிகழ்வின் போது மடு கல்வி வலயத்தில் 43 பேருக்கும், துணுக்காய் கல்வி வலயத்தில் 78 பேருக்கும், முல்லைத்தீவு கல்வி வலயத்தில் 86 பேருக்கும், வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 24 பேருக்குமாக மொத் தம் 231 பேருக்கு ஆசிரிய உதவியாளர் நிய மனங்களுக்கான கடிதங்கள் வழங்கப்பட்டன.
வவுனியாவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தொண்டராசிரியர்களாகப் பணிபுரிந்து கொண் டிருப்பவர்கள் பலரும் கலந்து கொண்டு தமக் கான நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர். (க-12)

# பாடசாலைக் கட்டடம் கையளிப்பு

நெடுங்கேணி, ஜூன் 25
புதுக்குடியிருப்பு விக்னேஸ் வரா மகா வித்தியாலயத்தின் புனரமைக்கப்பட்ட கட்டடம் வைபவ ரீதியாகக் கையளிக் கப்பட்டுள்ளது.
கடந்த 14 ஆம் திகதி பாட சாலை அதிபர் இ.சந்திரகுமார் தலைமையில் இதற்கான நிகழ்வு இடம்பெற்றது.
நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் பாடசாலை மாணவர்களின் அணி வகுப்பு மரியாதையுடன் அழைத்து வரப்பட்டனர்.
சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா பாடசாலைக் கட்டடத்தை வைபவ ரீதியாகக் கையளித்தார். இதன்போது மாணவர்களுக்கு கற்றல் உப கரணங்களும் வழங்கப்பட் டன.
இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.
இந்தப் பாடசாலைக் கட்டடம் சுமார் 7 மில்லியன் ரூபா செலவில் நிறுவனம் ஒன்றி னால் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-435)



## புனரமைக்கப்படாத வீதியால் அவலம்

முல்லைத்தீவு, ஜூன் 25
நீண்ட காலமாகப் புனரமைக் கப்படாத நிலையில் காணப் படும் கணேசபுரம் வீதியில் பயணிப்பதில் மக்கள் கடு மையான சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
கணேசபுரத்தை அண்டிய கிராம மக்கள் மரக்காரம்பளை ஊடாக நெளுக்குளம், வவுனியா நக ரம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரதான பாதையாக சுமார் 5 கிலோ மீற்றர் நீள மான இந்த வீதி காணப்படு கின்றது. ஆனால் இந்த வீதி இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் குண்டும் குழியு மாகக் காணப்படுவதால் மழை காலத்தில் பயணங்களை மேற் கொள்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
இதேவேளை இவ்வீதியால் செல் லும் மாணவர்களின் வெள்ளை நிறச் சீருடைகள் அழுக்காக மாறும் வகையில் அதிக புழு தியைக் கிளப்பும் பாதையாக வும் இது காணப்படுகின்றது.
மேலும் இந்த வீதியூடாகச் செல்லும் மழை நீர் வீடுகளுக் குள் புகுந்து தேங்கி நிற்பது வழமையாகும். இந்த நீரால் டெங்கு அபாயத்தை எதிர் கொள்ள வேண்டியுள்ளதாக வும், சிறுவர்கள் அந்த நீரில் விளையாடுவதால் விபத்துக் களையும், நோய்த் தாக்கத் தையும் எதிர்கொள்ளும் அபாய நிலை காணப்படுவதாகவும் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-402)



# வங்கிக் கடன்கள், பொய்த்த விவசாயத்தால் வன்னிப் பிரதேச விவசாயிகள் திண்டாட்டம்

கிளிநொச்சி, ஜூன் 25
வன்னியில் வங்கிக்கடன்களும், விவசாயத்தில் ஏற்பட்ட நட்ட மும் விவசாயிகளைத் தற் கொலை செய்யும் நிலைக்குக் கொண்டு சென்றுள்ளதாக இங்குள்ள பலரும் கடும் விச னம் தெரிவித்துள்ளனர்.
மீள்குடியமர்வையடுத்து விவ சாயச் செய்கைகளை மேற் கொண்டு வரும் விவசாயிகள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டுவருவதோடு தொடர்ந் தும் நட்டத்தையே சந்தித்து வருகின்றனர்.
கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் மீள்குடியமர்ந்த விவ சாயிகள் பல்வேறு வங்கிகளி லும் கடன்களைப் பெற்றுத் தமது விவசாயச் செய்கைகளை மேற்கொண்டனர். ஆனால் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட நோய்த் தாக்கம் மற்றும் வெள்ளப் பாதிப்புக் காரணமாக பயிர் களுக்கு அழிவுகள் ஏற்பட்ட தால் உரிய அறுவடையைப் பெறமுடியாத நிலையில் வங் கிக் கடன்களை மீளச் செலுத்த முடியாத சூழ் நிலைக்கு பல விவ சாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.
அதேவேளை அந்தக் காலப் பகுதியில் வழங்கப்பட்ட வீட் டுத் திட்டங்களுக்கும், ஏனைய தேவைகளுக்கும் குறித்த வங் கிக் கடன் நிதியைப் பயன் படுத்தியிருந்தனர். ஆனால் விவசாயமும் பாதிக்கப்பட்ட தால் வங்கிக் கடன்களை மீளச் செலுத்த முடியாத நிலை இவர் களுக்கு ஏற்பட்டுள்ளது.
இதே போன்று கடந்த ஆண்டு சிறுபோக செய்கை பாதிக்கப் பட்டதாலும் வங்கிக் கடன் களைச் செலுத்த முடியாத நிலைக்கு விவசாயிகள் தள் ளப்பட்டுள்ளனர்.
இதேவேளை, இலகு கடன் அடிப்படையில் வாகனங்களைக் கொள்வனவு செய்தவர்கள் அவற்றுக்குரிய கட்டுப்பணத் தைச் செலுத்த முடியாத நிலை யில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
இத்தகைய பல வாகனங்கள் குறித்த லீசிங் கம்பனிகளால் பறிமுதல் செய்யப்பட்டு அவற் றின் பெறுமதி மதிப்பீடு செய் யப்பட்டுள்ளதுடன் ஏனைய தொகைகளுக்கான அறவீடு களுக்காக நீதிமன்றில் வழக் குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
இதேவேளை, சில கமக்கார அமைப்புக்களின் தவறான வழிநடத்தல்கள் காரணமாக பயிர்ச்செய்கையை மேற்கொள் ளாத விவசாயிகளும் வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொண் டதுடன் அவற்றை மீளச் செலுத்த முடியாத நிலையில் உள்ளனர்.
இவ்வாறான நிலைமைகள் காரணமாக கிளிநொச்சி புளி யம் பொக்கணைப் பகுதியில் ஒரு விவசாயியும், முத்தை யன் கட்டுப் பகுதியில் ஒரு விவ சாயியும் தற்கொலை செய் துள்ளனர். சில விவசாயிகள் தற்கொலைக்கு முயற்சித்து முள்ளனர். இவ்வாறு வன்னி யின் விவசாயம் பொய்த்தமை யும் வங்கிக் கடன்களைச் செலுத்த இயலாத நிலையும் விவசாயி களைத் தற்கொலை செய்யும் நிலைக்கு கொண்டு சென்றுள்ளன. (க-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
25/06/2013

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேஷர்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**இடபர்:** இனந்தெரியாத சின்னச் சின்னக் கவலைகள் வந்து போகும். யாரும் உங்களை புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். உதவி கேட்டு தொந்தரவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.

**மிதுனர்:** உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். பிரபலங்களால் ஆதாயம் உண்டு. மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார்.

**கடகர்:** அதிகார பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். சொத்து வாங்குவது,-விற்பது லாபகரமாக அமையும். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**சிங்கர்:** நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும். நண்பர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

**கன்னி:** எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**நாளை**

ஆனி-12 புதன்கிழமை 26.06.2013
திதி: திருதியை மு.ப. 10.38 வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.இ. 10.13 வரை
சுபநேரம்: 04.25 - 05.55 வரை
இராகுகாலம்: 11.55 - 014.25வரை

**துலாமர்:** திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். விசேடங்களை முன்னின்று நடத்துவீர்கள். உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்.

**விருச்சிகர்:** மாறுபட்ட அணுகுமுறையால் பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**தனுசு:** தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் குழம்புவீர்கள். சில விடயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. மற்றவர்களை சார்ந்திருக்க வேண்டாம். உத்தியோகத்தில் உங்களைப் பற்றி வதந்திகள் வரும்.

**மகரர்:** அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும். பழைய கடன் பிரச்சனை அவ்வப்போது மனசை வாட்டும். உறவினர்களால் சங்கடங்கள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களை அனுசரித்துப் போங்கள்.

**கும்பர்:** நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். உத்தியோகத்தில் தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மீனர்:** உங்கள் செயலில் வேகம் கூடும். சில வேலைகளை விட்டுக்கொடுத்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | | 7 | | | | | 9 |
| 5 | | | 9 | 2 | | | | |
| | 3 | | 6 | 5 | 4 | | | |
| | | 7 | | 6 | 8 | 5 | | |
| 6 | 5 | | | | | | 8 | 1 |
| | | 1 | 3 | 4 | | 7 | | |
| | | | 4 | 7 | 6 | | 3 | |
| | | | | 3 | 9 | | | 6 |
| 3 | | | | | 2 | | 7 | 5 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 4 | 7 | 1 | 6 | 2 | 5 | 9 | 3 |
| 2 | 1 | 9 | 3 | 5 | 7 | 4 | 6 | 8 |
| 3 | 6 | 5 | 4 | 8 | 9 | 1 | 2 | 7 |
| 5 | 7 | 4 | 8 | 2 | 6 | 9 | 3 | 1 |
| 6 | 8 | 1 | 7 | 9 | 3 | 2 | 4 | 5 |
| 9 | 3 | 2 | 5 | 4 | 1 | 7 | 8 | 6 |
| 1 | 9 | 8 | 2 | 3 | 5 | 6 | 7 | 4 |
| 7 | 2 | 3 | 6 | 1 | 4 | 8 | 5 | 9 |
| 4 | 5 | 6 | 9 | 7 | 8 | 3 | 1 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

2ஆம் ஆண்டு நினைவுகளில்



டாக்டர்
வேலாயுதபிள்ளை
தம்பித்துரை

மண்ணில் 21 * 04 * 1946
விண்ணில் 16 * 07 * 2011

தரணியிலே பிறந்து
தாமரையாய் மலர்ந்து
அன்புக்கு அதிபதியாய்
பாசத்தின் பசுபதியாய்
ஊருக்கு வைத்தியனாய்
ஒளிவிளக்காய் இருந்தீரே
இரண்டு ஆண்டுகள் என்ன
எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
மறையாது உங்கள் நினைவுகள்

மைத்துனன்,
லக்ஸ்மி ரேடேர்ஸ்,
சாவகச்சேரி.

(C2704)(3.5.6)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகில் 31 * 08 * 1949
விண்ணுலகில் 18 * 06 * 2011



திருமதி சோதிலிங்கம் ஈஸ்வரி

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் பல நோ.கூ.சங்கம் திருநெல்வேலி)

திதி:திருதியை (25.06.2013)செவ்வாய்க்கிழமை

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ மாநிலத்தில் - வேண்டாம்.
நாமும் ஈஸ்வரித் தாய் போனவழி பின்பற்றி
உணவு இட்டுண்டு இருப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

4ஆம் ஒழுங்கை,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.
தொ.பே.: 021 373 5125

கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(58481)(3.5.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடக்கு மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி மீள் நிர்மாண அமைச்சில் இயந்திரப் பொறியியலாளராக செல்வி பி.ஜெஸ்மின் ஜெயமலர், ஆளுநரின் அனுமதியுடன் ஒப்பந்த அடிப்படையில் இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப் பட்டுள்ளதாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-288)

## சேமக்காலையை சுத்திகரிக்குமாறு அறிவுறுத்து

குருநகர், ஜூன் 25

யாழ். மரியன்னை பேராலயத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் யாழ். கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலையை துப்புரவாக வைத்திருக்குமாறு கத்தோலிக்க மக்களை யாழ். மரியன்னை பேராலயம் கோரியுள்ளது. இங்கு இறந்தவர்களின் உடல்களை புதைத்து கல்லறைகளை அமைத்துள்ளார்கள். தமக்குரிமையாகவுள்ள கல்லறைகளைச் சுற்றி வளர்ந்துள்ள புற்செடிகளை வெட்டித் துப்புரவாக்குவதுடன் இக் கல்லறைகளுக்கான உரிமத்தையும் உறுதி செய்து கொள்ளுமாறும் யாழ். மரியன்னை பேராலயம் கோரியுள்ளது. (ஒ-51)

# தனிநாயக அடிகளாரை நினைவு கூரும் வகையில் பாடசாலைகள் தோறும் விழா எடுக்க வேண்டும்

## 'தினமணி' ஆசிரியர் வைத்தியநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

உலகத் தமிழர்களை ஒருங்கிணைத்த தனிநாயக அடிகளின் பெருந்தொண்டை நினைவு கூரும் வகையில் ஒவ்வோர் ஊரிலும் பாடசாலைகள், இலக்கிய அமைப்புகள் போன்றவை விழா எடுத்து சிறப்பிக்க வேண்டும் என்று 'தினமணி' ஆசிரியர் கே. வைத்தியநாதன் கேட்டுக் கொண்டார்.

தவத்திரு தனிநாயக அடிகளின் நூற்றாண்டு தொடக்க விழா சென்னை லயோலா கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில்'' உலக அரங்கில் தமிழ் அடிகளாரின் பங்களிப்பு'' என்ற தலைப்பில் தினமணி ஆசிரியர் கே. வைத்தியநாதன் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் நினைவில் வைத்துப் போற்றத்தக்கவர்களில் இரண்டு பேர் குறிப்பிடத்தக்கவர்கள். அழிந்து கொண்டிருந்த தமிழைத் தலை நிமிரச் செய்யும் வகையில் நான்காம் தமிழ்ச் சங்கம் கண்ட பாண்டித்துரைத் தேவர் ஒருவர். மற்றொருவர் உலகில் தமிழுக்கு த்னி இடம் கிடைக்க வழிகோலிய தனிநாயக அடிகளார். பாண்டித்துரைத் தேவர் கடந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும், தனிநாயக அடிகளார் பிற்பகுதியிலும் பெரும் பங்களிப்பு நல்கினர்.

உலகெங்கும் சென்று தமிழின் சிறப்பைப் பற்றி பேசியமை மற்றும் எழுதியதுடன் அடிகளாரின் தமிழ்ப் பணி நின்று விடவில்லை. அமெரிக்காவின் 8 பல்கலைக்கழகங்களில் வடமொழி, பாளி, பிராகிருதம் போன்ற மொழிகளுக்கு துறைகள் இருந்தபோது தமிழுக்கு ஒரு பல்கலைக் கழகத்தில் கூட துறை இல்லை என்ற நிலைமை மாறி, இன்று உலகின் தலைசிறந்த 20 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் தமிழுக்கென தனித் துறை இருப்பதற்கு தனிநாயக அடிகளும், அவர் நடத்திய உலகத் தமிழ் மாநாடுகளுமே காரணமாகும். 1966 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி முதல் 23-ம் திகதி வரை மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் முதல் உலகத் தமிழ் மாநாட்டை தனிநாயக அடிகள் நடத்தினார்.

உலகத் தமிழ் மாநாடு எப்படி நடத்தப்பட வேண்டும் என்று தனி நாயக அடிகளால் உருவாக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றித்தான் இப் போதும் உலகத் தமிழ் மாநாடுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ் மொழியின் எதிர்கால வளர்ச்சி குறித்து அடிகளார் ஐந்து திட்டங்களைக் கொண்டிருந்தார். உலகில்எங்கு சென்றாலும் தமிழ் உரையாட லுக்கென ஒருபொதுஒலிப்புஇருக்க வேண்டும், புதுமைஇலக்கியங்களைப் படைக்க பண்டை இலக்கிய அறிவு மிகவும் அவசியம் என்ற தெளிவு எம்மிடம் வேண்டும், தமிழ் இதழ்களில் இலக்கியப் பங்களிப்பு இருக்க வேண்டும், ஆங்கிலக் கலப்பு இல்லாமல் தமிழ் பேசப்படவேண்டும், அந்தந்த கால கட்டத்தில் இருந்த வழக்கத்தை அப்படியே கொள்ளுதல் வேண்டும் என்பன அடிகளாரின் ஐந்து முக்கிய கருத்துகளாகும். உலக அரங்கில் தமிழுக்கு மரியாதை ஏற்படுத் திக் கொடுத்த அந்த மாமனிதருக்கு ஒவ்வொரு தமிழனும் நன்றிக் கடன்பட்டிருக்கிறான் என்பது தான் உண்மை என்றார்.(எ)


## உபநயன ப்ரம்மோபதேச அழைப்பு



அன்புடையீர் !

காசியபகோத்திரம்
சிவஸ்ரீ. சோ. சுப்பிரமணியக்குருக்கள்
பத்மாவதியம்மா தம்பதிகளின்
பௌத்திரனும்

ஸ்ரீவத்சகோத்திரம்
யாழ்/ பிறவுன் வீதி
பிரம்மஸ்ரீ. ந. ராமகிருஷ்ணசர்மா
ஜெகதீஸ்வரி அம்மா
தம்பதிகளின்
தௌஹித்திரனும்

எமது ஏகபுத்திரனுமாகிய

**சிரஞ்சீவி. சாய்ராம்சர்மா**

அவர்களுக்கு

இல.101.
024-2220464 / 0777498654

தங்கள் நல்வரவை நாடும்
திருமதி. க. பத்மாவதியம்மா
பிரம்மஸ்ரீ. க. கிருபாகரசர்மா
ஸ்ரீமதி. கி. சசிரேகா தம்பதிகள்
சாய்மீரா (38281)

SCHWARZE HEIDE 14,30419
HANNOVER, GERMANY.
T.P.NO HOME : 00495117590173
MOBILE : 00491747770661



## பாடசாலையில் இருந்து விலகிய மாணவர்கள் மற்றும் தொழில் வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான ஓர் அரிய வாய்ப்பு!!!

### மாதாந்தம் ரூபா 10,000 கொடுப்பனவுடன் கூடிய நான்கு மாதகால இலவச தொழிற் பயிற்சி

**கட்டடத் தொழில் [மேசன்], மரவேலைத் தொழில், வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்தும் தொழில்களுக்கான இலவசப் பயிற்சிகளும் எதிர்காலத்திற்கான தொழில் வாய்ப்பும்**

வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களது அறிவுறுத்தலுக்கமைய வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் காணப்படும் தொழிலாளர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தல் என்ற அடிப்படையில் 1000 இளைஞர்களிற்கு தொழிநுட்பத்திறன் விருத்திப் பயிற்சியூடாக தொழில் வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தும் வகையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் வடமாகாண தொழிற்துறைத் திணைக்களமும் இணைந்து வேலைவாய்ப்பிற்கான தொழிநுட்பத திறன் விருத்திப் பயிற்சியை வழங்க நடவடிக்கை எடுக்கபபட்டுள்ளது.

**பயிற்சியில் இணைவதற்கான தகைமைகள்:**

- ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்
- வயதெல்லை - 18 - 35 வருடங்கள்
- கல்வித்தகைமை - 8ஆம் வகுப்புக் கல்வி பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்
- தொழில் செய்வதற்கு ஆர்வமும் விருப்பமும் உள்ளவராக இருத்தல் வேண்டும்

**கற்கைநெறியின் பின்னர்**

- தேசிய தொழிற் தகைமை சான்றிதழ் (NVQ -3) வழங்கப்படும்
- பயிற்சி நெறியின் பின்பு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த வாய்ப்பு

❖ **வீட்டுத்திட்ட பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

பயிற்சி நெறி எதிர்வரும் யூலை மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால் பயிற்சி பெற விரும்புபவர்கள் தங்களது பூரணப்படுத்தப்பட்ட சுயவிவரத்தினை 05.07.2013 ஆம் திகதிக்கு முன்பாக **பணிப்பாளர், தொழிற்துறைத் திணைக்களம், வடமாகாணம், கைதடி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: **பயிற்சி பெற விரும்பும் மாவட்டத்தின் பெயரையும் விரும்பும் பயிற்சி நெறியின் பெயரையும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.**

**தொடர்புகளுக்கு:**
**பணிப்பாளர்,**
**தொழிற்துறை திணைக்களம்,**
**வட மாகாணம், யாழ்ப்பாணம்**

**தொலை பேசி:**
021 320 2413 - தலைமை அலுவலகம்
021 321 7577 - கிளிநொச்சி
021 321 7576 - முல்லைத்தீவு
024 222 3083 - வவுனியா
021 222 3546 - யாழ்ப்பாணம்
023 222 2418 - மன்னார்

(சி/9984)(3.5.6)



## FOR HIRE/வாடகைக்கு விடப்படும்



JCB(Backhoe), Dozer(D4E & mini), Exavator with Braker (heavy&Light), Tractor with Trailer or Carrier, Lorry with full body, Half body, With out body, Water bowser, Concrete mixture,Contract for Land Cleaning, Land Scaping, Fencing and Planting.

எம்மால் கனரக இயந்திரங்கள் மூலம் நிலம் சுத்தமாக்கல், வடிவமைத்தல், வேலியிடல், மரநடுகை என்பனவும் செய்து கொடுக்கப் படும். (38301) (5.6.7)

தொடர்பு:0722263778,0714167878

## தவறிவிட்டது

யோகநாதன் நிர்மலா என்பவருடைய தே.அ.அட்டை (455123097v) 22.06.2013 சனிக்கிழமை கொக்குவிலுக்கும் கொழும்புத்துறைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:021 205 1072 (38625)(3.6.11)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

50 நாள்கள் நிரம்பிய Boxer குட்டிகள் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 021 205 5323 (38631) (3.6.7.11)

## தவறிவிட்டது

வேதவிநாயகம் ரோஷாந் என்பவருடைய தே.அ. அட்டை (930723673V) சாரதி அனுமதிப்பத்திரம் என்பன சங்கானை சந்தைக்கும் சங்கானை பலநோ.கூ சங்கத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 075 042 8910 (38630) (3.6.7.11)

## சோதிடம்

ஜாதகம், கைரேகை, எண் சோதிடம், திருமணப் பொருத்தம் என்பன பார்ப்பதற்கு தொடர்பு கொள்ளவும்.

சிவா சோதிட நிலையம்,
100, அரசடி வீதி, நந்தாவில்.
077 899 6281 (38609)(3.6.11)



## வாழ்த்துகின்றோம்

துவாளி வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த

**கனகரத்தினம் ஜீவானந்தன்**

(முன்னாள்முகாமைத்துவ உதவியாளர், நகராட்சி மன்றம் சாவகச்சேரி முகாமைத்துவ உதவியாளர், நகராட்சி மன்றம் வல்வெட்டித்துறை)



பருத்தித்துறைமாவட்ட நீதிபதி கௌரவ ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் முன்னிலையில் 30.05.2013 வியாழக் கிழமை அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையினை முன்னிட்டு அவரை மனதார வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**தவிசாளர், செயலாளர், உத்தியோகத்தர்கள்**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**

(C/2705) (3.6.7.11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி அசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப.3 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ-9)

கிராபிக்ஸ், அனிமேஷன் கல்விக்கான புலமைப்பரிசில்



WIN 65% SCHOLARSHIP

மல்டிமீடியா புலமைப்பரிசில்

- பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
- விரும்பிய மொழியில் பரீட்சை
- அடிப்படைத் தகைமை Grade 10
- வினாத்தாள் 30 நிமிடங்கள் மட்டுமே
- கலை, சினிமா, பொது அறிவு வினாக்கள்
- இலவச பாடநூல்கள் (இந்தியா)
- தவணைமுறை கட்டண வசதி (C-9988)

இலவச புலமைப் பரிசில் பரீட்சை
July 6th & 7th

CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 - 2008 CERTIFIED TRAINING INSTITUTION

யாழ்.நகரில்
2G, ஸ்ரான்லி வீதி,
T.P : 021-222 5677

சாவகச்சேரியில்
கட்டுக்கானி வீதி
T.P : 021-2270267

வவுனியா
குருமன்காடு சந்தி
மன்னார் வீதி
T.P : 021-2262399

வீடுகள், அலுவலகம், காட்சியறை மற்றும் தொழிற்சாலைகள்

CCTV
Security Camera Solutions

Catch Them!



(C-9989)

உங்கள் பாதுகாப்பே ....
எங்கள் சேவை..
நாம் 16 வருட சேவையில்

ஒரே கூரையின் கீழ் எமது சேவைகள்.
* Computer Network & Maintenance, Internet, Router, ADSL Setup
* Computer, Printer, Laptop, UPS, LED & LCD Monitor Repairs.

MICRO PC SYSTEMS

யாழ்ப்பாணம் :- 021 2225893
வவுனியா :- 024 2221969
திருகோணமலை :- 026 2226977
நெல்லியடி :- 021 2262929
கிளிநொச்சி :- 021 2285593
கொழும்பு :- 077 3963285

DEALER & WHOLESALE INQUIRIES- 077 778 8929 PROJECT & CORPORATE INQUIRIES- 077 548 7146 HOME & SMALL BUSINESS INQUIRIES- 077 396 3284

தெரேசியன் மலர்களை வாழ்த்துகின்றோம்

யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி - அச்சுவேலி

பரிசுத்தினம் - 2013



2 AB
மாவட்ட நிலை 7

செல்வி ஜொஸ்லின் நிவேதா கெமில்ரன்

2011ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று பல்கலைக்கழத்திற்குத் தெரிவான மாணவிகளையும் 2012 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவிகளையும் பரிசுத்தின விழாவின்போது பாராட்டி வாழ்த்துகின்றோம்.

2011 இல் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானோர்

செல்வி அனற்றொய்சி அன்ரனி அருள்தாஸ்
செல்வி சாதுரி பவானந்தன்
செல்வி அருள்பிரியா அமிர்தநாதன்
செல்வி மேரிஜான்சிகா லோறன்ஸ்
செல்வி கார்த்திகா மகேஸ்வரதாசன்
செல்வி கஜிதா உதயகுமார்
செல்வி யஸ்ரினா ஜான்சி அருட்பிரகாசம்
செல்வி ராசிகா சிவஞானம்

(C/8811)(45.3.6)



2012 இல் சிறந்த பெறுபேறு பெற்றவர்கள்

செல்வி ஜொஸ்லின் நிவேதா கெமில்ரன் 2AB
செல்வி கஜிதா உதயகுமார் 2AB
செல்வி மேரிஜெனந்தினி கஜித்தான் A2C

பாடசாலைச் சமூகம்
யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி - அச்சுவேலி

## சிமெந்து மூடைகள் விழுந்து பணியாளர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

மயிலிட்டி இறங்கு துறையில் கப்பலில் இருந்து சிமெந்து மூடைகளை இறக்கிக் கொண்டிருந்த போது பணியாளர் ஒருவர் மீது சிமெந்து மூடைகள் விழுந்ததால் படுகாயமடைந்த அவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது. வரணி இயற்றாலை, தாவளையைச் சேர்ந்த சிவஞானம் கணேசன் (வயது-36) என்பவரே காயமடைந்தவராவார்.

கப்பலிலிருந்து சுமார் 20 மூடைகளை இணைத்துக் கட்டி அதனை (க்றேன்) பாரம்தூக்கி மூலமாக கரைக்கு நகர்த்திய போதே இணைத்துக்கட்டப்பட்ட கயிறு (சிலிச்) அறுந்து கடலில் பாதையில் நின்றிருந்த குறித்த பணியாளர் மீது விழுந்துள்ளது. சம்பவ இடத்திலேயே அவர் மயக்கமடைந்தார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். (வ-4-36)

## சாரதிக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூன் 25

வழி அனுமதியின்றி வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணிகளை ஏற்றி வந்த பயணிகள் வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

வீதிச் சோதனையில் ஈடுபட்ட பொலிஸாரால் வழி அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றி வந்த சாரதிக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

பருத்தித்துறையில் புதிதாக ஆரம்பிக்க உள்ள வியாபார நிறுவனத்திற்கு

?

பின்வரும் பணிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

01. களஞ்சியக் காப்பாளர்: (ஆண்கள் மட்டும்)
தகைமைகள்:
* க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி (G.C.E. A/L).
* களஞ்சியக் காப்பாளராகப் பணியாற்றிய அனுபவம்.
* வயது 25 - 50 வருடங்கள்

02. கொள்வனவு அலுவலர்: (ஆண்கள் மட்டும்)
தகைமைகள்:
* க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி (G.C.E. A/L).
* கொள்வனவில் அனுபவம்.
* பயணம் செய்யக்கூடியவராக இருக்கவேண்டும்.
* வயது 25 - 40 வருடங்கள்

03. விற்பனை/களஞ்சிய/அலுவலக உதவியாளர் (இருபாலாரும்)
தகைமைகள்:
* க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தி (G.C.E. O/L).
* வயது 25 - 35 வருடங்கள்
* உறுப்பெழுத்து உடையவராக இருக்கவேண்டும்.
* கணினி அறிவுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

04. பணி மேற்பார்வையாளர்கள் (இருபாலாரும்)
தகைமைகள்:
* க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியுடன் நான்கு வருட பணி அனுபவம் அல்லது க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் சித்தியுடன் இரண்டு வருட பணி அனுபவம்.
* வயது 25 - 40 வருடங்கள்
* உறுப்பெழுத்து உடையவராக இருக்கவேண்டும்.
* கணினி அறிவுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

05. விற்பனை/களஞ்சிய/அலுவலக உதவியாளர் பயிலுநர்கள் : (இருபாலாரும்)
தகைமைகள்:
* க.பொ.த. சாதாரண தரம் படித்திருத்தல் வேண்டும்.
* ஆற்றலும் விவேகமும் உள்ளவர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.
* கணினி அறிவுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
* வயது 18 - 30 வருடங்கள்

06. காசாளர்: (இருபாலாரும்)
தகைமைகள்:
* க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தி (G.C.E. A/L).
* ஆங்கிலம் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தி.
* அனுபவத்தின் அடிப்படையில் முன்னுரிமை.
* கணினி அறிவுக்கு முன்னுரிமை
* வயது 20 - 30 வருடங்கள்

07. உதவிக் கணக்காளர்/ கணக்காய்வாளர்: (இருபாலாரும்)
தகைமைகள்:
* (H.N.D.A) / (A.A.T)
* வயது 20 - 30 வருடங்கள்

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

சொ. தவராசா
இல. 15, தும்பளை வீதி,
(தபால் அலுவலகத்திற்கு அருகில்)
பருத்தித்துறை.

முக்கிய குறிப்பு: 05.07.2013 இற்கு முன்பாக பூரண சுயவிவரங்களுடன் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறல் வேண்டும்.

(f/9987) (45.6.7.3)



சரவணா ரெக்ஸ்
பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி
முற்பகல் 10 மணி முதல் இரவு 10 மணிவரை
கடை திறந்து இருக்கும்



சரவணா ரெக்ஸ்
01, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகை மதிப்பீட்டு செயலமர்வு

வடமாகாண பாடசாலைகள் தொகை மதிப்பீடு 2013 தரவு சேகரிப்பதற்கான முன்னாயத்த செயலமர்வு நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.
செயலமர்வில் வடமாகாணத்துக்கு உட்பட்ட வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அலுவலர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ந-ரி)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா சண்முகரட்ணம்
(இளைப்பாறிய பிரதம இலிகிதர்
யா/தொழிற் திணைக்களம்)
மலர்வு:- 16.11.1936
உதிர்வு:- 20.06.2000

எம் குல விளக்கே
ஆண்டுகள் பதின்மூன்று போனதையா
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நீங்காது உங்கள் நினைவுகள்
வானுலகம் சென்றாலும்
அரனடியில் இருந்து
ஆசி கூறுங்கள்
ஓம் சாந்தி.

29,விபுலாநந்தர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

மனைவி, மகன், மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஆறாம் ஆண்டு நினைவுகளில்



தோற்றம்
15.04.1933

மறைவு
03.07.2007

அமரர் நேசம்மா அப்புத்துரை

திதி: திருதியை

ஆண்டுகள் ஆறு கடந்தாலும்
ஆறாது உங்கள் நினைவுகள்
நித்தம் நித்தம் கண்ணீரில் எமை நனைய விட்டு
தினம் தினம் உங்கள் கதையைப் பேசவிட்டு
மௌனமாக எங்களை விட்டு பிரிந்த மாயம் என்ன? குல தெய்வமே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவன் பாதம் பணிகின்றோம்

அம்பகர் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (38601)(3.6.11)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
தம்பு குமாரசாமி

அன்பின் உறைவிடமே!
அறிவின் சுடரொளியே!
அமைதியின் திருவுருவமே
அணையா விளக்காய் நின்று - எங்கள்
அனைவரையும் காத்த தெய்வமே!

தோற்றம்
11.09.1935
மறைவு
26.05.2013

இறுதிமட்டும் நீங்கள்
உறுதி கொடுத்து எமக்காக வாழ்ந்தீர்கள்
இயமன் வந்தபோதும் உங்கள்....
இருகரத்தால் தாங்கினீர்களே அப்பா!

வறுமை வாட்ட..... வாட்ட
வரம் கொடுத்த கடவுளே!!
வானம் பார்க்க போனீர்களோ? இல்லை

எமக்காய் வரம் வாங்கத்தான் - போனீர்களோ
புனிதம் கொண்ட உங்கள் ஆத்மா
சாந்தி அடைந்து என்றும் எம்மோடு வாழட்டும்!!!

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

## யாழ்.செஞ்சிலுவையில் 750 தொண்டர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 25
இடர்கள் ஏற்படும் பட்சத்தில் சேவை யாற்றக் கூடியதாக விசேட பயிற்சி பெற்ற தொண்டர்கள் 32 பேர் உள்ளனர் என்றும் தொண்டர் சேவையில் மேலும் 750 பேர் யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தில் உள்ளனர் என்றும் யாழ். கிளைத் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.
விசேட சேவையில் உள்ள தொண்டர்கள் இடர்களின் போது தொடர்ந்து நான்கு வாரங்கள் சேவையாற்றுவார்கள் என்றும் பணக் கொடுப்பனவு பெறாது சேவையாற்றும் தொண்டர்கள் இவர்கள் என்றும் அவர் கூறினார். (ஓ-7)

## கும்பாபிஷேக தின அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 25
தெல்லிப்பழை கிழக்கு குருநாத சுவாமி ஆலய கும்பாபிஷேக தின அலங்காரத் திருவிழா நாளை புதன்கிழமை காலை 8மணிக்கு சங்காபி ஷேகத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளன. (ந)

## பரிசளிப்பு விழா

தென்மராட்சி, ஜூன் 25
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு கல்லூரி திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.
கல்லூரி முதல்வர் க.அருந்தவ பாலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் சி.உ தயகுமார் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி உ தயகுமார் வழங்குவார். (வ-9)

## நற்கருணை ஆண்டவர் சிற்றாலயம் திறப்பு

குருநகர், ஜூன் 25
குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நற்கருணை ஆண்டவர் சிற்றாலயம் கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது. இந்த திறப்பு விழாத் திருப்பலியை தூய மார்ட்டினார் குருமடத்தைச் சேர்ந்த வண. பிதா சாள்ஸ் அடிகளார் ஒப்புக் கொடுத்தார்.
இந்த நற்கருணை ஆண்டவர் சிற்றாலயம் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் உட்புறத்தில் தென் மேற்கு மூலையில் அமைந்துள்ளது. (எ-51)

## மெய்வன்மைப்போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 25
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சு.தியாகலிங்கம் தலைமையில் நடை பெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் கலந்து கொள்வார். (ந)

## தொழில்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் தகவல் தொழில் நுட்பம், வீட்டு மின்னிணைப்பு, முக அலங்காரம், அலுமினியம் பொருத்துதல் ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
சுன்னாகம், பிரான்பற்று, கரவெட்டி ஆகிய தொழில்பயிற்சி நிலையங்களில் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க ஆர்வமுடையவர்கள் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை, மின்சார நிலைய வீதி, சுன்னாகம் எனும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பலாம். (ந-14)

## செஞ்சிலுவைச் சங்கத்தின் தொழிற்பயிற்சி கொடுப்பனவாய் ரூபா 10 ஆயிரம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வட பகுதியில் ஆயிரம் பேருக்கு மேசன், தச்சுவேலை, மின்னிணைப்புக்கான பயிற்சிகளை வழங்கவுள்ளது. இதில் யாழ்ப்பாணத்தில் கைதடியில் 125 பேருக்கும், காரைநகரில் 50 பேருக்கும், மருதங்கேணி யில் 75 பேருக்கும் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் கு.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.
இந்தப் பயிற்சி நெறிகளில் 18 முதல் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் கலந்து கொள்ள முடியும். இந்திய வீட்டுத் திட்டத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமைவழங்கப்படும். பயிற்சி நெறிகளில் கலந்து கொள்பவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மாதம் ரூபா 7 ஆயிரமும், மாகாண சபை ரூபா 3 ஆயிரமும், வழங்கவுள்ளது. இதன் மூலம் ஒருவர் மாதம் ரூபா10 ஆயிரத்தைப் பெறமுடியும். (ந-7)

## 15 ஆவது பிறந்த தினமும் 70 ஆவது மாத நினைவஞ்சலியும்





செல்வன்
கண்ணதாசன் ரஜந்தன் (அன்பு)
(தரம் - 4 மாணவன்
யா/இணுவில் இந்துக் கல்லூரி)

அன்னை மடியில்
25.06.1998

பரமன் அடியில்
30.08.2007

அகவை பதினைந்து ஆனாலும்,
உன் முகம் காணாமல் தவிக்கின்றோம்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்.
மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு, இணுவில்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



டேவிற் அல்வின்

பிறப்பு
1946.04.07

இறப்பு
2011.06.25

ஆண்டுகளிரண்டு அகன்று
சென்றிடினும் ஆயிரமாண்டு
கடந்து சென்றிடினும் - உம்
நினைவு மட்டும் - எம்மில்
நிலைத்து நிற்குமையா

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.
இல.60/4, சொலமன் வீதி,
யாழ்ப்பாணம்.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்...



அமரர் கந்தசாமி மனோன்மணி
(முறிவு நெரிவு வைத்தியர்)

முந்நூறு நாள் தவமிருந்து எம்மைப் பெற்றெடுத்த முத்தாரமே!
மூன்றே விநாடியில் எமை மறந்து போனாயோ?
பூ முடித்த தலைவன் இங்குபூமியிலே தவிக்கின்றான்
பூவோடும் பொட்டோடும்-நீ நிம்மதியாய் தூங்குகின்றாய்
ஆண்டு தோறும் தேடுகிறோம் மாண்டு போன உன் வதனத்தை
மீண்டும் வர மாட்டாயா? என்று
ஏங்குகின்றோம் உனை நினைத்து-----
மூன்றாண்டு ஆனாலும் முடியவில்லை எம் சோகம்

பாடசாலை வீதி,
கட்டுடை, மானிப்பாய்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(38587)(3.6.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பாடத்தில் தேர்ச்சி பெற்றால் ஆளுமைப் பண்பு அதிகரிக்கும்

## யாழ்.மத்திய கல்லூரி அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் சிறந்து விளங்குகின்ற மாணவர்கள் சிறந்த ஆளுமைப் பண்பினையும் தலைமை தாங்கி செயலாற்றுகின்ற திறனையும் பெற்றுக் கொள்பவர்களாக உருவாக்கப்படுகின்றனர் என்று யாழ். மத்திய கல்லூரியின் அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தெரிவித்தார்.

யாழ். மத்திய கல்லூரியின் முன்னாள் சாரணர் குழுத்தலைவர் அமரர் வீ.ஜெகதீஸ்வரன் ஞபகார்த்தமாக கல்லூரியின் சாரணர் குழுத்தலைவர் எஸ்.ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெற்ற சாரணர் பாசறை நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளுமைத்திறனில் சிறந்தவர்களாக விளங்குவதற்கு மாணவர்கள் கல்வியுடன் இணைப் பாடவிதான செயற்பாட்டிலும் ஈடுபாடுடையவர்களாக விளங்கவேண்டும். இதனூடாகவே சிறந்த ஆளுமை மிக்க இளம் சமுதாயம் ஒன்றினை உருவாக்கிக்கொள்ள முடியும்.

சாரணியத் துறையானது உலகளாவிய ரீதியில் சிறப்புப் பெற்று விளங்குகின்றது. சிறப்பு மிக்க ஆளுமைப்பண்பு மிக்க மாணவ சமுதாயத்தினை உருவாக்குகின்ற செயற்பாட்டினை சாரணியத்துறையானது மேற்கொண்டு வருகின்றது.

இன்றைய சமூக சூழலில் மாணவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒருவகையான ஆளுமைச் சிறப்பு கொண்டவர்களாக விளங்குகின்றார்கள். ஒவ்வொரு மாணவர்களிடமும் மறைந்துள்ள ஆளுமைத்திறன் வெளிப்பாடுகளைக் கண்டறிவதற்கான செற்பாடுகளை மேற்கொள்பவையாக பாடசாலைகளின் மன்றங்கள், கழகங்கள் விளங்குகின்றன.

மாணவர்கள் ஒவ்வொருவரும் பாடசாலையில் உள்ள ஏதோ ஒரு மன்றத்திலோ, கழகத்திலோ தம்மை அங்கத்தவர்களாக்கி தங்களுடைய திறன்களை வெளிக்கொண்டு வரவேண்டும். மாணவர்களின் திறன்களை வெளிக் கொண்டு வருகின்ற செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு ஆசிரியர்கள் தயாராக உள்ளார்கள். மாணவர்கள் பாடசாலைக் காலத்தில் இவற்றைச் சரியாகப்பயன்படுத்தி எதிர்காலத்திற்கு உரியவர்களாக தங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

சாரணியன் ஆனவன் சிறந்த மனிதப் பண்பு கொண்டவனாக விளங்குகின்றான். இச்சாரணியத்தில் அங்கம் வகிக்கின்ற மாணவர்கள் தங்களை எதிர்கால சமூகத்திற்கு ஏற்றவர்களாக உருவாக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை சாரணியப் பயிற்சிப் பாசறைகள் வழங்குகின்றன. இவற்றை சரியான வகையில் இனங்கண்டு பயன்படுத்தி மாணவர்கள் சிறந்த சாரணிய மாணவர்களாக உருவாக வேண்டும் என்றார். (எ)

## சீரணி நாகபூசணி மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை இடம் பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம் பெறும்.

மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். (ஒ-14)

## மரண அறிவித்தல்

### பொன்னு சதியகுமார்



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னு சதியகுமார் (23.06.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னு மற்றும் தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மன்மதியின் அன்புக் கணவரும் மன்மிதா.பிணுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2013) புதன் கிழமை இத்தாலியில் பூதவுடல் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கற்பகப்பிள்ளையார் வீதி,*
*உரும்பிராய் வடக்கு.*
*0776556689*

(38640)

தகவல்:
*M.ஐயம்பிள்ளை*
*(மைத்துனர்)*

## மரண அறிவித்தல்

### திருமதி மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை



புங்குடுதீவு, 8ஆம் வட்டாரம், மடத்து வெளியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வதிவிடமாகவும் தற்போது கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட மங்கையற்கரசி குலசேகரம்பிள்ளை அவர்கள் 22.06.2013 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - அமராவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், குலசேகரம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், பிரேமராணி (கனடா), கலாராணி (ஆசிரியை, கொ/பம்பலப் பிட்டி இந்துக் கல்லூரி), மிதிலாராணி (கனடா), காலஞ்சென்ற பாஸ்கரன் மற்றும் முரளிகரன் (முரளி, கமநல சேவைகள் நிலையம், கைதடி), அனுராகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்றவர்களான வரராஜசிங்கம் (முன்னாள் அதிபர்), மனோன்மணி மற்றும் கனகாம்பிகை (முன்னாள் ஆசிரியை), தனபால சுந்தரம் (முன்னாள் ஆசிரியர்), காலஞ்சென்ற கைலாயநாதன் மற்றும் திருஞானம் (திரு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயகுமார் (கனடா), சுரேஷ்குமார் (குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் - கொழும்பு), ரவீந்திரன் (கனடா), மதிவதனி (ஆசிரியை - யா/கொக்குவில் கிழக்கு, நாமகள் வித்தியாலயம்), நளினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், ஞானம்மா (முன்னாள் ஆசிரியை), திருநாவுக்கரசு சண்முகநாதன் (C.O), ஞானவல்லி (முன்னாள் ஆசிரியை), சந்திரகுமாரி (ஆசிரியை - மு/புதுக்குடியிருப்பு ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்), காலஞ்சென்றவர்களான பொன்னம்மா மயில்வாகனம், தம்பிப்பிள்ளை (ஆசிரியர்), நடராஜா, முத்துத்தம்பி ஆகியோரின் மைத்துனியும், வைதினி, வைஷ்ணவி, கிஷாஜினி, துஷாஜினி, சாயுகன், அபிஷேக், சௌமியா, அகிஷன், அரண்யா, சரண்யா, வைநிலா, ஆரன், சபரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2013) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

53/6, அன்னசத்திரலேன்,
பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(38624) (45.6.3)

தொ.பே. 077 498 6983,
077 758 4132

## கண்ணீர் அஞ்சலி



எமது கரைச்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தின் முன்னைநாள் காவலரும், தற்போது கிளை முகாமை யாளராகப்பணியாற்றும் சேவகன் செல்வன் (சூட்டி) அவர்களின் அன்புத் தந்தையுமான

**அரசரத்தினம் சேவகன் (சிவம்)**

அவர்களுடைய மரணச் செய்தி அறிந்து மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும்அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

**துயர் பகிர்வோர்:**
பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்,
கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.ச. வட்டக்கச்சி

(37464) (5.6.7)

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை புவனதேவி

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை புவனதேவி நேற்று (24.06.2013) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-இரத்தினேஸ்வரி அம்மா தம்பதியரின் செல்வப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான அருணாசலம்-சிவாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும், வேணியின் அன்புத் தாயும், Dr.காண்டீபனின் (தேசிய வைத்திய சாலை,கொழும்பு) அன்பு மாமியும், அபிராமின் அன்புப் பேர்த்தியும், மனோராஜன், சரோஜினிதேவி, சிவஞானதேவி, மங்களேஸ்வரி (UK), காலஞ்சென்ற மகிழ்ராஜன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,செல்வரஞ்சிதம், மகாலிங்கம் (UK), கமலாதேவி(ஆசிரியை, வட்டு.இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொற்றுத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வேணி (மகள்)
077 3975523
Dr.க.காண்டீபன்
(மருமகன்)-
077 504 0519

வட்டுக்கோட்டை தெற்கு,
வட்டுக்கோட்டை.

(38635)(3.5.6.7)

### செல்லப்பா பத்மநாதன்

(முன்னாள் மெக்கானிக்கல் போமன்-பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனம்)



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கைதடி நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பத்மநாதன் 23.06.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் - கண்ணகைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் அன்புக் கணவரும், நயனவதி (ஆசிரியர், யா/நாவற்குழி ம.வி) அவர் களின் அன்புத் தந்தையும், குகராஜ் (தாதிய உத்தியோகத்தர்- யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் அன்பு மாமனாரும், காயத்ரி (மாணவி- A/L 2013 யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாட சாலை) அவர்களின் பேரனும், காலஞ்சென்ற பூங்கோதை மற்றும் பாலசிங்கம், கனகலிங்கம், இராஜேஸ்வரி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அன்னபூரணம் மற்றும் சிவகாமி, சிவபாக்கியம், துரைராசா, காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் செல்வரட்ணம் தவமணி, குணபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், சிவசுப்பிரமணியம், விசுவலிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.06.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.30 மணியளவில் தகனக்கிரியைக்காகப் பூதவுடல் குச்சப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கைதடி, நுணாவில்,**
**சாவகச்சேரி.**
**தொடர்பு: 0775589147-0776911678**

(38619)(10.6.3)

தகவல்:
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## வடக்கு மாகாண பிரகடனத்தில் ஜனாதிபதி நாளை கையொப்பம்

வடக்கு மாகாண சபைக்கு முதன் முதலாக தேர்தல் நடத்தப்படவுள்ளதால், மாகாண சபையை உருவாக்கும் பிரகடனம் மற்றும் மாகாண சபைக்கான தேர்தலை நடத்தும் உத்தரவுகளில் ஜனாதிபதி கையொப்பமிட வேண்டும்.

தன்சானியாவுக்குப் பயணம் செய்யவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதற்கு முன்னதாக மேற்படி பிரகடனங்களில் கையொப்பமிடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, தேர்தல்கள் ஆணையாளர் எதிர்வரும் ஜுலை 19ஆம் திகதி தொடக்கம் ஜுலை 25ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மாகாண சபைத் தேர்தலுக்கு வேட்பு மனுக்களைச் சமர்ப்பிக்கக் கோரும் வர்த்தமானி அறிவித்தலை ஜுலை மாதம் 5ஆம் திகதி வெளியிடுவார்.

இதேவேளை, செப்ரெம்பர் 7ஆம் திகதி வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்தபோதும் தற்போது அதனை இரு வாரங்களுக்கு ஒத்தி வைத்து செப்ரெம்பர் 21ஆம் திகதியே தேர்தலை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிய வருகிறது. (ஙு-5)

## '13' இல் கை வைத்தால் கச்சதீவு கைமாறும்

கீழ், மாகாண பொலிஸ் திணைக்களங்கள் இருந்தால் பிரச்சினை இல்லை.

13ஆவது திருத்தத்தினூடாக அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து மாகாணசபை முறைமையை சக்திப்படுத்த வேண்டும். இதனூடாக சிறுபான்மையினருக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளித்து அவர்களுடன், இணைந்து நாம் செயற்படுகின்றோம் என்பதை நாம் சர்வதேசத்திற்கு உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன், உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் எமக்குச் சாதகமான நிலைமைகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும். - என்றார்.

**அமைச்சர் ராஜித சேனாரட்ண**

இதன்போது அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்ததாவது, டொனமூர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டபோது தமக்குத் தனி இராச்சியம் வேண்டுமென உடரட்ட சிங்கள மக்கள் கோரினர். ஆனால் தமிழர்களோ நாட்டைப் பிரிக்க வேண்டாம் என்று கூறினர். 13ஆவது திருத்தம் நீக்கப்பட வேண்டுமென்று பலர் கூறுகின்றனர். அத்துடன் அது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் கூறுகின்றனர். உலகில் எந்த நாட்டில் ஒரு அரசமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட்டு 26 வருடங்களின் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது?

அன்று மாகாணசபை அறிமுகப்படுத்தப்பட்டபோது அது தமிழீழத்திற்கு வித்திடும் என்றனர். ஆனால் அவர்கள் தான் இன்று மாகாண சபையில் அமர்ந்து சிறப்புரிமைகளை அனுபவிக்கின்றனர். வடக்கு மக்களுக்காக வழங்கிய உணவுக்கோப்பையைப் பறித்து எடுத்துவிட்டு, இப்போது அவர்களுக்கு கோப்பை அல்ல ஒரு பிடி சோறு கூட கொடுக்க முடியாது என்பது புதுமையான அரசியல். இது அரசியல் தார்மீகம் அல்ல.

சிங்கள இனவாதிகள் தான் தமிழ் இனவாதிகளைப் போஷித்தனர். புலிகள் இருந்தபோது அதிகாரங்களைத் தர முடியாது என்றனர். இப்போது புலிகள் இல்லை அதிகாரங்களும் இல்லை என்கின்றனர். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன, 13ஆவது திருத்தத்தினூடாக வடக்கு மக்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்கி, மறுபுறத்தில் தேசிய பொலிஸ் திணைக்களத்தினூடாக அதைப் பறித்தெடுத்தார். அத்துடன், காணி அதிகாரத்தை வழங்கினார், ஆனால் தேசிய காணி திணைக்களத்தினூடாக அதையும் பறித்தெடுத்தார். இப்படியாக ஒரு கையில் கொடுத்து மறுகையில் பறித்தெடுத்தார். அதிகாரப் பகிர்வு தொடர்பில் இவரும் மாறுபட்ட நிலைப்பாட்டையே கொண்டிருந்தார். - என்றார்.

**அமைச்சர் டியூ குணசேகர**

இதன்போது அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்ததாவது, 13ஆவது திருத்தச் சட்டம் நாட்டு மக்களின் விருப்பத்திற்கமைய கொண்டுவரப்பட்டதொன்றல்ல எனக் கூறுகின்றனர். 1978ஆம் ஆண்டு முதல் 18 அரசமைப்புகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் மக்கள் விருப்பத்திற்கமைய நிறைவேற்றப்படவில்லை. அவ்வாறிருக்கையில் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு மட்டுமேன் எனக் கேள்விஎழுப்புவது நல்லதல்ல. நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் நாட்டின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக தமது அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவே அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இனப்பிரச்சினை தொடர்பில் அவர்களால் ஒரு இணக்கப்பாட்டுக்கு வர முடியாது. - என்றார். (ஙு-சி)

## தனித்துச் செல்வது குறித்து தீவிரமாக ஆராய்கிறது ஈ.பி.டி.பி

புடன் இணைந்து போட்டியிடுவதா என்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. எனினும் இது குறித்த முடிவுகளை நேற்று எடுக்க முடியாத நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை தனித்துப் போட்டியிடுவதா இல்லையா என்று ஈ.பி.டி.பி. தீர்மானிக்க உள்ளதாகவும் தெரிய வருகிறது. வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் 40 வீதமான ஆசனங்களையே அரசு ஈ.பி.டி.பிக்கு ஒதுக்க உள்ளதாக செய்திகள் வெளியானமை தெரிந்ததே. (ஙு- 5)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு.எம்.சிராஸ் (ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரமுகர்)
திரு.ஆயு. பி.ஆர்.ஓ
திரு.கண்ணன்






* காட்டுமலைக் கந்தசாமி கோயில் வெளிவீதிக்கு நேற்று திங்கட்கிழமை (24.06.2013) ஏழு டிப்பர் லோட் மணல் பறிக்கப்பட்டுள்ளது.
* பயித்தோலை வீதியை உடனடியாக திருத்தி அமைத்தல்
* கொள்ளையன் தூவு வீதியை உடனடியாக திருத்தியமைத்தல்
* இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கல்

ஆகிய வேலைகளை உடனடியாக மேற்கொள்ள முன்வந்திருப்பதை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கலாநிதி சனசமூக நிலையம்**
**நாவலம்பதி, அச்சுவேலி.**



# சேவை நலன் பாராட்டு விழாவும் வெள்ளி விழா சேவையாளர் விருது வழங்கல் நிகழ்வும் - 24.06.2013

*24.06.2013 உதயனில் 11ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய சேவைநலன் பாராட்டு விழாவும் வெள்ளிவிழா சேவையாளர் விருது வழங்கல் நிகழ்வும் சிறப்பு மலரில் வாழ்த்துச் செய்தி வழங்கிய துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் அவர்களின் படம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பிரசுரமாகவில்லை என்பதை அறியத்தருகின்றோம்.*



**துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி**

"செய்நன்றி மறப்பது நன்றன்று" அந்த வகையில் இந்தப் பல்கலைக்கழகத்தில் நீண்ட நாள்கள் சேவையாற்றி ஓய்வு பெறும் ஊழியர்களையும், நீண்ட காலமாகச் சேவையாற்றிவரும் ஊழியர்களையும் கௌரவிக்கும் முகமாக நடைபெறும் இந்த விழாவுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். பல இடர்கள், தடங்கல்கள் மத்தியில் தனது. வேலைத்தளத்தில் தங்களுடைய சேவை மிகத் தேவை என உணர்ந்து சேவையாற்றிய ஊழியர்களை வாழ்த்துவது சேவையாற்றிக் கொண்டிருக்கும் ஊழியர்களுக்கு. இவர்களின் கடின உழைப்பு எடுத்துக்காட்டாக அமைந்து அவர்களையும் இவ்வாறு உழைக்கத் தூண்ட வேண்டும். இளைப்பாறும் ஊழியர்கள் தமது ஓய்வு நாள்களை இன்பமாகவும், இனிமையாகவும் கழிக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்,**
**துணைவேந்தர்.**

(C/9932)(10.7.16)



# மரண அறிவித்தல்

## சரவணமுத்து சுப்பிரமணியம்

(சாவகச்சேரி மகாலட்சுமி பிக்சர் அன் பான்சி உரிமையாளரும்,
யாழ். K.K.S. வீதி, கெசியா பான்சி உரிமையாளரும்.)



சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சுப்பிரமணியம் நேற்று (24.06.2013) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் அற்புதராணியின் அன்புக் கணவரும், சத்தியா, விமலதாசன்(கெசியா பான்சி K.K.S. வீதி, யாழ்ப்பாணம்), சுரேஸ் (டோகா), பிருந்தா (கிழக்கு பல்கலைக்கழகம், சங்கீதம்), அருணன், கெசியா (மாணவியா/சாவகச்சேரி ம.கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், மார்க்கண்டு, இராசம்மா, சரஸ்வதி, தருமலிங்கம், இராஜரட்ணம், முருகையா, இரத்தினம்,கிருஷ்ணபிள்ளை (EUROVILLE, யாழ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ரமேசின் (சாரதி) மாமனாரும், கெசாயினியின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2013) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கமலாசனி வீதி,**
**சரசாலை தெற்கு,**
**சாவகச்சேரி.**

(38644) (10,7C16)

தகவல்
**குடும்பத்தினர்.**



# மரண அறிவித்தல்

## திருமதி ஆச்சிப்பிள்ளை சுந்தரம் (செல்லம்மா)



மாரீசன் கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆச்சிப்பிள்ளை சுந்தரம் (செல்லம்மா) நேற்றுமுன்தினம் (23.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - பார்வதி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற சுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், அன்னப்பிள்ளை (யோகம்மா), பாக்கியம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வள்ளிஅம்மை, திருநாவுக்கரசு, செல்லர் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற குணதாஸ் (பொறியியலாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) மற்றும் கணேசதாஸ் (லண்டன்), மனோகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற செல்வமணி மற்றும் சசி (லண்டன்), மல்லிகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் வினுறா, நிலுறா, திருமகள், சேயோன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.06.2013) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மாரீசன்கூடல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*மாரீசன் கூடல், இளவாலை.* (38647) *தகவல்: மகன்மார்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் தொடர்

# இராமநாதன் மகளிர், திருக்குடும்ப கன்னியர் மடம் வெற்றி


யாழ்ப்பாணம், ஜூன் 25
வேம்படி மகளிர் கல்லூரியின் 175 ஆவது நிறைவை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையே நடத்தப்படும் 15 வயதுப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுத் தொடரில் நேற்று வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற ஆட்டங்களில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி மற்றும் திருக்குடும்ப கன்னியர் மட அணி ஆகியன வெற்றி பெற்றுள்ளன.
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் திருக்குடும்பக் கன்னியர் மட அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதியது.
அதில் திருக்குடும்ப கன்னியர் மட அணி 27:7 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.
அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது.
அதில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணி 35:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ற-23)

## அரையிறுதியில் இன்று

175 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை நடத்தும் 15 வயதுப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 2 மணி
யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி எதிர் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை (கறுப்பு) அணி
பி.ப. 3 மணி
இராமநாதன் மகளிர் கல்லூரி அணி எதிர் திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை அணி
இடம்: வேம்படி மகளிர் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடல்(ற-23)

# சென்.ஜோன்ஸ் அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 25
இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத்தும் 15 வயது பிரிவு IIIக்கான கிரிக்கெட் சுற்றுத் தொடரில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி 265 ஓட்டங்களால் அபார வெற்றியீட்டியது.
கடந்த சனிக்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.
முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 48.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 352 ஓட்டங்களைப் பெற்றது. பிளமிங் 97 ஓட்டங்களையும், எமில்ரன் 79 ஓட்டங்களையும், தேவபிரசாத் 54 ஓட்டங்களையும்சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றனர்.
ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பாகப் பந்து வீசிய, சிறிக்குமரன் 8 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 59 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், றெமிஸ்டன் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 43 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.
353 என்ற இமாலய இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி ஆரம்பம் முதலே திணறியது. இலக்குகள் சீரான நேர இடைவெளிகளில் சரிய 40.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 89 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.
தரன்மில் 20 ஓட்டங்களையும், சஞ்சீவன் 13 ஓட்டங்களையும் ஸ்கந்தா சார்பாக அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.
பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 'ஏ' சார்பில், கபில்ராஜ 8 பந்துபரிமாற்றங்கள் பந்து வீசி 12 ஒட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், நிரோசன் 7 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஒட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், எமில்ரன் 4 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி ஓர் ஒட்டத்தைக் கொடுத்து 2 இலக்குகளையும், லியோஜி 5பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 14 ஒட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ற-23)



## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 25
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தில் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்படும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
மன்னார் சென். லூட்சியஸ் 'ஏ' அணி எதிர் யங்கம்பன்ஸ்
பி.ப. 4.30 மணி
மன்னார் சென். லூட்சியஸ் 'பி' எதிர் திருக்குமரன் (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 25
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவறெஸ்ற் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
அச்செழு வளர்மதி வி.க. எதிர் றெட்றேஞ்சர்ஸ் வி.க.
பி.ப. 4.30 மணி
பூமகள் வி.க. எதிர் உடுப்பிட்டி யூத் வி.க. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், ஜூன் 25
மற்றிஸ்கோம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டச் சங்கம் பாடசாலைகளுக்கிடையே நடத்தும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
பி.ப. 3.30 மணி
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி. (ற-23)

## கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
புலோலி நாவலர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக மென்பந்து கிரிக்கெட் சுற்றுத் தொடர் ஒன்றை நடத்தவுள்ளது.
மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் அதற்குரிய விண்ணப்பப் படிவங்களை புலோலி நாவலர் விளையாட்டுக் கழக செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ற-23)



## வடமாகாண பெரு விளையாட்டு வலயங்கள் பெற்ற புள்ளிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25
வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில், கல்வி வலயங்கள் இதுவரை பெற்றுள்ள புள்ளிகளின் விவரங்கள் வருமாறு:
யாழ்ப்பாணம் 436 புள்ளிகள், வலிகாமம் 315 புள்ளிகள், வடமராட்சி 227 புள்ளிகள், கிளிநொச்சி 114 புள்ளிகள், முல்லைத்தீவு 99 புள்ளிகள், மன்னார் 90 புள்ளிகள், வவுனியா வடக்கு 68 புள்ளிகள், தென்மராட்சி 63 புள்ளிகள், வவுனியா தெற்கு 53 புள்ளிகள், தீவகம் 27 புள்ளிகள், துணுக்காய்14 புள்ளிகள்.
(ற-23-86-400-433)



வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்டங்களுக்கு இடையே நடத்தப்பட்ட வலைப்பந்தாட்ட சுற்றுத் தொடரில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட யாழ். மாவட்ட மகளிர் அணி வீராங்கனைகள் மற்றும் பயிற்றுநர். (23)

## இன்றைய துடுப்பாட்ட போட்டிகள்


யாழ்ப்பாணம், ஜூன் 25
இலங்கைப் பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத்தும் பிரிவு IIIக்கான 15 வயதுப் பிரிவு அணிகளுக்களுக்கிடையான கிரிக்கெட் சுற் றுத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி மோதவுள்ளது.
ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஸ்ரான்லிக் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி மோதவுள்ளது. (ற-23)

## சென்.அன்ரனிஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 24
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.
றோயல் விளையாட்டுக் கழகத்துக்கும், மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# தலைக்கு ஒரு கோடி

சம்பியன்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்றிய இந்திய அணி வீரர்களுக்கு தலா ரூ. 1 கோடி பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த இறுதியாட்டத்தில் இந்திய அணி, இங்கிலாந்தை 6ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அதையடுத்து இந்திய அணியில் இடம் பெற்றிருந்த வீரர்கள் அனைவருக்கும் ஜாக்பாட் அடித்துள்ளது.

இது தொடர்பாக பி.சி.சி.ஐ. வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்,

''முதன்முதலாக சம்பியன்ஸ் கிண்ணத்தை இந்திய அணி வென்றுள்ளது. இதனை பாராட்டி இந்திய அணியில் இடம் பெற்றவர்களுக்கு வெகுமதி அளிக்கப்பட உள்ளது.

இதையடுத்து அணி வீரர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 1 கோடி பரிசும், அணியில் இல்லாத மற்ற வீரர்களுக்கு ஆறுதல் பரிசாக ரூ. 30 லட்சமும் வழங்கப்படும்'' எனவும் தெரிவித்துள்ளது. (ற)

# டோனி சாதனை

உலக தரம் வாய்ந்த மூன்று சம்பியன் பட்டங்களை அணிக்குப் பெற்றுக்கொடுத்த முதலாவது தலைவர் என்ற பெருமையை இந்திய அணித் தலைவர் மஹேந்திர சிங் டோனி பெற்றுள்ளார்.

ஐ.சி.சி சம்பியன் கிண்ணக் கிரிக்கெட் தொடரை இந்தியா வெற்றிகொண்டதை அடுத்து அவர் இந்த சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான நேற்றைய இறுதிப் போட்டியில் வெற்றிபெற்று இறுதி ஐ.சி.சி சாம்பியன் மகுடத்தை இந்திய அணி சூடிக் கொண்டது.

ஏற்கனவே உலகக் கிண்ணம், இருபதுக்கு இருபது உலகக் கிண்ணம் என்பவற்றை டோனி தலைமையிலான இந்திய அணி சுவீகரித்துள்ளது. (ற)

## நினைத்ததை சாதித்தோம்

### வெற்றி குறித்து டோனி....

உலக சம்பியன்கள் நாம் என்பதை நிரூபிக்க வேண்டும் என்று சக வீரர்களுக்கு கூறியிருந்தேன் என்று இந்திய அணித் தலைவர் மஹேந்திர சிங் டோனி தெரிவித்துள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து அணியை வெற்றிகொண்ட பின்னர், கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடரில் அதிகளவு ஓட்டங்களைப் பெற்ற ஷிகர் தவானுக்கும் போட்டியின் சிறப்பாட்டக்காரராக தெரிவு செய்யப்பட்ட ரவீந்திர ஜடேஜாவிற்கும் டோனி பாராட்டு தெரிவித்துள்ளார்.

அதேவேளை நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் இயன் பெல்லின் ஆட்டமிழப்பு தொடர்பான நடுவரின் தீர்ப்பு குறித்து இங்கிலாந்து அணித் தலைவர் அலிஸ்டெயார் குக் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இந்த ஆட்டமிழப்பு ஆட்டத்தில் திரும்பு முனையாக அமைந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## அரையிறுதியில் ஸ்பெயின்

பிரேஸிலில் நடைபெறும் கூட்டமைப்பு கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டியில் இத்தாலியுடன் விளையாடும் வாய்ப்பினை ஸ்பெய்ன் பெற்றுக்கொண்டது.

நைஜீரிய அணியை வெற்றிகொண்ட ஸ்பெய்ன் 14 புள்ளிகளுடன் 'பி' குழுவில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறும் அரையிறுதிப் போட்டி தமது அணிக்கு சவாலாக இருக்கும் என ஸ்பெய்ன் அணியின் பயிற்றுவிப்பாளர் வின்செட் டெல் பொஸ்க்யூ கூறியுள்ளார்.(ற)




# முக்கோணத் தொடர் அணியில் சர்வானுக்கு இடமில்லை

இலங்கை, இந்திய, மேற்கிந்தியத் தீவுகள் பங்குகொள்ளும் முக்கோண ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள அணியில் ராம்நரேஷ் சர்வான் சேர்க்கப்படவில்லை.

சிரேஷ்ட வீரரான ராம்நரேஷ் சர்வான், தனக்கு வழங்கப்பட்ட வாய்ப்புக்களில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருக்காத நிலையிலேயே அவர் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஒன்றரை வருடங்கள் மேற்கிந்தியத் தீவுகள் அணியில் சேர்க்கப்படாதிருந்த ராம்நரேஷ் சர்வான், சிம்பாப்வே அணிக்கெதிரான தொடருக்காக மீள அழைக்கப்பட்டிருந்தபோது, அத்தொடரில் சதமொன்றைப் பெற்றிருந்தார். ஆனால், அந்த சதத்தைத் தவிர, அவர் 7 போட்டிகளில் 40 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டார். அதன்காரணமாகவே அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ராம்நரேஷ் சர்வான் தவிர, சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான அணியில் சேர்க்கப்பட்டிருந்த ஜேஸன் ஹோல்டரும் நீக்கப்பட்டுள்ளார். 13 பேர் கொண்ட அணியே அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள அணி விவரம்:

டுவைன் பிராவோ, டினேஷ் ராம்டின், பீனோ பெஸ்ட், டெரன் பிராவோ, ஜோன்சன் சார்ள்ஸ், கிறிஸ் கெயில், சுனில் நரைன், கெரான் பொலார்ட், ரவி ராம்போல், கேமர் ரோச், டெரன் சமி, மார்லன் சாமுவேல்ஸ், டெவோன் ஸ்மித். (ற)

# ஆஸியின் பயற்றுவிப்பாளர் ஆர்தருக்கு பதிலாக லீமன்

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் மிக்கி ஆர்தர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

முக்கியமான ஆஷஷ் தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில் அவர் திடீரெனப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணத்திற்காக இங்கிலாந்து சென்ற ஆஸ்திரேலிய அணி, தற்போது ஆஷஷ் தொடருக்கான தயார்படுத்தல்களில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையிலேயே இந்த அதிரடிப் பதவி விலக்கல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தத் தவறியிருந்த ஆஸ்திரேலிய அணி, ஒழுக்கம் சார்ந்த பிரச்சினைகளையும் சந்தித்து வந்தது.

இந்தியாவில் வைத்து டெஸ்ட் தொடரை 0:4 என்ற கணக்கில் இழந்த ஆஸ்திரேலிய அணி, சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் குழு நிலையோடு வெளியேறியிருந்தது.

அத்தோடு, இந்தியாவில் வைத்து 4 வீரர்கள் ஒழுக்கக் குறைபாடுகள் காரணமாக போட்டித் தடைக்கு உள்ளானதோடு, இங்கிலாந்தில் வைத்து இங்கிலாந்து வீரரை முகத்தில் அறைந்ததன் காரணமாக டேவிட் வோர்னருக்குப் போட்டித்தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து, ஆஷஷ் தொடர் ஆரம்பிக்க 16 நாள்களே உள்ள நிலையில் மிக்கி ஆர்தர் திடீரெனப் பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். 2015ஆம் ஆண்டு வரை அவருக்கான ஒப்பந்தம் காணப்பட்ட போதிலும் அவர் பதவி விலக்கப்பட்டுள்ளார்.

மிக்கி ஆர்தருக்குப் பதிலாக பயிற்சியாளராக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் டெரன் லீமன் உத்தியோகபூர்வமாக இன்று அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விம்பிள்டன் நேற்று ஆரம்பம் கிண்ணம் வெல்வது யார்?





விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நேற்று தொடங்கியது. இதில் 'நடப்பு சம்பியன்' ரோஜர் பெடரர் 8 ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று புதிய சாதனை படைக்கக் காத்திருக்கிறார்.

லண்டனில், கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் நேற்று திங்கட் கிழமை ஆரம்பமாகி ஜுலை 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), ரபேல் நடால் (ஸ்பெயின்), ஜோகோவிச் (செர்பியா), செரினா வில்லியம்ஸ் (அமெரிக்கா), ஷரபோவா (ரஷ்யா) உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் பங்கேற்கின்றனர்.

**பெடரருக்கு சவால்:**

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் கடந்த முறை கிண்ணம் வென்ற உலகின் 3 ஆம் நிலை வீரரான பெடரருக்கு கடின சுற்றாக அமைந்துள்ளது. ஏனெனில் இவரது பிரிவில், இங்கிலாந்தின் அன்டி முர்ரே (2 ஆம் நிலைவீரர் ), நடால் (5 ஆம் நிலைவீரர்) ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இதுவரை 7முறை (2003-07, 09, 12) விம்பிள்டன் கிண்ணத்தை வென்றுள்ள பெடரர், இந்த முறை சவால்களை கடந்து சாதிக்கும் பட்சத்தில், விம்பிள்டனில் 8 முறை கிண்ணம் வென்ற முதல் வீரர் என்ற சாதனை படைக்கலாம். தவிர இவர், ஒரே கிராண்ட்ஸ்லாம் தொடரில் 8 முறை பட்டம் வென்ற இரண்டாவது வீரர் என்ற பெருமையையும் பெறலாம். முன்னதாக, சமீபத்தில் முடிந்த பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ் தொடரில் ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் 8 ஆவது முறையாக கிண்ணம் வென்று சாதனை புரிந்திருந்தார்.

கடந்த வருடம் காயம் காரணமாக பங்கேற்காத ஸ்பெயின் ரபெல் நடால், இந்த முறை நல்ல ஆடுதிறனோடு இருப்பதால் மூன்றாவது முறையாக கிண்ணத்தை வெல்ல முயற்சிக்கலாம். கடந்த முறை இறுதிப் போட்டி வரை முன்னேறிய இங்கிலாந்தின் அன்டி முர்ரேயும் , இந்த வருடம் உள்ளூர் ரசிகர்களின் ஆதரவோடு முதன்முறையாக பட்டம் வெல்ல காத்திருக்கிறார்.

**அதிர்ஷ்டக்கார ஜோகோவிச்**

பெடரர், முர்ரே, நடால் ஆகிய முன்னணி வீரர்கள் ஒரே பிரிவில் இடம் பெற்றிருப்பதால், உலகின் முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சுக்கு சுலப சுற்று வாய்த்துள்ளது.இவர், அரையிறுதியில் ஸ்பெயினின் டேவிட் பெரரை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதனால் சுலபமாக இறுதிக்கு முன்னேறி, இரண்டாவது முறையாக கிண்ணத்தை வெல்லலாம்.

**செரினாவுக்கு வாய்ப்பு:**

'நடப்பு சம்பியன்' என்ற அந்தஸ்துடன் களமிறங்கும் உலகின் முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், 6 ஆவது முறையாக விம்பிள்டன் கிண்ணத்தை வென்று சாதிக்க அதிக வாய்ப்பு உள்ளது. இவருக்கு ரஷ்யாவின் மரியா ஷரபோவா நெருக்கடி கொடுக்கலாம். ஐந்து முறை பட்டம் வென்ற, மற்றொரு அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ், காயம் காரணமாக விலகியுள்ளார். இவர்களைத் தவிர, பெலாரசின் விக்டோரியா அசரன்கா, ஜெர்மனியின் கெர்பர், போலந்தின் அக்னிஸ்கா ரத்வன்ஸ்கா, சீனாவின் லி நா, இத்தாலியின் சாரா இர்ரானி, செக்குடியரசின் பெட்ரா கிவிட்டோவா, டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி ஆகியோரும் கிண்ணம் வெல்லும் கனவில் காத்திருக்கின்றனர்.

**இந்திய நட்சத்திரங்கள்**

இந்தியா சார்பில் இரட்டையர் பிரிவில் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி, ரோகன் போபண்ணா ஆகியோர் வெவ்வேறு இணைகளுடன் களமிறங்குகின்றனர். தகுதிச் சுற்றில் அசத்திய இந்தியாவின் புரவ் ராஜா, திவிஜ் ஷரண் இணை முதன்முறையாக கிராண்ட்ஸ்லாம் தொடரில் பங்கேற்கிறது. பெண்கள் இரட்டையரில் இந்தியாவின் சானியா மிர்சா, அமெரிக்காவின் லீசல் ஹூபருடன் இணைந்து விளையாடுகிறார். (ங)

# 20/20 உலகக் கிண்ணம் இலங்கையிலா?

ICC WORLD TWENTY20 Bangladesh 2014

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் சர்வதேச 20/20உலகக் கிண்ணத் தொடர் அடுத்த வருடம் பங்களாதேஷில் இடம்பெறவாய்ப்பில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு இந்தத் தொடர்பங்களாதேஷில் இடம் பெறாவிட்டால், அந்தப்போட்டிகள் தென்னாபிரிக்கா அல்லது இலங்கையில் இடம்பெற ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

சர்வதேச 20/20உலகக் கிண்ணத் தொடர் அடுத்தவருடம் மார்ச் 16ஆம் திகதி முதல் ஏப்ரல் 6ஆம் திகதி வரை பங்களாதேஷில் இடம்பெறவிருந்தது.

எனினும் பங்களாதேஷில் போட்டிகளை நடத்துவதற்கான இரண்டு மைதானங்களின் பணிகள் இன்னமும் பூர்த்தியாக்கப்படாமல் உள்ளன. இதன் காரணமாகவே பங்களாதேஷ் சர்வதேச 20/20உலகக் கிண்ணத் தொடரை நடத்துவதற்கான வாய்ப்பை இழக்கலாம் என்று கருதப்படுகிறது.

இந்த வாரம் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் வருடாந்தக் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும், அதன்போது பங்களாதேஷிடமிருந்து இந்தத் தொடரை நடத்தும் உரிமை பறிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறு பங்களாதேஷின் உரிமை பறிக்கப்படுமாயின் இலங்கை அல்லது தென்னாபிரிக்காவில் இந்தத் தொடர் இடம்பெற வாய்ப்புக்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவருடம் சர்வதேச 20/20உலகக் கிண்ணத் தொடரை நடத்திய இலங்கை அடுத்த வருடமும் இந்தத் தொடரை தயாராக உள்ளதாகத் தெரிவித்துள்ளது. (ங)

Clerk தேவை

யாழ். நகரிலுள்ள நிறுவனம்
ஒன்றிற்கு 40 வயதிற்கு
உட்பட்ட
Clerk (Female) தேவை.
T.P:-021 790 4941
(38628)

கருத்தரங்குகள்
தேசிய பாடசாலை ஆசிரியர் தெரிவு பரீட்சைக்குரியது.
பிரிவு:I வார நாள்களில் 4.30-6.30
ஆரம்பம்:புதன் 4.30மணி
பிரிவு:II சனி, ஞாயிறு காலை 10.00-4.00
SLEAS பரீட்சைக்கு
பிரிவு I ஞாயிறு 1 மணி
பிரிவு II புதன் 4.30மணி
யாழ்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு. யாழ்.நகர்.
0754154564

SPOKEN ENGLISH
மூன்று மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறி
இளைஞர். யுவதிகள். ஆசிரியர்கள். தொழில்புரிவோர். மாணவர்களுக்கான புதிய பிரிவு ஆரம்பம்
சனிக்கிழமை 29.06.2013
புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்
பிரிவு 01 : 8.00 - 10.00 பிரிவு 02 : 10.00 - 12.00
பிரிவு 03 : 01.00 - 03.00 பிரிவு 04 : 03.00 - 05.00
வாரநாள் பிரிவுகள் : 01.07.2013 (திங்கள்,புதன்)
பிரிவு01: 10.00 – 12.00 பிரிவு 02: 3.00 – 5.00
SAAMSON 279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்
077 621 4567

மேலதிக ஆளணியினர், சர்வதேச தரத்திலான உள்ளக, வெளியக கணினி வலைப்பின்னல், மேம்படுத்தப்பட்ட உள்ளகக் கட்டமைப்பு உங்கள் "திசைகாட்டி" தற்போது நவீனமயப்படுத்தப்பட்டது!

விரைவான தனித்துவமான சேவை
- கனடாவில் படிக்க, உழைக்க
  உணவு, இருப்பிடம், Ticket இலவசம் - சில நாள்களில் பயணம்.
- சைப்பிரசில் படிக்க, உழைக்க
  உணவு, இருப்பிடம், Ticket இலவசம் - இலட்ச ரூபாய் சம்பாதிக்கலாம்
- ஆஸ்திரேலியாவில் படிக்க, உழைக்க IELTS தேவையில்லை

எல்லா நாடுகளுக்கும் விரும்பியவாறு போய்வர சட்ட ஆலோசனை
சனி, ஞாயிறு உட்பட 7 நாள்களும் திறந்திருக்கும்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
(38627)(10.6.7)

மாபெரும் விளையாட்டு விழா-2013
இந்து இளைஞர் மன்றம்-மூளாய்
காலம் : 29, 30 சனி, ஞாயிறு காலை 6.30 மணி
இடம் : இந்து இளைஞர் மன்றம் முன்பாக
தலைவர் : க. துளசிதாசன் (தலைவர்-மூளாய் இ.இ.மன்றம்)
பொதுவான போட்டிகள்
(யாழ் மாவட்டம் மட்டுப்படுத்தப்பட்டது)
* 100 k.m சைக்கிள் ஓட்டம் (30.06.2013)
* மரதன் ஓட்டம் (29.06.2013)
* கழகங்களுக்கு இடையிலான அஞ்சலோட்டம்
* சறுக்கு மரம் ஏறுதல்
மூளாய், பொன்னாலை, தொல்புரம் விளையாட்டு வீரர்களுக்காக
* 1500m, 400m, 100m ஓட்டம்
* குண்டு எறிதல்
* சிறுவர்களுக்கான போட்டிகள்
* கயிறு இழுத்தல், மேலும் பல விளையாட்டு நிகழ்வுகள்.
30.06.2013 ஞாயிறு மாலை 6.00 மணிக்கு பரிசளிப்பு விழா
(C9992)(10.6.3)
(யாவும் நிபந்தனைகளுக்குட்பட்டது)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org